335

அம்பு எய்த பழம்

★

மூல ஆசிரியர் :

ஃபிரடரிக் ஷில்லர்

தமிழில் :

ப. ராமஸ்வாமி

★

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18

உரிமை பதிவு
முதற் பதிப்பு—நவம்பர், 1961

விலை ரூ. 1—75

2081
0113,2

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18

பதிப்புரை

ஜெர்மானியக் கவிஞரும், நாடகாசிரியரும், **தத்துவஞானியுமான** **ஃபிரடரிக் ஷில்லர்** (1759-1805) எழுதிய இந்த நாடகம் அவர் இயற்றியவைகளுக்குள் தலை சிறந்தது. அவர் கடைசியாக எழுதிய நூலும் இதுவே. இது 1804இல் ஜெர்மனியில் வெளியிடப்பட்டது. ஒன்றரை நூற்றாண்டுகளுக்குப் பின், இப்போது, இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

ஷில்லர் உலகப் புகழ்பெற்ற ஜெர்மானியக் கவிஞரான **கதே**யின் நண்பர். **வில்லியம் டெல்**லின் சரிதையை முதலில் ஒரு காவியமாகப் பாடவேண்டும் என்று கதே கருதியிருந்தார். பல ஆண்டுகளாக அவ்வாறு செய்ய முடியாமல் போகவே, தம் நண்பர் அதை நாடகமாக எழுதும் பொருட்டுக் கதே தமக்குத் தெரிந்த தகவல்களை யெல்லாம் கூறி உதவி செய்தார்.

டெல்லின் கதை ஷில்லரின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. நாட்டுப்பற்றும் வீரமும் நிறைந்த அக்கதையை, சுவிட்சர்லந்தில் மட்டும் அல்லாமல் உலகம் எங்கும் பரவும் வகையில் அவர் இயற்றிய இந்நாடகம், படிக்க இனிதாகவும் நடிக்க அற்புதமாகவும் அமைந்துவிட்டது.

சுவிட்சர்லந்து என்பது ஐரோப்பாவில் உள்ள மலைப்பாங்கான ஒரு சிறு நாடு. இக்காலத்தில் அதன் பரப்பு சுமார் 16,000 சதுர மைல். அதன் மக்கள் தொகை அரைக் கோடிக்கும் குறைவானது. மலைகளும், எண்ணிறந்த ஏரிகளும், ஆறுகளும் செறிந்து நாடு முழுதும் இயற்கை எழில் கொழிக்கின்றது.

650 ஆண்டுகளுக்கு முன், வில்லியம் டெல் காலத்தில், அந்நாடு மூன்று மாவட்டங்களைக் கொண்டிருந்தது. ஆஸ்திரியர்களுடைய ஆதிக்கம் அங்கு ஏற்பட்டிருந்தது. நாளுக்கு நாள் கொடுமைகள் பெருகின. நெடிய மலைகளின் நடுவே, சாரல்களிலும், பரப்பு மிக்க ஏரிகளின் கரைகளிலும், பசும் புல் தரைகளிலும் பிறர் தலையீடின்றித் தங்கள் கால்நடைகளுடன் வாழவே சுவிஸ் மக்கள் விரும்பினார்கள். ஆனால் திமிர் பிடித்த ஆஸ்திரியக் கவர்னர்கள் இதற்குத் தடையாக நின்றார்கள். இதனால் அந்த நாட்டில் அடிக்கடி தோன்றும் புயல்களைப் போலவே, அரசியல் வானிலும் புயல் தோன்றலாயிற்று. ஆஸ்திரிய ஆட்சி அழிந்து, கொடுங்கோலர் ஒழிந்தனர்.

இந்த அரசியல் புரட்சி வெற்றி பெற மூலகாரணமாய் நின்றவன் **வில்லியம் டெல்** என்ற வீர வில்லாளி. அவன் அரசியல் மேதை அல்லன்; சொல்மழை பொழியும் செந்நாப் படைத்தவனும் அல்லன். கூட்டங்களுக்கே அவன் போக மாட்டான். ஆனால் அவன் செயலாளன். அவனிடம் புரட்சிப் படை ஏதும் இல்லை என்றாலும், இரும்பு நெஞ்சும், குன்றுகள்போல் உயர்ந்த தோள்களும், பெரிய வில்லும் அவனுக்குத் தலைமைச் சிறப்பைக் கொடுத்தன.

இந் நாடகத்தில் **டெல்**. அவன் மனைவி **ஹெட்விக்**. குழந்தைகள் **வால்டரும். வில்லியமும்**, மாமனார் **வால்டர்** ஆகியவர்களின் கதையும், சுவிஸ் மக்களின் சுதந்திர உணர்ச்சியும் இணைந்து வருகின்றன. **ஸ்டாபாச்சர், மெல்ச்தல், கோன்ராடு** முதலிய வீரர்களும், **ஜெர்ட்ரூட், பெர்தா** போன்ற பெண்மணிகளும் மக்களின் எழுச்சியை உருவாக்குவதில் பங்கு கொள்கிறார்கள். **வெர்னர்** என்ற கிழப் பிரபு தேசபக்தியே உருக் கொண்டதுபோல் விளங்குகிறார். வழி தவறிச் சென்ற தம் மருமகனுக்கு அவர் கூறும் நல்லுரைகள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத் தக்கவை.

வில்லியம் டெல்லின் கதை பல உருவங்களில் உலகில் பல நாடுகளில்பரவியுள்ளது. இந்திய சுதந்திர இயக்கத்துக்கு மிக நேரடியாக உதவியிருக்கக்கூடிய இக்கதையை, இந்திய மக்கள் போற்றிப் பயன்படுத்திக் கொள்ளாமல் போனது என்றும் ஒரு புரியாப்புதிராகவே கருதத் தக்கது.

நாடக பாத்திரங்கள்

ஜெஸ்லர்	—	சுவிஸ், யூரி மாவட்டங்களின் கவர்னர்
வெர்னர் பிரபு	—	பரம்பரைப் பிரபு
ருடென்ஸ்	—	பிரபுவின் மருமகன்
ஸ்டாபாச்சர் ஹன் ஐதல் ரெடிங் ஹான்ஸ் ஜோர்க் உல்ரிச் (கருமான்) ஜோஸ்ட்	}	சுவிஸ் மாவட்ட அதிகாரிகள்
பெரிய வால்டர் (வில்லியம் டெல்லின் மாமனார்) வில்லியம் டெல் ரோஸல்மான் (பாதிரியார்) பீட்டர் — ஆலயத் தர்மகர்த்தா குவோனி — ஆயன் வெர்னி — வேடன் ருவோடி — செம்படவன் ஸ்டையர் — கொம்பு ஊதுபவன்	}	யூரி மாவட்ட வாசிகள்
மெல்க்தல் கோன்ராடு மெய்யர் ஸ்ருத் கிளாஸ் பர்க்ஹார்ட் சேவா	}	அந்தர்வால்டன் மாவட்ட வாசிகள்
பெய்பர்	—	லூஸெர்ன் வாசி
குன்ஸ்	—	
யென்னி	—	செம்படவப் பையன்
ஸெப்பி	—	ஆயன் பையன்
ஜெர்ட்ருட்	—	ஸ்டாபாச்சரின் மனைவி

ஹெட்விக்	—	டெல்லின் மனைவி, வால்டரின் மகள்
பெர்தா	—	பணக்காரி
ஆரம்கதை **மதில்டா** **எலிஸபெத்** **ஹில்டிகார்ட்**	}	குடியானவப் பெண்டிர்
வில்லியம் **வால்டர்**	}	டெல்லின் குமாரர்கள்
பிரிஷ்ஹார்ட் **லிதோல்டு**	}	சிப்பாய்கள்
ருடோல்ப்	—	ஜெஸ்லரின் குதிரைத் தலைவன்
ஜான்	—	ஸ்வேபியா கோமகன்

ஸ்டஸ்ஸி, அரசாங்கத் தூதுவன், சூப்பிரண்டு, மேஸ்திரி, கல்தச்சர், கையாட்கள், தொழிலாளர்கள், முரசடிப்பவன், லாண்டன்பர்க்குடைய சிப்பாய்கள், குடியானவர், பெண்டிர், குழந்தைகள்.

அம்பு எய்த பழம்

அங்கம்—I

காட்சி 1

பாறைகள் அடர்ந்து உயர்ந்த ஏரிகரை. கரை அருகில் ஒரு குடிசை. செம்படவச் சிறுவன் ஒருவன் ஓடத்தைக் கரை நோக்கிச் செலுத்திக் கொண்டிருக்கிறான். ஏரியின் எதிர்க்கரையில் சுவிஸ் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமங்களும், பண்ணை வீடுகளும், பசும் புல்தரைகளும் கதிரொளியில் தென்படுகின்றன. இடதுபுறம் மேகங்கள் அடர்ந்த மலைச் சிகரங்கள். வலது புறம் தொலைவில் பனி மலைகள். திரை உயருமுன்பே மந்தை சாய்ந்து வரும் மாடுகளின் கனைப்பும், மணி ஓசைகளும் கேட்கின்றன. காட்சி ஆரம்பித்த பின்னும் சிறிது நேரம் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

சம்படவச் சிறுவன்: (ஓடத்திலிருந்தபடி பாடுகிறான்.)

ஆயன்: *(மலைமீது இருந்தபடி)* இனிமேல் புல்லேது, புதரேது? கோடையோ கழிந்துவிட்டது! மலைப் பரம்புகளே! புல் நிறைந்த பள்ளத்தாக்குகளே! நாங்களும், எங்கள் ஆடு மாடுகளும் இனி வேறிடம் பார்க்க வேண்டியதுதான்! வசந்த காலம் வந்து, குயில்கள் கூவி, மலர்கள் மலரும் போதுதான் மறுபடி வருவோம்!

ஆல்ப்ஸ் மலை வேடன் எதிர்ப்புறம் பாறைகளின் மீது தோன்றுகிறான்.

உயரே இடிகள் உறுமுகின்றன; பாலம் நடுங்கி ஆடுகின்றது; தலை கிறங்கும் உயரத்தில் நிற்கும் அந்த வேடன் மட்டும் சிறிதும் அஞ்சவில்லை. பயமில்லாமலே அவன் பனிமலைகளின் மேலே பாய்ந்து செல்கிறான்! அந்த உச்சியில் பூக்கள் பூப்பதில்லை. பார்க்கும் பக்கமெல்லாம் பனி, பனி,

பனிக்கட்டிதான்! அவனுக்குக்கீழே மூடுபனி கடல்போல் வளைந்து மூடியிருக்கின்றது. பட்டியும் தொட்டியும், வீடுகளும் குடிசைகளும்—மனிதர் வாழும் பகுதிகளெல்லாம்—அவன் கண்ணில் படுவதில்லை. மேகத் திரைகள் விலகினால்தான் அவன் ந... உலகைச் சிறிது பார்க்க முடியும்.

புயல் ஆரம்பமாகி நிலத்தோற்றம் மாறுகின்றது: மேகங்களின் நிழல் தரைமீது விழுகின்றது. மலைகளின் நடுவிலிருந்து சடசட என்று ஓசை கேட்கின்றது. செம்படவன் ருவோடி தன் குடிசையிலிருந்து வெளியே வருகிறான். பாறைகளின் உச்சியிலிருந்த வேடன் வெர்னி கீழே இறங்கி வருகிறான்; ஆயன் குவோனி தோளில் பா... வாளியை ஏந்திக்கொண்டு வருகிறான்: அ... னுக்குப் பின்னால் அவனுடைய உதவியனான ஸெப்பி எனும் பையனும் வருகிறான்

ருவோடி : *(ஓடத்தைப் பார்த்து)* யென்னி! அடேய்! *சீக்கிரம்! சீக்கிரம்!* வலைகளை வலித்துவிடு! குளிர்ந்த வாடை வீசுகிறது! புயலும் நெருங்கி வருகிறது! நினைக்கு முன்பே அது இங்கேயே வந்துவிடும்!

குவோனி : ருவோடி! பெருமழை பொழியப் போகிறது நிச்சயம்! என் ஆடுகள் வேகமாகப் புல்லைக் கடிக்கின்றன நாயும் தரையை முகர்ந்து முகர்ந்து பார்க்கின்றது!

வெர்னி : ஏரியிலிருந்து மீன்கள் உயரே துள்ளுகின்றன மீன்கொத்திக் குருவிகள் நீருள் மூழ்குகின்றன. நிச்சய புயல் பக்கத்திலே வந்தாகிவிட்டது!

குவோனி : ஸெப்பி, மாடுகள் சிதறிப் போகாமல் கவனி!

ஸெப்பி : நம் சிவலைப் பசு 'செல்வி' வருவதுபோல் தோன்கிறது—அதன் மணி ஓசை கேட்கிறது.

குவோனி : 'செல்வி' வந்தால், எல்லாப் பசுக்களும் வந்த போல்தான்!

ருவோடி : நல்ல நல்ல மணிகள் வாங்கிக் கட்டியிருக்கிறு உன் பசுக்களுக்கு! கணீர் கணீர் என்று கேட்கிறதே!

வெர்னி : பசுக்களும் அழகானவை! ஏன் அப்பா, எல்ல பசுக்களும் உன்னுடையவையா?

குவோனி: நான் அவ்வளவு பணக்காரனில்லே. அவை எ॰ யஜமான் வெர்னர் பிரபுவுடையவை—நான் அவருடை வேலேக்காரன்தான்.

[பென்னி படகைக் கரையில் ஏற்றிவிட் வருகிறான். தூரத்தில் ஒருவன் ஓ வருவதை எல்லோரும் கவனிக்கின்றனர்

வெர்னி: அதோ தொலேவில் வேகமாக ஓடி வருவது யார்?

குவோனி: (கவனித்துப் பார்த்து) எனக்குத்தெரியுமே இவனே அல்ஜெல்லன் நகரத்துக் கோன்ராடு அல்லவா இவன்!

[கோன்ராடு துடிதுடித்துக்கொண்டு அவர்க அருகில் ஓடி வருகிறான்.]

கோன்ராடு: ஓடக்காரரே! ஓடத்தை ஏரியில் இறக்கும் எனக்கு உடனே அக்கரை செல்லவேண்டும். என் உயிருக்கே ஆபத்து! அவசரமாக என்னே ஏற்றிச் செல்ல வேண்டும்!

வெர்னி: என்ன, ஐயா? என்ன விஷயம், சொல்லேன்!

குவோனி: யார் உன்னேத் துரத்திக்கொண்டு வருகிறார்கள்? அதைச் சொல்லு முதலில்!

கோன்ராடு: சீக்கிரம், சீக்கிரம்! இராஜப் பிரதிநிதியின் குதிரை வீரர்கள் வேகமாகத் தொடர்ந்து வருகிறார்கள்! அவர்கள் என்னேப் பிடித்துவிட்டால், அதோடு நான் தொலேந்தேன்!

குவோனி: ஐயோ, உன் சட்டையில் இதென்ன ரத்தம்?

கோன்ராடு: ராஸ்பெர்கிலுள்ள அரசாங்க நீதிபதி—

குவோனி: அவரா உன்னேப் பிடிக்க வருகிறார்?

கோன்ராடு: அவர் இனி என்னேயும் பிடிக்க முடியாது, வேறு யாரையும் பிடிக்க முடியாது! அவரையே நான் முடித்து விட்டேன்!

குவோனி: அட பாவமே, ஆண்டவன் உன்னே மன்னிக்கட் டும்! என்ன வேலே செய்துவிட்டாய்!

கோன்ராடு: என் மனேவியைக் கைப்பிடித்து இழுத்தவனே வேறு என்னதான் செய்வது?

குவோனி: குடும்ப மானத்தையா குலைத்துவிட்டான் பாவி?

கோன்ராடு: குலைக்கவில்லை. அதற்கு முன் காட்டில் விற(வெட்டிக்கொண்டிருந்த என்னிடம் என் மனைவி தலைவி கோலமாக ஓடிவந்து அவனுடைய அடாத செயலைக் கூ(ளுள். கையிலேயிருந்த கோடாரியுடன் நேரே அவனை தேடிப்போனேன்—மண்டையில் ஒரே போடாகப் போட்டு தீர்த்துவிட்டேன்!

வெர்னி: நல்ல வேலை செய்தாய். உன் செயலை எவனு குற்றம் சொல்ல முடியாது!

குவோனி: கொடுங்கோலன்! நல்ல தண்டனை பெற்று விட்டான்! அந்தர்வால்டு மக்கள் அவனுக்கு அளிக்க வேண்டிய வெகுமதி அதுதான்!

கோன்ராடு: ஆனல் என் செயல் வெளிப்பட்டுவிட்டது இப்போது சிப்பாய்கள் என்னைத் துரத்தி வருகிருர்கள் நாம் இவ்வளவு பேசுவதற்குள் இங்கேயே வந்து விடுவார்கள்!

குவோனி: ருவோடி! சீக்கிரம்—இவன் நல்ல மனிதன்— உடனே இவனை அக்கரை சேர்த்துவிடு!

ருவோடி: அதெப்படி முடியும்? புயல் குமுறி வந்துகொண் டிருக்கிறதே—ஏரியில் ஓடம் எப்படிப் போக முடியும்? புய(போன பிறகு பார்ப்போம்—வேறு வழியில்லை!

வெர்னி: அவன் உயிருக்கே ஆபத்தாக இருக்கும் வேளையி(நீ அவனிடம் இரக்கம் காட்ட வேண்டாமா?

குவோனி: அப்பா, அவனுக்குப் பெண்சாதி பிள்ளைகள் இரு(கிருர்கள்!

ருவோடி: எனக்கு மட்டும் பெண்டும் பிள்ளையும் வீட்டி(இல்லையா?

கோன்ராடு: எதிரே கண்ணுக்குத் தெரிகிறது, என் புகலிட(இதோ இருக்கிறது படகு! இருந்தும், இங்கேயே நா(எதிரிகளிடம் சிக்கி மடிய வேண்டுமா?

ருவோடி: அதோ பாருங்கள்! அங்கே வருவது யார்?

குவோனி: அதுவா? வில்லியம் டெல்! பர்க்லன் கிராமத்து வீரன் டெல் வருகிறன்!

[வில்லியம் டெல் வருகிறன்.]

டெல்: என்ன விஷயம்? *(கோன்ராடைப் பார்த்து)* இவன் ஏன் இப்படி நடுங்கி நிற்கிறன்?

குவோனி: இவன் அல்ஜெல்லனைச் சேர்ந்த கோன்ராடு. இங்கு நடக்கும் ஆஸ்திரியாவின் கொடுங்கோல் ஆட்சியில், ஆஸ்திரிய நீதிபதி இவன் மனைவியை மானபங்கப் படுத்த முயன்றார். இவன் கோடரியைக் கொண்டு ஒரே வெட்டில் அவர் தலையைப் பிளந்து வெட்டிப் போட்டு விட்டு வந்திருக்கிறன். ஒரு விநாடியில் இவன் இங்கிருந்து தப்பவேண்டும். புயலுக்கு அஞ்சிக் கோழை ருவோடி 'ஓடம் விடமாட்டேன்' என்கிறன்!

டெல்: கோன்ராடு, நீ மானமுள்ளவன்! கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டுக் கிளம்பு! ஏறு ஓடத்தில்! நான் ஓட்டுகிறேன்! இங்கே தங்கி மனிதர்கள் கையில் அகப்படுவதை விட, ஆண்டவனிடம் அடைக்கலம் புகுவது மேல்!

கோன்ராடு: நீ மனிதனல்ல, அப்பா, தேவதூதன்! என்னைக் காப்பாற்ற ஆண்டவன்தான் இந்த வேளையில் உன்னை அனுப்பியுள்ளான்!

டெல்: சரி கிளம்பு! வருவது வரட்டும்! குவோனி, ஏரியில் எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், என் மனைவிக்கு ஆறுதல் சொல்லு! இந்த நிலைமையில் நான் பேசாமல் வீட்டுக்குப் போக முடியாது!

[கோன்ராடு ஓடத்தில் அமர, டெல் துடுப்புப் பிடித்து ஓடத்தைச் செலுத்துகிறன். ஓடம் ஒரே பாய்ச்சலாகக் கிளம்பிச் செல்கிறது.]

குவோனி: நல்ல ஓடக்காரன்தான் நீ! வேட்டைக்காரன் டெல் ஓட்டுகிற படகைப் பரம்பரைப் பரிசலோட்டி, நீ, ஓட்ட முடியாதாக்கும்!

ருவோடி: என்னைவிட வீரமுள்ளவன்கூட டெல் செய்வதைச் செய்ய முடியாது! இந்தப் பக்கத்தில் டெல்லுக்கு இணையான வீரன் டெல்தான்!

வெர்னி: *(பாறைகளில் ஏறிக்கொண்டு)* குவோனி—ஐயையோ, படகு நீருள் மூழ்கிவிட்டதே! இல்லை, இல்லை, அதோ

மேலே வந்துவிட்டது! அலைகளின் நடுவில் சிறு ஓடம் எப்படித் தத்தளிக்கிறது!

செப்பி: அதோ பட்டாளம் வருகிறது! எத்தனை குதிரைகள்!

குவோனி: ஆமாம்! நல்ல வேளை, தக்க சமயத்தில் டெல் படகை நகர்த்திவிட்டான்!

[குதிரைகள்மீது சிப்பாய்கள் வருகின்றனர்.]

முதல் சிப்பாய்: கொலைகாரனை ஒப்படையுங்கள்! நீங்கள் தான் அவனை இங்கே மறைத்து வைத்திருக்கிறீர்கள்; சந்தேகமில்லை!

இரண்டாவது சிப்பாய்: இந்த வழியாகத்தான் அவன் வந்தான்; எங்களை நீங்கள் ஏமாற்ற முடியாது!

குவோனியும் ருவோடியும்: யாரைத் தேடுகிறீர்கள்?

முதல் சிப்பாய்: *(ஏரியில் செல்லும் ஓடத்தைக் கண்டு)* ஆகா! பறவை தப்பி ஓடிவிட்டதே! எல்லாம் நாசமாய்ப் போச்சு!

வெர்னி: *(பாறை உச்சியிலிருந்து)* அந்த ஓடத்திலிருப்பவன் தான் நீங்கள் தேடுகிற ஆசாமியோ? குதிரைகளை விரட்டுங்கள்! அவனைப் பிடித்துவிடலாம்!

இரண்டாவது சிப்பாய்: சண்டாளப் பயல்! தப்பிவிட்டானே!

முதல் சிப்பாய்: *(குவோனியிடம்)* நீங்களெல்லாம் அவனுக்கு உதவி செய்திருக்கிறீர்கள்! உங்களைப் பழி வாங்காமல் விட மாட்டோம்! *(மற்றச் சிப்பாய்களிடம்)* சிப்பாய்களே, இவர்களுடைய குடிசைகளை அழியுங்கள்! தீ வைத்துக் கொளுத்துங்கள்! ஆடுமாடுகளை அடித்து நொறுக்குங்கள்! எல்லாம் ஒழியட்டும்!

[சிப்பாய்கள் முன்னால் பாய்ந்து செல்கிறார்கள்.]

செப்பி: *(அவர்களைத் தொடர்ந்து ஓடிக்கொண்டே)* ஐயோ, என் அருமை ஆட்டுக் குட்டிகள்—

குவோனி: *(தொடர்ந்து ஓடிக்கொண்டே)* ஓ, என் பசுக்களின் கதி என்ன?

வெர்னி: இது அசுரர்களின் கொடுங்கோல்!

;வோடி : *(கைகளைப் பிசைந்துகொண்டு)* தெய்வமே! இந்த ஏழை நாட்டுக்கு விமோசனம் எப்போது வரும்! இதைக் காப்பாற்ற ஒரு மகாத்மா எப்போது வருவாரோ! ஆண்டவனே!

[அவனும் தொடர்ந்து ஓடுகிருன்.]

காட்சி 2

சுவிஸ் மாவட்டத்திலுள்ள ஸ்டினன் நகரத்தில் ஸ்டாபாச்சர் வீட்டின் முன்புறம் ஓர் எலுமிச்சை மரம். அதன் அருகில் ஸ்டாபாச்சரும் ஓாஸரின் நகரத்துப் பெய்பரும் பேசிக்கொண்டு வருகின்றனர்.

பெய்பர் : நண்பா, மறுபடியும் ஞாபகப்படுத்துகிறேன்! நான் சொன்னதை நினைவுறுத்திக்கொள். ஆஸ்திரியா நம்மிட மிருந்து விசுவாச உறுதிமொழியை எதிர்பார்க்கிறது. அதை நாம் மறுத்துவிட வேண்டும்!

ஸ்டாபாச்சர் : உண்மைதான்! ஒரு முறை ஆஸ்திரியாவுக்கு இடம் கொடுத்துவிட்டால், பிறகு அந்தப் பிடியிலிருந்து தப்பவே முடியாது! நம் தாய்நாட்டுக்கு நிலையான அடிமைத்தளைதான்!....சரி, நீ சற்று இருந்துவிட்டே போ! என் மனைவி வந்துவிடுவாள்! உங்கள் ஊரில் நான் பெரிதும் உபசரிக்கப்பெற்றேன். அதுபோல நீயும் இங்கே தங்கிவிட்டுப் போக வேண்டும்.

பெய்பர் : ரொம்ப நன்றி! நான் வேகமாக ஜெர்ஸாவுக்குச் செல்ல வேண்டும்—இந்த மாவட்ட அதிகாரி எவ்வளவு கொடுமை செய்தாலும் பொறுத்தே போகவேண்டும். விடிவு காலம் விரைவில் வந்துவிடும்!

[அவன் வெளியே போகிருன். ஸ்டாபாச்சர் மரத்தடியிலுள்ள பெஞ்சில் கவலையோடு அமர்கிருன். அவன் மனைவி ஜெர்ட்ருட் வருகிருள். சிறிது நேரம் அமைதியாக நின்று அவனைக் கவனிக்கிருள்.]

ஜெர்ட்ருட் : அத்தான்! என்ன, ஆழ்ந்த யோசனை? பல நாட்களாகவே நானும் கவனித்துவருகின்றேன்—ஏதோ கவலை உங்கள் உள்ளத்தைப் பிடுங்கித் தின்கிறது! இதயத்திலுள்ள சோகத்தை என்னிடம் சொல்லக்

கூடாதா? நான் தங்கள் அருமை மனைவியல்லவா? உங்கள் கவலையில் எனக்கும் பங்கில்லையா?

[ஸ்டாபாச்சர் அவள் பக்கம் கை நீட்டி, அவள் கையைப் பிடித்துக்கொண்டு மௌனமாக் இருக்கிறான்.]

உங்களுக்கு என்ன குறைவு வந்துவிட்டது? ஓயாமல் உழைக்கிறீர்கள். செல்வம் பொங்கி வழிகிறது. வேண்டும் பொருள்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன. ஆடுமாடு களும், அழகான குதிரைகளும் இருக்கின்றன. வீடோ கொட்டாரம்போல விளங்குகின்றது!

ஸ்டாபாச்சர்: வீடு நன்றாய்த்தான் இருக்கிறது; அலங்காரங் களுக்கும் குறைவில்லை; ஆனால் அது நிற்கும் தரைதான் அழல் மண்ணாக ஆடுகின்றது!

ஜெர்ட்ருட்: கொஞ்சம் விளங்கும்படி சொல்லுங்கள்.

ஸ்டாபாச்சர்: அன்றொரு நாள் இப்படித்தான் இந்த மரத்தடி யில் அமர்ந்திருந்தேன். கவர்னரும் அவர் ஆட்களும் இந்தப் பக்கமாக வந்து நம் வீட்டை உற்றுப் பார்த் தார்கள். அவ்வளவுதான், பிடித்தது சனியன்! என்னை அழைத்து, 'இது யார் வீடு?' என்று கேட்டார் கவர்னர். 'வீடு என்னுடையது; தரை ஆஸ்திரிய சக்கரவர்த்தி யுடையது!' என்று சொன்னேன். அதற்கு அவர், 'நாடு முழுதும் நம்முடையது! இவர்கள் இப்படிச் சுதந்திரமாய் மாளிகைகள் கட்டிக்கொண்டு, என் கண்முன்னேயே சுயேச்சையாகத் திரிகிறார்கள்! நன்றாயிருக்கிறது நமது கொற்றம்!' என்று கூறிவிட்டுக் கொடுமையான தோற்றத் துடன் குதிரை ஏறிச் சென்றுவிட்டார். அது முதல் என்ன நேருமோ என்ற ஏக்கம் என்னை விட்டபாடில்லை.

ஜெர்ட்ருட்: ஏக்கமா? உங்களுக்கா? நெடிய மலைகளும் கடல் போன்ற ஏரிகளும் நிறைந்தது நம் நாடு! வையகத்து வள மெல்லாம் கொழிக்கும் இந்த சுவிட்ஜர்லாந்தில் ஆண் மகனுக்கு ஏக்கம் எதற்கு? நான் பெண்பிள்ளைதான். ஆயினும், வீரம் மிகுந்த ஐபெர்க் என் தந்தை என்பதை மறந்துவிடாதீர்கள். பிறந்த வீட்டில் நானும் என் சகோ தரிகளும் இராட்டினங்களில் கம்பளி நூல் திரிக்கும்போது அடிக்கடி நம் நாட்டுப் பெரிய தலைவர்கள் வந்து என்

தந்தையோடு பேசுவதைக் கவனமாய்க் கேட்டிருக்கிறேன். ஆகையால் நான் சொல்வதைப் பெண் பேச்சென்று ஒதுக்காமல் கேளுங்கள். நீங்கள் சீரும் சிறப்புமாக வாழ்வதில் கவர்னருக்கு எரிச்சல். சுவிஸ் மக்களை ஆஸ்திரியச் சக்கரவர்த்திக்கு நிலையான அடிமைகளாக வைக்கவேண்டும் என்பது அவர் ஆசை. நீங்கள் அதற்கு இடையூருக இருக்கிறீர்கள் அல்லவா?

ஸ்டாபாச்சர்: ஆமாம், இதற்காகத்தான் கவர்னர் ஜெஸ்லர் என்னை வெறுக்கிருர்.

ஜெர்ட்ருட்: ஆம், நீங்கள் பரம்பரைச் செல்வத்துடன், சொந்த நாட்டில் சுகமாக வாழ்கிறீர்கள். அவருக்குக் கவர்னர் வேலைதான் மிச்சம்; வேறு சொத்து, சுகமொன்றும் இல்லை. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாவதுபோல், அவர் கண்ணுக்கு எல்லாம் சந்தேகம்தான்! உங்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று அவர் பல நாட்களுக்கு முன்பிருந்தே கருவிக்கொண் டிருக்கிருர்—ஆனல் நீங்களோ நிலைத்து நிற்கிறீர்கள்! அவராகச் சதி செய்து உங்களை வீழ்த்தும்வரை நீங்கள் காத்திருக்க வேண்டுமா? அல்லது, திறமையுடன், முன்கூட்டி எச்சரிக்கையாக ஏற்பாடு செய்து, அதைத் தடுக்க வேண்டுமா? சொல்லுங்கள்!

ஸ்டாபாச்சர்: நாம் என்ன செய்ய வேண்டும் என்கிருய்?

ஜெர்ட்ருட்: என் யோசனையைக் கேளுங்கள். இங்கே நமது சுவிஸ் மாவட்டத்தில் நல்ல மனிதர்கள் எல்லோரும் இந்தக் கவர்னரின் கொடுமையால் எரிச்சலடைந்திருக்கிருர்கள். யூரி மாவட்டத்திலும், அந்தர்வால்டனிலும் மக்கள் இப்படித்தான் கொடுங்கோல் ஆட்சியில் குமுறிக்கொண்டிருக்கிருர்கள் என்பதில் சந்தேகமில்லை. இங்கே ஜெஸ்லரும் அங்கே லாண்டன்பர்கரும் வெறியாட்டம் ஆடுகிருர்கள். அங்கேயிருந்து ஓடங்களில் வருகிற ஒவ்வொருவரும் புதுப்புதுக் கொடுமைகள், அநீதிகள் பற்றியே பேசுகின்றனர். இனிச் சும்மா இருக்கக்கூடாது. உங்களைப் போன்ற சிலர் இரகசியமாகக் கூடி ஆலோசித்துக் கவர்னர்களுடைய கொடுங்கோல் ஆட்சிக்குச் சாவு மணி அடிக்க வேண்டும். ஆண்டவன் உங்களுக்குத்தான் துணை

நிற்பார். யூரியில் உங்களுக்கு மிகவும் வேண்டிய நண்பர் ஒருவருக்கு விளக்கமாகச் செய்தி அனுப்புங்கள். அங்கே நமக்கு வேண்டியவர்கள், நம்பிக்கையானவர்கள், இருக் கிறார்கள் அல்லவா?

ஸ்டாபாச்சர்: எத்தனையோ வீரர்கள் இருக்கிறார்கள், நம்பத் தகுந்த பிரபுக்களும் இருக்கிறார்கள். (எழுந்து நிற்கிறான். கண்ணே! இப்போது என் கருத்தில் பெரும் புயலையே உண்டாக்கி விட்டாய்! பயங்கரமான சிந்தனைகள் என் மனத்தில் அலைமோதுகின்றன. நான் நினைக்கக்கூடக் கூசும் கருத்துக்களை நீ தீரத்துடன் சொல்மாரியாகப் பொழிந்துவிட்டாய். ஆனால் நீ சொல்வதன் விளைவைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தாயா? அமைதியான இந்த மலைப்பிரதேசங்களில் வாள்களும் வேல்களும் மோதினால் என்னவாகும்? ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு பயந்து வாழும் நம் மக்கள் உலகையே அடக்கியாளும் ஆஸ்திரியர்களை எதிர்த்து நிற்க முடியுமா? நம் எதிரிகள் எது சாக்கு என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் தலை தூக்க வேண்டியதுதான் தாமதம், ஆயிரக் கணக்கில் அவர்கள் துருப்புக்களை நம்மீது ஏவி விடுவார் கள்! அந்தக் கொடுமைகளைத் தாங்க முடியுமா? இருக்கிற சுதந்திரங்களும் அத்தோடு ஒழிந்துபோய்விடும்!

ஜெர்ட்ரூட்: நீங்களும் ஆண் பிள்ளைகள்தானே! உங்கள் கைகளிலும் கோடரிகள் இல்லையா? விற்களையும் அம்புகளை யும் நம் மக்கள் எதற்காகச் சுமந்து திரிகிறார்கள்? சும்மா தலை கவிழ்ந்து கிடப்பவர்களுக்குச் சுதந்திரம் கிடைக்குமா உரம் வைக்காத நிலத்தில் பயிர் உண்டாகுமா? தீரர் களையும் வீரர்களையும் தழையாக்கிச் சிவப்பு உதிரத்தை நீராகப் பாய்ச்சிய நிலத்தில்தானே சுதந்திரம் விளையும்?

ஸ்டாபாச்சர்: உண்மைதான். ஆனால் போராட்டம் என்று ஏற்பட்டால், நீ விரும்பி வாழும் இந்த மாளிகைதான் முதலில் தரைமட்டமாகும்!

ஜெர்ட்ரூட்: இந்த அற்ப ஆசைகளைத் துறந்துதான் நான் பேசினேன். நாடு வேண்டுமா, வீடு வேண்டுமா என் நிலை வந்தால், நாட்டுக்காக நானே இந்த வீட்டுக்குத் வைக்க முனைந்துவிடுவேன்!

ஸ்டாபாச்சர் : ஈவிரக்க மில்லாதது யுத்தம்! சிரித்துக்கொண்டு தொட்டிலில் கிடக்கும் குழந்தையைக்கூட அது மிஞ்ச விடாது!

ஜெர்ட்ரூட் : நீங்கள் பின்னே பார்க்காமல், முன்னே பார்க்க வேண்டும்! அதுதான் என் வேண்டுகோள்.

ஸ்டாபாச்சர் : நாங்கள்—ஆண்கள்—களத்திலே மடிகிறேம்; ஆனல், என் அருமை ஜெர்ட்ரூட், உன் கதி என்ன?

ஜெர்ட்ரூட் : பலவீனமான அபலேக்கும் ஒரு வழி இல்லாமலா போகும்? அதோ உயரே தெரியும் பாலத்திலிருந்து நீரில் குதித்தால் போகிறது!

ஸ்டாபாச்சர் : (*பாய்ந்து அவளேக் கட்டித் தழுவிக்கொண்டு*) இந்த வீர உள்ளம் படைத்த நீ பூமியை ஆளும் எந்த அரசனுக்கும் அஞ்சமாட்டாய்! நான் உடனே யூரிக்குப் போகிறேன்; என் நண்பன் வால்டரைப் பார்க்கிறேன். அவன் என் கருத்தறிந்து யோசனே சொல்வதில் வல்லவன். அங்கே செல்வம் மிகுந்த வயோதிகரான வெர்னர் பிரபுவையும் கலந்து பேசுகிறேன். கொடுங் கோலரை நாட்டை விட்டு விரட்டுவதற்கு இருவரும் நல்ல யோசனே சொல்லுவார்கள். நான் வரும் வரையில் நீ இங்கு கவனமாயிரு. வந்த வழிப்போக்கர்களுக்கு வழக்கம் போல் அன்னமளித்து ஆதரித்துக்கொண்டிரு!

[*இருவரும் வீடு நோக்கி நடக்கின்றனர். வில் லியம் டெல் கோன்ராடுடன் வருகிறன்.*]

டெல் : இனி உனக்கு என் உதவி தேவையில்லே. நல்ல இடத்தில் உன்னேக் கொண்டுவந்து சேர்த்துவிட்டேன். இதுதான் ஸ்டாபாச்சர் வீடு! அண்டினவர்களுக்கு அபய மளிப்பதில் அவருக்கு நிகரில்லே. அதோ, அவரே இருக்கிறர்.

[*இருவரும் நெருங்கிச் செல்கின்றனர்.*

காட்சி 3

அல்டார்பில் ஒரு திறந்த வெளி. பின் புறத்தில் அநேகமாகக் கட்டி முடிக்கப்பெறும் தறுவாயிலுள்ள ஒரு கோட்டை: ஆங்காங்கே கழிகளால் சாரங்கள் கட்டி நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஏராளமான ஆட்கள் மேலே ஏறுவதும் கீழே இறங்குவதுமாக இருக்கின்றனர். சுற்றிலும் சந்தடியும் சலசலப்புமாக இருக்கின்றன.

சூப்பிரண்டு: *(கையிலுள்ள கழியை ஓங்கிக் கையாட்களை வேலைக்கு ஏவிக்கொண்டு)* சரி, சரி, ஓய்வெடுத்தது போதும் போங்கள், சீக்கிரம் போங்கள்! சுண்ணும்பு எங்கே? கற்களைத் தூக்கிச் செல்லுங்கள்! கவர்னர் வந்து பார்க்கும் போது, உருப்படியாக வேலை நடந்திருப்பதாய்த் தெரிய வேண்டும்! இந்த ஆட்கள் நத்தை ஊர்வதுபோல் நௌ கிருர்களே! *(சுமந்து செல்பவர்களிடம்)* இப்படித்தான் சுமப்பதோ? ஓடுங்கள் வேகமாய்! திருட்டுப் பசங்கள், வேலைக்கு வரவில்லை—கொள்ளையடிக்க வந்திருக்கிருர்கள்!

முதல் கொற்றன்: எங்களைப் பிடித்து அடைத்துப்போடும் கட்டடத்திற்காக நாங்களே கற்களை இழுத்துச் செல்வது ரொம்பத் துயரமாய்த்தான் இருக்கிறது!

சூப்பிரண்டு: என்ன, முணகவா செய்கிருய்? இந்த நாட்டு மக்களே இப்படித்தான்—சோம்பேறிகள்! மாடுகளை மேய்த்துப் பாலைக் கறந்து குடித்துவிட்டு, மலைகளின் மத்தியிலே நன்ருகப் படுத்துப் புரளுவார்கள்! இது ஒரு சோம்பேறிச் சமூகம்!

ஒரு கிழவன்: *(கீழே சாய்ந்துகொண்டு)*—என்னுல் இனி வேலை செய்ய முடியாது!

சூப்பிரண்டு: *(அவனைப் பிடித்துக் குலுக்கி)* ஏ கிழவா, எழுந்திரு! வேலைக்கு ஓடு!

முதல் கொற்றன்: உங்களுக்கு இரக்கம் என்பதே இல்லையா நரைத்துப் பழுத்துப்போன அந்தக் கிழவரையுமா இப்படி துன்புறுத்தி வேலை வாங்கவேண்டும்?

பலர்: ஆண்டவன்தான் இதைக் கேட்கவேண்டும்!

சூப்பிரண்டு : உங்கள் வேலையை நீங்கள் கவனியுங்கள்! என் கடமையை நான் செய்கிறேன்!

இரண்டாவது கொற்றன் : சூப்பிரண்டு ஐயா, நாங்கள் கட்டுகிற இந்தக் கோட்டைக்கு என்ன பெயர் வைக்கப் போகிறார்கள்?

சூப்பிரண்டு : யூரியைக் காக்கும் சிறைச்சாலை இது—இதைக் கொண்டே உங்களை அடக்கி வைப்போம்!

ஒரு கொற்றன் : யூரிக்குக் காப்பா? *(சிரிக்கிறான்.)*

சூப்பிரண்டு : ஏன் சிரிக்கிறாய்?

இரண்டாவது கொற்றன் : இதைக் கொண்டே யூரி மாவட்டத்தை அடக்கிவைக்கலாம் என்ற நினைப்பா?

முதல் கொற்றன் : வானை அளாவிய எங்கள் மலைகளின் நடுவில் இதைப் போன்ற கோட்டைகள் எறும்புப் புற்றுகளைப் போலவே இருக்கும்!

[சூப்பிரண்டு கோட்டையை நோக்கிச் செல்கிறார்.]

மேஸ்திரி : பாழாய்ப் போன இந்த வேலைக்குக் கல்லுடைத்த என் சம்மட்டியை ஏரியில் எறிய வேண்டியதுதான்! ஆழங்காணாத அடித்தளத்தில் வீசி எறியவேண்டும்!

[டெல்லும் ஸ்டாபாச்சரும் வருகின்றனர்.]

ஸ்டாபாச்சர் : *(சிறைக் கோட்டத்தையும் வேலையாட்களையும் பார்த்து விட்டு)*—இந்தக் கோரக் காட்சியை என் கண்களால் பாராமல், முன்பே நான் இறந்திருந்தால் நலம்!

டெல்: நாம் இங்கே நிற்பது உசிதமில்லை! இன்னும் சிறிது தள்ளிப் போவோம்!

ஸ்டாபாச்சர்: சுதந்திர மணம் கமழும் யூரியில்தானா நான் இருக்கிறேன் என்று சந்தேகமாகிவிட்டது!

மேஸ்திரி: ஐயா! இந்த அரண்களுக்கு அடியிலுள்ள பாதாளச் சிறையை நீங்கள் பார்த்திருந்தால்!—அதற்குள்ளே போனவன் அப்புறம் சூரிய வெளிச்சத்தையே காணமாட்டான்!

ஸ்டாபாச்சர்: அட, கடவுளே!

மேஸ்திரி: இந்தக் கோட்டை கொத்தளங்களும், அணைப்புச் சுவர்களும் என்றுமே அழியாமல் இருக்க வேண்டுமென்று கட்டியிருக்கிறார்கள்.

டெல்: கட்டிய கைகளே உடைத்தெறியவும் முடியும் இவர்கள் கட்டியிருப்பது இது; அதோ தெரியும் மலைகளே கடவுள் கட்டியிருக்கும் கற்கோட்டைகள்!

[*மலைகளைச் சுட்டிக் காட்டுகிறான்.*]

[*முரசு அறையும் ஒலி கேட்கிறது. கவர்னருடைய ஆட்கள் சிலர் நீண்ட கழியில் தொப்பி ஒன்றை மாட்டித் தூக்கி வருகின்றனர். முரசடிப்பவனும் அவனைத் தொடர்ந்து பெண்களும் குழந்தைகளும் ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு வருகின்றனர்.*]

முதல் கொற்றன்: இதென்ன முரசொலி? கவனித்துக் கேளுங்கள்! அதோ!

மேஸ்திரி: விசித்திரமான ஊர்வலம் வருகிறது; கழியிலே தொப்பி ஒன்றும் தொங்குகிறது!

முரசடிப்பவன்: சக்கரவர்த்தியின் பெயரால் அறிவிப்பது என்னவென்றால்—கேளுங்கள்!

ஒரு கையாள்: அமைதி, அமைதி! கேளுங்கள்!

முரசடிப்பவன்: பூரிவாசிகளே! எல்லோரும் இதோ இந்தத் தொப்பியைப் பாருங்கள்! அல்டார்பில், சந்தை அருகில், ஓர் உயர்ந்த கம்பத்தின் உச்சியில் இது வைக்கப்படும். அந்த வழியாகச் செல்லும் அனைவரும், இந்தத் தொப்பியைக் கண்டதும் தங்கள் தொப்பிகளைக் கழற்றிவிட்டு, நின்று, முழங்கால் படிந்து, கவர்னரை நேரில் வணங்குவது போல் இதை வணங்கிவிட்டுச் செல்லவேண்டும். இந்த உத்தரவை மீறி நடப்பவர்களின் உயிர்களும் சொத்துக்களும் பறிபோய்விடும்.

[*மக்கள் உரக்கச் சிரிக்கின்றனர். முரசு முழங்குகின்றது. ஊர்வலம் மேலே செல்கின்றது.*]

முதல் கொற்றன்: கவர்னருடைய புதுக் கற்பனை என்ன அருமையாக உருவாகி யிருக்கிறது!

மேஸ்திரி: தொப்பியையா தொழவேண்டும்! முட்டாள்தனம்! இங்கிருப்பவர்களை ஆட்டுமந்தை என்று எண்ணிவிட்டார்கள் போலிருக்கிறது!

முதல் கொற்றன்: நம்மை அடிபணிய வைப்பதற்கு ஏதோ பெரிய சூழ்ச்சி இது! கண்ணியமான மனிதன் எவனாவது இதற்கு 'ஸலாம்' போடுவானா?

மேஸ்திரி: வா, போய் மற்றவர்களோடு கலந்து யோசிப்போம்!

[அவர்கள் போகிறார்கள்.]

ஸ்டாபாச்சர்: இந்த அநீதி இன்னும் எவ்வளவு காலம் நடக்க வேண்டும்? இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டாமா, டெல்? நீதான் எங்களுக்குத் தலைமை வகித்து வழி காட்ட வேண்டும்!

டெல்: எனக்கு அவ்வளவு சாமர்த்தியம் இல்லையே! ஆலோசனை செய்வதை யெல்லாம் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் ஒரு முடிவுக்கு வந்தவுடனே, என்னை அழையுங்கள்! எந்த வழியானாலும், நான் துணிந்து பாயத் தயார்!...அதிகாரிகள் கோடி சர்ப்பத்தோடு விளையாடுகிறார்கள். மிதிபட்ட பாம்பு கடித்தே தீரும்!

[இருவரும் வெவ்வேறு திசைகளில் பிரிந்து செல்கின்றனர். திடீரென்று கோட்டை அருகில் சாரம் கட்டியிருந்த இடத்திலிருந்து கூச்சல்கள் கேட்கின்றன:]

மேஸ்திரி: (*அந்தப் பக்கமாக ஓடிக்கொண்டு*) என்ன நேர்ந்தது?

முதல் கொற்றன்: முகட்டில் ஓடு பரத்திக்கொண்டிருந்த கொற்றன் உருண்டு விழுந்துவிட்டான்!

பெர்தா: (*வெளியிலிருந்து விரைந்து வந்து*) செத்தா போனான்? ஓடிப்போய்ப் பாருங்கள்! எப்படியாவது அவனைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றினால், தங்கப் பவுன் வேண்டுமானாலும் தருகிறேன்!

மேஸ்திரி: தங்கத்தைக் கொண்டு எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிவிடலாம் என்று நீங்கள் அலைகிறீர்கள்! பெற்றோர்களையும் குழந்தைகளையும், புருஷர்களையும் பெண்டுகளையும்

பிரித்து வைத்து, இப்படிக் கொடுமைப்படுத்தி, நாடெங்கும் ஒரே துக்கமயமாகச் செய்துவிட்டீர்கள்! ஆஸ்திரியாவி லிருந்து நீங்கள் இங்கே காலெடுத்து வைக்கும் முன்னல், ஆனந்தமாய் வாழ்ந்து கொண்டிருந்தோம். எல்லாம் அதோகதியாய்ப் போய்விட்டதே!

பெர்தா: (அங்குத் திரும்பி வந்த சூப்பிரண்டிடம்) ஆள் பிழைத் திருக்கிருனு?

[அவர் 'இல்லை' என்று ஜாடை காட்டுகிருர்.

கட்டிடம் கட்டும்போதே காடேத்தா?

காட்சி 4

வால்டரின் வீடு. வால்டர் ஒருபுறத்தி லிருந்தும், மெல்ச்தல் மறுபுறத்தி லிருந்தும், ஒரே சமயத்தில் வந்து சந்திக்கின்றனர்.

மெல்ச்தல்: வால்டர் ஐயா!

வால்டர்: நீ இப்படி வெளியே வரலாமா? வீட்டைச் சுற்றி ஒற்றர்கள் திரிகிருர்கள். இருக்கிற இடத்திலேயே தங்கி யிரு!

மெல்ச்தல்: அந்தர்வால்டனிலிருந்து செய்தி ஏதும் வர வில்லையா? என் அருமைத் தந்தை என்ன ஆனர்? அவரைப் பற்றிய கவலைதான் என்னை அரித்துத் தின்னு கின்றது. இங்கே நான் கைதி போல அடைபட்டு வீண் பொழுது போக்க விரும்பவில்லை. நான் என்ன கொலை காரனு? என் வயலில் உழுவதற்குக்கூட எனக்குச் சுதந்திரம் இல்லையா? நான் கட்டி உழுதுகொண்டிருந்த இரண்டு மாடுகளையும் பற்றிக் கொண்டுபோக வந்தான் கவர்னரின் கையாள். வந்தவன் வாய்த் துடுக்காகப் பேசி ஞன். வெறும் கையால் அவன் கழுத்தில் ஒரு தட்டுத் தட்டினேன்—ஆசாமி கீழே சாய்ந்துவிட்டான்! இது ஒரு குற்றமா?

வால்டர்: கொஞ்சம் ஆத்திரப்பட்டுவிட்டாய். அவ்வளவு தான். வந்தவன் கவர்னருடைய ஆள். நீ நீதிஸ்தலத்தில் கட்டவேண்டிய ஏதோ அபராதத்தை வசூலிக்க வந்திருந்

தான். எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் நீ சற்றுப் பொறுத்துக் கொண்டுதான் இருந்திருக்க வேண்டும்.

மெல்ச்தல்: மாடுகளை அவிழ்த்துக் கொடுத்துவிட்டு, நானே ஏரை இழுக்க வேண்டும் என்று அவன் சொன்னதில் யாருக்குத்தான் கோபம் வராது, மாமா? நான் என் உணர்வையே இழந்து, வெறி கொண்டுவிட்டேன்!

வால்டர்: சரிதான், அப்பா! வயதான எங்களுக்கே ஆத்திரம் வருகிறதே—இளங்கன்றுகள், உங்களைக் குற்றம் சொல்லி என்ன பயன்!

மெல்ச்தல்: எந்த நேரமும் அப்பாவைப் பற்றிய துடிப்பாகவே இருக்கிறது. என் காரணமாகப் பாவிகள் அவரைப் பிடித்து நசுக்கித் துன்புறுத்துவார்களோ! இந்த நேரத்தில் நான் அவர் பக்கத்தில் இருக்கவேண்டாமா?

வால்டர்: என்ன இருந்தாலும் கொஞ்சம் பொறு—சற்று அமைதியாயிரு. அந்தர்வால்டனிலிருந்து விரைவில் செய்தி வரும். வாயிற் கதவை யாரோ தட்டுகிற ஓசை கேட்கிறது—நீ உள்ளே போ! அபாயம் ஒன்றும் இல்லையானால், உன்னைக் கூப்பிடுகிறேன்.

[மெல்ச்தல் உள்ளே போகிறான்.]

இவனே துக்கத்தினால் துடிக்கிறான்! என் மனசில் தோன்றுகிறவைகளை இவனிடம் எப்படிச் சொல்வது! யார் கதவைத் தட்டுகிறார்கள்! அதிகாரிகளின் கையாட்கள் வீடுதோறும் நுழைந்து பார்க்கிறார்கள். எங்குப் பார்த்தாலும் துரோகிகளும் காட்டிக் கொடுப்பவர்களும்!

[போய்க் கதவைத் திறந்து, உள்ளே வந்த ஸ்டாபாச்சரைக் கண்டு ஆச்சரியப் படுகிறான்.]

யாரிது? ஸ்டாபாச்சர், நீதானா? சரியான விருந்தாளிதான் வந்திருக்கிறாய்! வா, வா, வா! என்ன செய்தி? யூரியில் ஏதேனும் காரியம் ஆகவேண்டி யிருக்கிறதா?

ஸ்டாபாச்சர்: (அவனுடன் கை குலுக்கிவிட்டு) பழங்காலத்தைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன்; பழைய சுவிட்ஜர் லாந்தை நாடி வந்திருக்கிறேன்!

வால்டர்: உன்னைக் கண்டாலே இரண்டும் வந்த மாதி தான்! உட்காரு, ஸ்டாபாச்சர்! உன் மனைவி ஜெர்ட்ரூ நலம்தானா? உன் வீட்டைப் பற்றியும், வந்தவர்களுக் நீங்கள் செய்யும் உபசாரங்களைப் பற்றியும் அடிக்கடி நா கேள்விப்பட்டு மகிழ்கிறேன். வழியில் ஏதாவது விசேஷ உண்டா?

ஸ்டாபாச்சர்: இல்லாமல் என்ன? அல்டார்ப் அருகில் பெரி கற்கோட்டை போல் சிறைச்சாலை கட்டி முடிப்பதை கண்டேன். சிறைச்சாலையா அது? சவச்சாலை!

வால்டர்: நன்ருய்ச் சொன்னுய்—சுதந்திரத்தின் சவச்சாலை

ஸ்டாபாச்சர்: நண்பரே! நான் உம்மிடம் மனம் விட்டு பேசவே வந்திருக்கிறேன். செய்தி நிரம்ப இருக்கிறது காரியமாகவே நான் வந்துள்ளேன். பலவிதக் கவலைக ஒன்றின்மேல் ஒன்ருக என்னை அழுத்திக் கொண்டிரு கின்றன. எல்லாவற்றையும் கவனித்தால், இனி இந் ஆஸ்திரிய ஆட்சியை ஒரு கணம்கூடப் பொறுக்க முடியா என்றே தோன்றுகிறது. துக்கத்திற்கும் அளவு உண்டு கொடுமைக்கும் எல்லை உண்டு! நாம் பட்டதெல்லா போதும்; இனித் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும்!

வால்டர்: இனிப் பொறுக்க முடியாது என்று நீ மட்டும சொல்லுகிருய்? பொறுமைக்கு உறைவிடமாக இங்கே யுள்ள வெர்னர் பிரபுவே வாய்விட்டுச் சொல்லியாயிற்று அவருடைய வயதிலும், அநுபவத்திலும் இவ்வள கொடுமைகளைக் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லையாம்

ஸ்டாபாச்சர்: அந்தர்வால்டனிலும் வெறி ஆட்சிதான் நட கிறது! ஆஸ்திரிய நீதிபதி அங்குள்ள நண்பன் கோன்ராடின் மனைவியை மானபங்கப்படுத்த ஆரம்பித்தாராம். கோன்ரா விஷயம் தெரிந்ததும், அவரைப் பரலோகம் அனுப் விட்டான்!

வால்டர்: எல்லாம் கடவுளின் நீதி! கோன்ராடா நீதிபதியை கொன்றுவிட்டான்! அவன் தப்பித்துக் கொண்டானு? தச் மறைவிடம் கிடைத்ததா?

ஸ்டாபாச்சர்: ஏரியைத் தாண்டி டெல் அவனை என்னிட கொண்டுவந்து ஒப்படைத்தான். அவன் ஸ்டீனனி

என்னுடன் இருக்கிறான். ஆனால் மற்றொரு செய்தி கேட்கவே பயங்கரமாயிருக்கிறது! மெல்ச்தலே உனக்குத் தெரிந்திருக்கும்—வயலில் அவன் யாரோ அதிகாரியைத் தாக்கிவிட்டு ஓடிவிட்டானாம்! அதற்காக அவன் தகப்பனாரைக் கவர்னர் பிடித்துவரச் சொன்னாராம். அவர் வந்ததும், கவர்னர்—

வால்டர்: (எழுந்திருந்து, அவனைக் கையைப் பிடித்து ஒதுக்கமாக அழைத்துக் கொண்டு)—ஓ, அதுவா! மெல்லப் பேசு!

ஸ்டாபாச்சர்: (உணர்ச்சியோடு)—'உன் மகன் தப்பி ஓடி விட்டான் என்றாலும், நீ என்னிடம் அகப்பட்டிருக்கிறாய். மகன் எங்கே இருக்கிறான்? உள்ளதைச் சொன்னால்தான் விடுவேன்!' என்றாராம். தந்தை ஹென்றி உண்மையாகத் தமக்கு ஒன்றும் தெரியாது என்றதும், கவர்னர் சிப்பாய்களைக் கொண்டு அவர் கண்கள் இரண்டையும் அவித்து விட்டாராம்!

மெல்ச்தல்: (உள்ளேயிருந்து ஓடிவந்து)—'கண்களை அவித்து விட்டார்!' என்று சொன்னாய்?

ஸ்டாபாச்சர்: (வியப்புடன் வால்டரிடம்)—இந்த இளைஞன் யார்?

மெல்ச்தல்: (அவனைப் பற்றிக்கொண்டு, துடிப்புடன்)—ஐயோ, எனக்குப் பதில் சொல்லு! அவர் கண்களையா?

வால்டர்: ஓ, இவனை எப்படிச் சமாதானம் செய்யப் போகிறேன்!

ஸ்டாபாச்சர்: இவன் யார், தெரியவில்லையே!

[வால்டர் ஜாடை காட்டுகிறான்.]

அவர் மகனா இவன்? அட, ஆண்டவனே!

மெல்ச்தல்: நான் இவ்வளவு தூரத்திலிருக்கும்போது, அவர் தனியே—என்ன, இரண்டு கண்களுமா போய்விட்டன?

வால்டர்: உள்ளத்தைத் திடப்படுத்திக்கொள், அப்பா! நல்ல ஆண்மகனுக்கு மன உறுதி வேண்டும்!

மெல்ச்தல்: பார்வை முழுவதுமே போய்விட்டதா? நிச்சயமாய்த் தெரியுமா?

ஸ்டாபாச்சர் : இரும்பைக் காயவைத்து இரண்டு கண்களையு அவித்துவிட்டார்கள்! சொத்துக்களையும் பறிமுதல் செய் விட்டார்கள்! கிழவர் கையிலிருந்த கம்புதான் மிச்சம்!

வால்டர் : மேலும் மேலும் அவனுக்குத் துக்கமுண்டாக வேண்டாம்!

மெல்ச்தல் : (*கைகளால் தன் கண்களைத் தேய்த்துப் பார்த்து சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு*) எனக்கு இரண் கண்களும் அப்படியே இருக்கின்றனவே! இருந்து என் பயன்? அவருக்கு ஒன்றையாவது கொடுக்க முடியுமா ஆண்டவன் அளித்த அருட் பார்வை அவருக்குப் போ விட்டது—இனி மீளாது! ஒரே இருள்தான்! கைய ஊன்றிய கம்புடன், என் காரணமாக என் தந்தை பிச்சையெடுக்கிறார்! நான் இங்கே ஒளிந்து வாழ்கிறேன் இனி இங்கு ஒரு கணமும் தங்க மாட்டேன்! நேரா சென்று அந்தக் கவர்னரின் குருதியில் நான் குளித்த தான் என் தாபம் தணியும்! (*போகிறான்.*)

வால்டர் : அப்பா, என் பேச்சைத் தட்டாதே! சற்று பொறுத்திரு! ஸார்னனில் காவல் மிகுந்த மாளிகை குள்ளே குந்தியிருக்கும் கவர்னரை நீ என்ன செ முடியும்?

மெல்ச்தல் : நான் போய்ச் சொல்லி மற்ற இளைஞர்களை சேர்த்துக்கொள்வேன். சுதந்திரமில்லாத நாட்டை வி சுடுகாடே மேல்! கண்களை விழித்துப் பார்க்கக்கூட உரிமை யில்லாமற் செய்பவர்களை விரட்டி ஒழித்தே தீரவேண்டும்!

ஸ்டாபாச்சர் : அந்தக் காலம் வந்துவிட்டது! நீ ஒருவ மட்டுமல்ல — ஆயிரக்கணக்கான வாலிபர்கள் இ கிறார்கள்!

வால்டர் : நம்முடைய மூன்று மாவட்டங்களும், நாம மூவ பேர்களும் எண்ணுவதுபோல், ஒருமனப்பட்டு உ கொண்டால், ஏதாவது செய்து வெற்றி காணமுடியும்.

ஸ்டாபாச்சர் : இப்போதும் யூரிக்கு அந்தர்வால்டன் உ செய்யவில்லையா? சுவிட்ஸரும் பழம்பெருமை வாய்ந் தானே! நம்மைக் கைவிட்டுவிடுமா, என்ன?

மல்ச்தல் : அந்தர்வால்டனுக்கு நான் போகிறேன். அங்கே ஏராளமான வாலிபர்களை எனக்குத் தெரியும்!

டாபார்ச்சர் : சுவிஸ் வட்டத்தை நான் பார்த்துக் கொள் கிறேன். ஒவ்வொரு வட்டத்திலிருந்தும் நம்பிக்கையான பத்துப் பேர்களை அழைத்து வரவேண்டும். யூரிக்கும் அந்தர்வால்டனுக்கும் நடுவிலுள்ள ரூட்லி வனத்தில் கூடி ஒரு முடிவு செய்வோம்! வால்டர் சம்மதித்தால் எல்லாம் முடிந்த மாதிரிதான்!

ல்டர் : மெல்ச்தல் அந்தர்வால்டனுக்குள் போக முடியுமா? அதிகாரிகள் அவனைப் பிடிக்காமல் விட்டு வைப்பார்களா?

ல்ச்தல் : ஆண்டவன் அருளால், என்னை நானே கவனித்துக்கொள்வேன், கவலை வேண்டாம்!

டாபார்ச்சர் : அங்கே துரோகிகள் இல்லை!

ல்டர் : ரூட்லி ஒதுக்கமான இடம்தான். அங்கே அந்தரங்க மாகக் கூடிப் பேசலாம்.

டாபார்ச்சர் : இருவரும் கை கொடுங்கள்! *(அவர்கள் கைகளைப் பிடித்துப் பலமாகக் குலுக்கிவிட்டு)* நாம் மூவரும் மனப்பூர்வ மாகச் சேர்ந்திருப்பதுபோல் நம் தாயகத்தின் மூன்று மாவட்டங்களும் உண்மையாக ஒன்று சேரவேண்டும்! வீர சுதந்திரம் நிச்சயம்தான்! வென்றால் சேர்ந்து வெல்வோம்; வீழ்ந்தால் சேர்ந்து வீழ்வோம்!

ல்ச்தல் : என்ன சுதந்திரம் வந்தாலும், என் தந்தை தம் கண்களால் கண்டு களிக்க முடியாமற் போய்விட்டதே!

அங்கம்—II

காட்சி 1

வெர்னர் பிரபுவின் மாளிகையில் அலங்காரமான பெரிய மண்டபம். நரைத்த தலையும், நெடிய உருவமும், கம்பீரத் தோற்றமும் கொண்ட பிரபு அழகிய வேலைப்பாடுள்ள கைத்தடியின்மீது சாய்ந்து கொண்டு நிற்கிறார். குவோனியும் வேறு வேலைக்காரர்கள் அறுவரும் அறுவடைக்குரிய அரிவாள் முதலிய கருவிகளுடன் சூழ்ந்து நிற்கின்றனர். உயர்ந்த ஆடைகள் அணிந்துகொண்டு ருடென்ஸ் வருகிருன்.

ருடென்ஸ் : **வணக்கம், மாமா! உங்கள் அபிப்பிராயம் என்ன**

வெர்னர் : **வா அப்பா! முதலில், என் வீட்டு வழக்கப்ப நானும் குடியானவர்களும் சேர்ந்து ஒரே கிண்ணத்தில் ம அருந்தி முடியட்டும்! ஒவ்வொரு நாளும் காலையில் எங்க முதல் வேலை இது!**

[அவர் ஒரு கிண்ணத்திலுள்ள மதுை கொஞ்சம் குடித்துவிட்டு அடுத்தவனி கொடுக்க, அப்படியே ஒவ்வொருவ வாங்கிக் குடிக்கிருன். கடைசியா குவோனி கிண்ணத்தை ருடென்ஸி கொடுத்துக் குடிக்கச் சொல்லுகிருன்.]

வெர்னர் : எனக்காக உழைப்பவர்களோடு சேர்ந்து இப்ப கூடி மது அருந்துவது தொன்றுதொட்டு வழக்கம விட்டது. எனக்கும் வயதாகிறது. மெல்ல மெல்ல நடந் வாழ்க்கைப்பாதையின் கடைசிக் கட்டத்திற்கு வந்து வி டேன். என் காலமும் முடியப் போகிறது. இனி எ பெயர் மட்டுமே மிஞ்சியிருக்கும்!

குவோனி : (ருடென்ஸிடம்) நீங்களும் ஒரு வாய் மது அரு துங்கள்! ஒரே கோப்பை—ஒரே உள்ளம்! அதுதான் இ குப் பொருள்!

வெர்னர் : நீங்கள் எல்லோரும் என் மக்கள்! போய் வய ளில் வேலை பார்த்துவிட்டு, அந்தி மாலையில் வந் சேருங்கள்!

[குடியானவர்கள் போகிருர்கள்.]

வெர்னர் : *(நாற்காலியில் அமர்ந்து)* என்ன ருடென்ஸ்! ஆடை அலங்காரங்களோடு வெளியே கிளம்பிவிட்டாய் போலிருக்கிறதே! அல்டார்புக்கா போகிருய்?

ருடென்ஸ் : ஆமாம், மாமா! அதிக நேரமாகிவிட்டது!

வெர்னர் : வாலிப வயது! இந்தக் கிழட்டு மாமாவிடம் இருந்து பேசக்கூட நேரமில்லை உனக்கு!

ருடென்ஸ் : உங்களுக்கும் நான் அவசியமில்லாமற் போய் விட்டது! இங்கே ஒரு மாற்றுனைப் போலத்தானே நானும் இருக்கிறேன்!

வெர்னர் : *(அவனை நிதானமாகப் பார்த்து)* உண்மைதான், முற்றிலும் உண்மைதான்! நீ அவ்வளவுக்கு மாறியிருக்கிருய்! நேரத்திற்கு நேரம் பட்டுச்சட்டைதான்! தொப்பியிலே மயில் இறகு! குடியானவர்களைக் கண்டால் உனக்கு இழிவாகப் படுகிறது. அவர்கள் உள்ளன்போடு கும்பிட்டாலும், நீ பதிலுக்கு வணங்குவதில்லை!

ருடென்ஸ் : அவர்களுக்கு அளிக்கவேண்டிய மரியாதையைத் தான் நான் அளிக்கிறேன். அவர்கள் உரிமை வேறு கொண்டாடுவதையே நான் எதிர்க்கிறேன்.

வெர்னர் : நாடு முழுவதும் ஆஸ்திரிய அரசரின் கொடுமைகள் தாங்காமல் கொந்தளிக்கிறது. மக்களுடைய துக்கத்திலும் துயரத்திலும் நீ மட்டும் பங்கு கொள்வதில்லை. அது மட்டுமல்ல—நீ அந்த அந்நியர்களுடனே கூடிக் குலாவுகின்ருய். அடிமையான இந்த சுவிஸ் நாட்டின் இழி நிலையை எண்ணிப் பாராமல், எதிரிகள் அளிக்கும் கானல் நீர் போன்ற இன்பங்களில் மோகம் கொண்டிருக்கிருய். உன்னைப் பெற்ற நாடு புலம்பித் தவிக்கிறது; நீயோ கொடுங்கோலரின் அடிவருடியாக இருக்கிருய்!

ருடென்ஸ் : நாடு தவிப்பதன் காரணம் என்ன, மாமா? நாம் ஒரு வார்த்தை சொன்னல் போதும்—உடனே எல்லாம் மாறிவிடும்! ஆஸ்திரிய அரசரை நாம் ஏற்றுக்கொண்டு, விசுவாசமாக இருப்பதாக உறுதி சொன்னல் போதுமே! தலைவர்கள் மக்களைத் தவருன வழியில் இழுத்துச் செல்கிருர்கள்; தங்கள் சுயநலத்திற்காக மக்களைப் பலியிடுகிருர்கள்! நம்மைச் சுற்றி எல்லா நாடுகளும் ஆஸ்திரிய

வல்லரசை அங்கீகரித்துள்ளன. நமக்கு மட்டும் என்ன வாம்?

வெர்னர்: இதை என் காதால் கேட்க வேண்டுமா, அதுவும் உன் வாயிலிருந்து?

ருடென்ஸ்: உங்களையே கேட்கிறேன்—இங்கே பெரிய பண்ணையாராக மாளிகையில் குந்தியிருந்து, கல்வியறிவில்லாத பாமரரான குடியானவர்கள் புடைசூழ, அவர்கள், 'யஜமான், யஜமான்' என்று புகழ்பாடுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதைவிட, வீரமும் தீரமும் மிக்க ஆஸ்திரிய அரசரை அண்டியிருந்து, பட்டங்களும் பதவிகளும் பெற்று, இன்புறுவது மேலல்லவா?

வெர்னர்: ருடென்ஸ்! இப்பொழுது நன்கு தெரிந்து கொண்டேன். அந்நியர் மாயையில் நீ மயங்கிவிட்டாய். வெறும் புகழ்ச்சியில் திளைத்து, உன் உள்ளமும் விஷமாகி விட்டது!

ருடென்ஸ்: கும்பிட்டுவாழும் குடியானவர்களுக்குத் தலைவர்களாகி, அவர்களுடைய நாடோடிப் பாடல்களையும் ஆடு மாடுகளின் மணி ஓசையையுமே கேட்டு இன்புற எனக்கு மனமில்லை. என் வாளும் கேடயமும் துருப்பிடித்துத் தொங்குகின்றன. அரசினரோடு சேர்ந்தால், நாம் நம் மலைகளையும் மடுக்களையும் தாண்டி, நாடுகள் நகரங்களையெல்லாம் சுற்றிவரலாம். பல நாடுகளில், பல போர்க்களங்களில் புகழ்மாலை சூடலாம்!

வெர்னர்: வழிதவறிவிட்ட வாலிபனே, கேள்! அதிகாரிகளின் ஆடம்பரங்களில் தேட்டம் கொண்டு நிற்கிறாய். அதனால் உன்னைப் பெற்றெடுத்த பொன்னாட்டையே நிந்திக்க முந்திவிட்டாய்! உன் முன்னோர்களையே பழிக்க முன்வந்துவிட்டாய்! நீ இழித்துரைக்கும் இந்தப் பாமர ஜனங்களே உலகில் இதுவரை எவர்க்கும் அடிமைப்படாமல் தலைநிமிர்ந்து வாழும் வீரசுதந்திர மக்கள்! இவர்களுடைய நாட்டுப் பாடல்களை இப்போது வெறுத்துப் பேசுகிறாய். ஆனால், வெளி நாடுகளில் சுற்றும்போது, இவைகளை நீ எண்ணிப் பார்த்தால், உள்ளம் உருகுவாய்! வளம் பொழியும் நம் நாட்டில், சுதந்திரமாக இளவரசன் போல வாழ்

வதைவிட்டு, அடிமை வாழ்வில் ஆசை கொள்ளாதே! உற்ரூர் உறவினர் எல்லோரையும் ஒதுக்கிவிட்டு நீ மட்டும் தனிப் பாதையில் செல்வது நலமல்ல. அதோ சுவரில் தொங்குகின்றன, என் உடைவாளும் கேடயமும்! எத்தனை சண்டைகளில் இவை எனக்கு வெற்றி வாங்கித் தந்துள்ளன, தெரியுமா? இவை ஆண்டவன் எனக்கு அருளியவை! என் வாழ்க்கையின் இறுதியில், இவைகளை ஆஸ்திரிய மன்னரின் திருவடிகளில் வைத்து, அவர் அளிக்கும் பரிசுகளாக இவைகளைத் திரும்ப ஏற்றுக்கொள்ளவா நீ விரும்புகிருய்?

டென்ஸ்: எங்கணும் ஆஸ்திரிய ஆட்சி! சுண்டைக்காய் போன்ற இந்தச் சுவிஸ் நாடு மட்டும் தனித்திருக்க முடியுமா? இந்த நாடு முழுதுமே அவர்களுடைய தாகிவிட்டது. நீதித்தலங்கள், பள்ளிகள், ஆறுகள், நிலங்கள், சாலைகள், சோலைகள் யாவும் அவர்களுடையவை. வல்லமை மிகுந்த வல்லரசை எதிர்ப்பது பார்வையை யிழந்து பாறையில் முட்டுவது போல்தான்! மன்னர்க்கு விசுவாசமா யிருப்பதே பிற்காலத்தில் நலமளிக்கும்!

வர்னர்: அவ்வளவு மேதாவியாகிவிட்டாயா நீ! உன் முன்ஞேர்களைவிட நீ அறிவிலே மேம்பட்டு விட்டாய், சந்தேகமில்லை! சுதந்திரத்திற்காக அவர்கள் வீடுவாசல்களையும், பெறுதற்கரிய பொருள்களையும், உயிர்களையும் பணயம் வைத்துப் போராடியது வீண்வேலைதான், அப்பா, வீண் வேலைதான்! ஆஸ்திரியக் கொடுங்கோலால் மக்கள் படும் அவதிகள் உன் கண்ணில் படவில்லை. லூஸர்னுக்குப் போய்ப் பார்! ஆடுகளையும் மாடுகளையும் அடித்துக் கொண்டு போகிருர்கள். இனி வீட்டுக் கதவுகளையும் நிலைகளையும் பிடுங்க வருவார்கள்! அவர்களுடைய யுத்தங்களுக்காக நாம் உதிரம் சிந்தவேண்டும் என்கிருய். இரத்தம் சிந்தவேண்டியது அவசியம்தான் என்ருல், நம் சுதந்திரத்திற்காகச் சிந்துவதே மேல், அதிக லாபமும்கூட!

டென்ஸ்: ஆடு மாடுகள் மேய்க்கும் நம் மக்கள் வல்லரசை எதிர்த்து ஒரு கணநேரம் நிற்க முடியுமா?

வர்னர்: நம் மக்களை அவ்வளவு கேவலமாக எண்ணுதே! சுற்றியுள்ள நாடுகள் எல்லாம் அடிமைப்பட்டபோதிலும்,

இவர்கள் வணங்காமுடிகளாக இருந்தனர். வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டம் இவர்கள்! சத்தியம் தவருதவர்கள்! உழைப்பாளிகள்! இவர்கள் ஊதும் குழலைப்போல் இவர்கள் வாழ்க்கையும் சாந்தமானது. ஆனால் தர்மத்தின் பெயரால், சுதந்திரத்தின் பெயரால், கொதித்து எழுந்துவிட்டால், இவர்களை யாரும் அடக்க முடியாது, அடக்கவே முடியாது! எத்தனையோ போர்களில் நான் இவர்களுக்குத் தலைமை தாங்கி நேரில் கண்ட உண்மை இது!...சரி, நீ இருக்கிற வேகத்தில் உன்னிடம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. நீ நாளை ஒருநாள் மட்டிலும் இங்கே தங்கியிரு. மறுநாள் போய்க் கொள்ளலாம். நண்பர்களுக்காக இது ஒன்றை மட்டிலும் மறுக்காமல் செய்!

[அவனுடைய கையைப் பிடிக்கிருர்.]

ருடென்ஸ்: இல்லை, நான் வாக்குக் கொடுத்துவிட்டேன் மன்னிக்கவும்!

வெர்னர்: என்னப்பா வாக்கு? ஒரு பெண்பிள்ளை காதலுக்காகவா இவ்வளவு பிடிவாதம்! எல்லாம் எனக்குத் தெரியும் பெர்தாவின் காதல் வலையில் விழுந்துவிட்டாய். அதிகாரிகள் அவளைக் காட்டி உன்னைப் பிடித்திருக்கிருர்கள்.

[ருடென்ஸ் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொள்கிருன்.]

ருடென்ஸ்: போதும், மாமா! கேட்க வேண்டியது அத்தனையும் நான் கேட்டாயிற்று! எல்லாம் பழைய பல்லவிகள் தானே நான் போய்வருகிறேன்!

வெர்னர்: என்றால் இவனைப் பிடித்து வைக்க முடியாது காப்பாற்ற முடியாது. விட்டில் விளக்கிலே வீழ்ந்துதான் தீரும்! நம் வாலிபர்களுக்கு இப்படி விசித்திரமான ஒரு மயக்கம் அல்லவா வந்திருக்கிறது! என் தலைமுறை முடிந்துவிட்டது. நான் நெருங்கிப் பழகிய அன்பர்களும் தீரர்களும் இப்போதில்லை—எல்லோரும் கல்லறைகளில் அடங்கிவிட்டார்கள். இப்போது புதுத் தலைமுறை புது மாதிரி முளைத்திருக்கிறது!

காட்சி 2

குன்றுகள் சூழ்ந்த ஒரு புல் வெளி. பாறைகளில் உயரேயிருந்து நூலேணிகள் தொங்குகின்றன ; அவற்றின் வழியாகக் குடியானவர்கள் பலர் இறங்கி வந்து மைதானத்தில் கூடுகின்றனர். பின்னணியில் ஏரியும், அதற்கு மேலே ஆகாயத்தில் சில சமயங்களில் ஒரு வானவில்லும் தெரிகின்றன. அப்பால் பனி படர்ந்த குன்றுகள் காட்சியை மறைத்து ஓங்கி நிற்கின்றன. ஏரியும் பனிப்பாறைக் கட்டிகளும் நிலவின் ஒளியில் பளபளவென்று ஒளிர்கின்றன.

மெல்ச்தல் : (மேடையில் தோன்று முன்பு) என்னைத் தொடர்ந்து வாருங்கள்! இதுதான் சரியான வழி! ரூட்லி வந்து சேர்ந்து விட்டோம்!

சுதருத் : இங்கே யாரையும் காணவில்லையே!

சேவா : ஆளரவமே யில்லை!

மெய்யர் : யாரும் வரவில்லை, அந்தர்வால்டுக்காரர்களாகிய நாமே முதலில் வந்திருக்கிறோம்.

மெல்ச்தல் : நேரம் என்ன இருக்கும் ?

கோன்ராடு : காவற்கூடத்தில் மணி இரண்டு அடிக்கிறான்!

மெல்ச்தல் : யாராவது போய்க் கொஞ்சம் கட்டைகள் கொண்டு வந்து கொளுத்துங்கள், குளிர்காய உதவியாயிருக்கும்!

[இரண்டு குடியானவர்கள் போகின்றனர்.]

சேவா : இன்பகரமான இரவு! அமைதியான ஏரி நீர் பளிங்கு போல் பிரகாசிக்கின்றது.

பர்க்ஹார்ட் : நிலவில் எல்லோருக்கும் பாதை நன்றாகத் தெரியும்.

சுதருத் : (ஏரியைக் காட்டி) அதோ பாருங்கள்! உங்களுக்குத் தெரிகிறதா ?

மெய்யர் : ஆமாம்! வானவில்! நடுநிசியில் இப்படி வானவில் தோன்றுமா ?

மெல்ச்தல்: சந்திர ஒளி பிரதிபலிப்பதால் அது தோன்று கிறது.

கிளாஸ்: இது ஒரு நல்ல சகுனம்தான்! இப்படித் தோன்று வதே அபூர்வம்.

கோன்ராடு: அதோ ஒரு படகு மெதுவாக வருகிறது!

மெல்ச்தல்: ஸ்டாபாச்சர் வருகிருன். அந்த வீரன் நண்பர் களைக் காக்க வைப்பதில்லை.

[கோன்ராடுடன் அவன் ஏரிகரைக்குப் போகிருன்.]

மெய்யர்: யூரி மாவட்ட ஆட்கள்தான் கடைசியாக வருவார் கள் போலிருக்கிறது.

பர்க்ஹார்ட்: மலைகளின் வழியாக அவர்கள் சுற்றி வரவேண்டு மல்லவா? நேர் பாதையில் வந்தால், எதிரிகளுக்குத் தெரிந்துவிடுமே!

[இரண்டு குடியானவர்கள் கட்டைகளை அடுக்கித் தீ மூட்டுகின்றனர்.

ஓடத்திலிருந்து ஸ்டாபாச்சர், ரெடிங், ஹான்ஸ், ஜோர்க், ஹன், உல்ரிச், ஜோஸ்ட் மற்றும் மூன்று குடியானவர்கள் ஆயுத பாணிகளாகக் கரையேறி வருகின்றனர். மெல்ச்தலும் கோன்ராடும் எதிர்கொண்டு அழைத்து வருகின்றனர். மற்றவர்களும் வரவேற்கின்றனர்.

வந்தவர்களும் இருந்தவர்களும் கூடிக் குலவுகையில் மெல்ச்தலும் ஸ்டாபாச்சரும் முன்புறமாக வருகின்றனர்.]

மெல்ச்தல்: நான் அவரை என் கண்களால் கண்டு கொண்டேன், ஆனல் இனி அவரால் என்னை ஒருபோதும் பார்க்க முடியாது! அவர் கண்களை நான் தொட்டுப் பார்க்கும் போது, என் கைகள் நடுங்கின! இரண்டு குழிகளே இருக்கின்றன! உடனேயே பழிவாங்கும் சிந்தனைகள் என் உள்ளத்தில் அலை மோதின!

ஸ்டாபாச்சர்: பழிவாங்குகிற பேச்சே வேண்டாம்; பழமைக்குப் பழிவாங்க வேண்டாம், எதிர்காலத்தில் இடையூறு நேராமல்

காக்கவே நாம் இங்குக் கூடியிருக்கிறோம். சரி, அந்தர்வால் டனுக்கு நீ போன பிறகு காரியம் எப்படி? குடியானவர்கள் எப்படி யிருக்கிறார்கள்?

மெல்ச்தல்: காடும் மலையும் கடந்து சென்றேன், சூறாவளி போல் எங்கும் சுற்றி வந்தேன். எல்லாம் நன்றாகவே இருக்கிறது. குடியானவர்கள் மேற்கொண்டு துன்பப்படத் தயாராயில்லை. நான் போன இடங்களில் எல்லாம் முன்னதாகவே அதிகாரிகளின் கொடுமைகள் தெரிந்திருக்கின்றன. என் தந்தை கண்களை அவித்த கொடுமையை என்னிடம் பலர் விசாரித்தார்கள். எங்கள் மாவட்டம் முழுதும் போராட்டத்திற்குத் தயாரா யிருக்கிறது! மக்கள் மலைகளைப் போல் உறுதியாக நிற்பார்கள்!

ஸ்டாபாச்சர்: அதுதான் வேண்டும்! மிக விரைவில் எல்லா இடங்களையும் சுற்றி வந்து விட்டாய்!

மெல்ச்தல்: ராஸ்பர்க், ஸார்னன் என்ற இரண்டு இடங்களிலுமுள்ள எதிரிகளின் கோட்டைகளையும் உள்ளே புகுந்து பார்த்து வந்தேன். ஸார்னன் கோட்டைக்குள் என் தந்தையின் கண்களைப் பிடுங்கிய கவர்னரைக் கண்ணால் கண்டேன்; விருந்துண்டு மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தான் பாவி! அந்தக் கொடியோனைக் கண்களால் மட்டும் கண்டேன்—ஆனால் அவனைக் கொலை செய்யவில்லை!

ஸ்டாபாச்சர்: அந்த அடக்கமான வீரமே நமக்கு வெற்றி யளிக்கும்!

[மற்றவர்களும் முன்னால் வந்து சேருகிறார்கள். கொம்பு ஊதும் சத்தம் கேட்கிறது. ஆயுதங்கள் தரித்த பலர் பாறைகளிலிருந்து மளமளவென்று இறங்கி வருகின்றனர்; சிலர் கைகளில் கறுப்பு விளக்குகள் வைத்திருக்கின்றனர்.]

சுதருத்: யூரி ஆட்களும் வந்துவிட்டார்கள்!

ரோஸல்மன்: பாதிரியாரும் வந்திருக்கிறார்!

கோன்ராடு: வால்டரும் வந்திருக்கிறார், ஆனால் வில்லியம் டெல்லை மட்டும் காணவில்லை!

[வால்டர், ரோஸல்மன், பீட்டர், ருவோடி மற்றும் ஐவர் வருகின்றனர். மொத்தம்

முப்பத்து மூன்று பேர்கள் முன்புறமாக வந்து நெருப்பைச் சுற்றி வளையமாக அமர் கின்றனர்.]

வால்டர்: நம் சொந்த நாட்டிலே நல்ல காரியத்திற்காக நாம் சந்திப்பதற்கு இரவில்தான் கூடவேண்டியதா யிருக் கிறது! இதுவும் ஒரு காலம்!

மெல்ச்தல்: இருட்டிலே கூடுவது வெளிச்சத்திலே நடக்க வேண்டிய வேலைக்காகத்தானே!

ரோஸல்மன்: அன்பர்களே! நாம் நம் நாடுமுழுவதற்கும் பிரதிநிதிகளாகக் கூடியிருக்கிறோம். ஆகவே நம் முன் னோர் வழக்கப்படி, ஆண்டவனைத் துதித்துக் கொண்டு நம் வேலையைத் தொடங்குவோம்! நீதி எங்கே யிருக்கிறதோ, அங்கே கர்த்தரும் துணை நிற்பார்!

ஸ்டாபாச்சர்: அவ்வண்ணமே ஆகட்டும்! நமது நியாயமே நமக்கு ஒளியாக வழிகாட்டட்டும்!

மெல்ச்தல்: நாட்டில், நம் மூன்று மாவட்டங்களிலும் முதன் மையானவர்கள் அனைவரும் இங்கு வந்திருக்கின்றனர்!

பீட்டர்: நாம் மூன்று வகுப்பினராகக் கூடியிருக்கிறோம்! நம் மில் எந்த வகுப்பிலிருந்து தலைவரைத் தேர்ந்தெடுப்பது?

மெய்யர்: அந்தர்வால்டனுக்காக நான் சொல்லுகிறேன்—எங்களுக்குத் தலைமைப் பதவி வேண்டாம். மற்ற இரு பிரிவினருள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

மெல்ச்தல்: அப்படியே செய்யலாம், ஆட்சேப மில்லை!

ஸ்டாபாச்சர்: யூரிக்காரரே தலைமை வகிக்கட்டும்; எல்லோருக் கும் பெருமைதான்!

வால்டர்: நாம் எல்லோருமே ஆதியில் சுவிஸ்ஸிலிருந்து பிரிந்துவந்தவர்களே! சுவிஸ்ஸுக்கு இந்தப் பெருமை இருக்கட்டுமே!

ரோஸல்மன்: நமக்குள் இந்த நட்புப் போட்டியை முடித்துக் கொள்வோம். மந்திராலோசனையில் சுவிஸ் தலைமை யாக இருக்கட்டும்!

வால்டர்: (*வாளை ஸ்டாபாச்சரிடம் நீட்டி*) சரி, நீ பெற்றுக் கொள்!

ஸ்டாபாச்சர்: என்னைவிட வயதில் மூத்தவர் இருக்கிறார். ஐதல்ரெடிங்கைவிடப் பெரியவர் யார் இருக்கின்றனர்?

வால்டர்: சரி, அவரே தலைமை வகிக்கட்டும். இதை ஏற்றுக் கொள்பவர்கள் கைதூக்குங்கள்!

[எல்லோரும் வலது கரத்தைத் தூக்குகின்றனர்.]

ரெடிங்: (கூட்டத்திற்குள் வந்து) நம் வேதப் புத்தகம் இங்கே யில்லாததால், அதைத் தொட்டுப் பிரமாணம் செய்ய இயலவில்லை. எனவே அதோ வானத்தில் மின்னும் தாரகைகள் மீது ஆணையிட்டு உறுதி சொல்கிறேன்—நான் நீதி தவருமல் நடந்து கொள்கிறேன்!

[அவருக்கு முன்னால் இரண்டு வாள்கள் நிறுத்தப் படுகின்றன. கூட்டத்தினர் ஒரே வட்டமாக நெருங்கிச் சூழ்கின்றனர். சுவிஸ் பிரதிநிதிகள் நடு மையத்திலும், யூரிக்காரர்கள் வலது புறத்திலும், அந்தர் வால்டுக்காரர்கள் இடது புறத்திலுமாக இருக்கின்றனர். தலைவர் தமது வாளை ஊன்றிக்கொண்டு நிற்கிறார்.]

இப்போது நாம் மூன்று பிரிவினரும் ஒன்று படுவதற்காக இங்கு இந்த நேரத்தில் கூடியுள்ளோம். இந்த ஒற்றுமை புதிதல்ல; பல நூற்றாண்டுகளாகவே நாம் ஒன்றுபட்டவர்கள். பழைய ஐக்கியத்தைப் புதுப்பித்துக் கொள்வோமாக! மற்ற விவரங்களை ஸ்டாபாச்சர் சொல்லுவார்.

ஸ்டாபாச்சர்: (முன்னால் வந்து)—நாம் மூன்று மாவட்டங்களில் இருந்தாலும், மலைகளும் ஏரிகளும் நம்மைப் பிரித்தாலும், நாம் அனைவரும் ஒரே சமுதாயத்தினர்!

எல்லோரும்: ஆம், ஒரே சமுதாயத்தினர்!

[ஒருவரோடு ஒருவர் கைகோத்துக் கொள்ளுகின்றனர்.]

ஸ்டாபாச்சர்: நம்மைச் சுற்றியுள்ள நாடுகள் பிறருக்கு அடிமைப்பட்டிருக்க இசைந்தாலும், நாம் என்றுமே சுதந்திரத்தோடு விளங்கி வந்தோம். நீதி செலுத்துவதற்காக மட்டும் ரோமாபுரிச் சக்கரவர்த்தியை வேண்டிக் கொண்டோம். கொலை வழக்குகளில் நீதி செலுத்த அவருக்கு உரிமை அளித்தோம். ஆனால் ஆஸ்திரிய ஆதிக்

கியத்தை நாம் ஒருபோதும் ஏற்கவில்லை. ஏற்றுக்கொள்ள போவதுமில்லை! நாடு இன்று அடிமைப் படுத்தப்படுகிறது நமக்கு உரிமைகள் இல்லையாம்! மக்கள் ஊக்கமிழந்து முடிவில்லாத துன்பங்களுக்கு இரையாகி வருகிறார்கள் நாளுக்கு நாள் கொடுமைகள் குவிகின்றன! இந்த கொடுங்கோலுக்கு முடிவில்லையா?

[மக்களுக்குள் மிகுந்த பரபரப்பு.]

வேறு வழிகள் இல்லாத காலத்தில் மக்கள் கரங்களிலே வாள் ஏறுகின்றது! கொடுங்கோலனின் ஆணவத்தையு அதிகாரத் திமிரையும் எதிர்த்து, நம் மனைவி, மக்களையு தாய் நாட்டையும் காப்பதே நம் கடமை!

எல்லோரும்: (வாள்களை ஒருவருக்கொருவர் தட்டிக்கொண்டு)- மனைவி மக்களையும், தாய் நாட்டையும் காப்போம்!

ரோஸல்மன்: (வட்டத்திற்குள்ளே சென்று)—வாளை எடுக்குமு ஆஸ்திரிய மன்னரிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கேட்ப நலமல்லவா? ஆஸ்திரியாவின் அதிகாரத்தை அங்கீகரி ப்பது நலம்!

ஹான்ஸ்: பாதிரியார் என்ன சொல்லுகிறார்! ஆஸ்திரிய வுக்கா விசுவாசம்!

பர்க்ஹார்ட்: அதைக் காதாலேயே கேளாதேயுங்கள்!

சுதருத்: இது துரோகியின் யோசனை—நாட்டு எதிரியின் பேச்சு!

ரெடிங்: அமைதி, அமைதி! நண்பர்களே, அமைதியா யிருங்கள்!

சேவா: இத்தனை கொடுமைகளுக்குப் பின்னும், ஆஸ்தி யாவை நாம் வணங்கவா!

மெய்யர்: இப்படி எண்ணுவோரால்தான் நாம் அடிமைகளா யிருக்கிறோம்!

ஹான்ஸ்: ஆஸ்திரியாவுக்கு விட்டுக்கொடுக்கும்படிப் பேசுப ருக்கு நம் சட்டத்தில் பாதுகாப்பு அளிக்க வேண்டியதில்லை தை முதல் சட்டமாக இப்போதே நிறைவேற்றுவோம்

மெல்ச்தல்: அப்படியே செய்வோம்; ஆஸ்திரியாவுக்கு விட்டு கொடுக்கும்படி சொல்லும் எவரும் நாடு கடத்தப்ப

வேண்டியவர்; நம் சட்டத்திற்குப் புறம்பானவர்; அவர் உரிமைகளையும், கௌரவங்களையும் பறிமுதல் செய்வோம்! அவரை யாரும் தம் வீட்டில் ஏற்கலாகாது.

லோரும்: (தம் வலக்கரங்களை உயர்த்தி)—நாங்கள் ஆமோதிக்கிறோம்! இது சட்டமாயிருக்கட்டும்!

ரடிங்: (சிறிது நேரத்திற்குப் பின்)—சட்டம் நிறைவேறியது!

ராஸல்மன்: இந்தச் சட்டம் நிறைவேறிவிட்டதால், இனிமேல் நீங்கள் சுதந்திரர்கள்தான்!

ஜாஸ்ட்: சரி, விஷயத்திற்குப் போவோம்!

டிங்: என்ன இருந்தாலும், அன்பர்களே! அரசருக்கு இங்கு நடக்கும் விஷயங்கள் தெரிந்திருக்குமா? நம் குறைகளை அவருக்குத் தெரிவிக்காமலே வாள்களை உருவலாமா? இது யோசிக்க வேண்டிய விஷயம்தானே!

டாபாச்சர்: (ஹன்னைப் பார்த்து)—நீ போய்வந்த செய்தியைச் சொல்லு!

ன்: நான் ரீன்பீல்டில் சக்கரவர்த்தியைக் காணப் போயிருந்தேன். அவர் முன்னிலையில் நம் குறைகளைத் தெரிவிக்க வெகுநேரம் காத்திருந்தேன். தெரிவித்து நம் சுதந்திரத்தில் தலையிடாமலிருப்பதாக உறுதிமொழி பெறுவதே என் நோக்கம். ஆனால் பல நகரங்களிலிருந்தும் வந்திருந்த தூதுவர்களை விசாரித்த அரசர், மற்ற நாடுகள் பலவற்றையும் கவனித்தவர், உங்கள் தூதுவனாகிய என்னை விசாரிக்கவேயில்லை. அங்கிருந்த அதிகாரிகளே, 'சக்கரவர்த்திக்கு நேரமில்லை!' என்றார்கள். ஆஸ்திரிய அரசுக்குஉரிமையுள்ள ஜான் கோமகனையும் கண்டேன். அவரே அழுது அரற்றிக் கொண்டிருந்தார். சக்கரவர்த்தி தம் சகோதரர் குமாரரான அந்த ஜானுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க மறுத்துவிட்டார்! நான் வெளியேறுகையில், நம் நாட்டுப் பிரபுக்கள் சிலரையும் அங்கே கண்டேன். அவர்கள், 'இனிமேல் சக்கரவர்த்தியை நம்பிப் பயனில்லை, நீங்களே வழி தேடிக்கொள்ளுங்கள்!' என்று முடிவாகச் சொல்லிவிட்டார்கள்!

டிங்: சரி, வேறு வழியில்லை. மேல் நடக்கவேண்டியதைப் பற்றி யோசிப்போம்!

வால்டர்: நடக்கவேண்டியது என்ன? நம் பிடரியை அழு திக்கொண்டிருக்கும் கொடுங்கோல் நுகத்தடியை—அந்நிய ஆட்சியை—தூக்கி எறியவேண்டியதான்!

ரெடிங்: ஆயுதங்களும் படைகளுமுடைய எதிரிகள் போராட டம் இல்லாமலே வெளியேறுவார்களா? அவர்களை எதிர் பது எளிதா?

ஸ்டாபார்சர்: எதிரிகள் ஆயுதங்களை எடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்காமலே காரியத்தை முடிக்கவேண்டு

மெய்யர்: ராஸ்பர்க், ஸார்னன் கோட்டைகளை முதலி தகர்த்தெறியாவிட்டால், நாடு முழுவதும் பட்டாள தார்கள் படையெடுத்து வருவார்களே!

ஸ்டாபார்சர்: நாம் பல நாள் தாமதிக்கக்கூடாது! இப்போ நாம் மிகப் பலராகக் கூடிவிட்டோம். இரகசியத்ை நீடித்துக் காப்பதும் கடினம்.

வால்டர்: நாளாளுல் அல்டார்பில் கட்டிவரும் கோட்ை டையையும் முடித்துவிடுவார்கள்!

சுதருத்: கிறிஸ்துமஸ் வரை காத்திருப்போம். அன்று பிரபுக்க கவர்னர்களுக்குப் பரிசுகள் கொண்டுசெல்வது வழக்க அந்த நேரத்தில், நம்மில் பத்துப் பன்னிரண்டு சூரர்க ஆயுதங்களை மறைத்து வைத்துக்கொண்டு உள்ே சென்று, சமயம் பார்த்துக் கொம்பு ஊதவேண்டு வெளியே புதர்களில் மறைந்து நின்றுகொண்டு, கொம் சத்தம் கேட்டதுமே நாமும் மக்களும் உட்புகுந்து கோ டைகளைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும்! இது எ யோசனை.

மெல்ச்தல்: ராஸ்பர்க் கோட்டையை நான் பார்த்துக்கொ கிறேன். அதற்கு வேண்டிய உதவியாளர், என்னிட உண்டு.

ரெடிங்: அப்படியே செய்ய விரும்புவோர் கைகளை உய துங்கள்!

[பெரும்பாலோர் தம் வலது கரங்களைத் தூ கின்றனர்.]

இருபது பேர்கள் சாதகமாயும் பன்னிரண்டு பேர்க பாதகமாயும் இருக்கிருர்கள். திட்டம் நிறைவேறியது!

ால்டர் : குறித்த நாளில் கோட்டைகள் விழுந்தவுடன், மலைகள்தோறும் நெருப்பு மூட்டி, நாடு முழுவதற்கும் செய்தியை அறிவிக்க வேண்டும்! அப்படிச் செய்தால், நம் உறுதியைக் கண்டு கவர்னர்கள் நம்மிடம் உயிர்ப்பிச்சை கேட்பார்கள்!

டாபாச்சர் : கவர்னர் ஜெஸ்லர் மட்டும் எளிதில் விட மாட்டார் என்று நினைக்கிறேன். அவரை நாம் உயிரோடு வெளியேற விடுவதும் பின்னால் அபாயம்!

கான்ராடு : அபாயமுள்ள இடத்தில் அடியேனை நிறுத்துங்கள்! என் உயிரை வில்லியம் டெல் முன்பு காப்பாற்றினார். இப்போது என் கௌரவத்திற்காகவும், என் நாட்டிற்காகவும் அந்த உயிரை அர்ப்பணம் செய்யத் தயாராயிருக்கிறேன்!

டிங் : அப்போதைக்கப்போது தோன்றும் யோசனைகளின்படி சில காரியங்களைச் செய்துகொள்ள வேண்டியிருக்கும். இப்போது நேரமாகிறது. கீழ்த்திசையில் கதிரொளி பரவ ஆரம்பிக்கிறது. வெகுதூரம் செல்லவேண்டியவர்கள் இருப்பதால், இத்துடன் ஆலோசனைகளை முடித்துக் கொள்வோம்!

[எல்லோரும் வணக்கத்துடன் தொப்பிகளைக் கழற்றிவிட்டுக் கீழ்த்திசையை நோக்குகின்றனர்.]

ஸல்மன் : இது முதல் நாம் ஒன்றுபட்ட சகோதரர்களாக, ஒரே குலமாக நிற்போம்!

ல்லோரும் : (*மூன்று விரல்களை உயரே தூக்கி*) ஒன்றுபட்ட சகோதரர்களாக, ஒரே குலமாக நிற்போம்!

ஸல்மன் : அடிமைகளாய் வாழ்வதைவிட உயிரையே விடுவோம்!

ல்லோரும் : அடிமைகளாய் வாழ்வதைவிட உயிரையே விடுவோம்!

ஸல்மன் : ஆண்டவனே அடைக்கலம்! மனிதனுடைய அதிகாரத்திற்கு ஒருபோதும் அஞ்சமாட்டோம்!

எல்லோரும் : ஆண்டவனே அடைக்கலம்! மனிதனுடை அதிகாரத்திற்கு ஒருபோதும் அஞ்சமாட்டோம்!

ஸ்டாபாச்சர் : எல்லோருக்கும் வணக்கம்! இப்போது மெ வாக வீடு செல்வோம். இடைக்காலத்தில் ஒவ்வொருவரு நம் திட்டத்திற்கு அமைதியாக ஆட்களைச் சேர்த்து கொண்டேயிருக்கவேண்டும். தனிப்பட்டவர்கள், தங்க கோபத்தையும் ஆத்திரத்தையும் அடக்கிக்கொண் குறித்த நாளை எதிர்பார்த்திருக்க வேண்டும். வெற் நமதே! சுதந்திரம்—

எல்லோரும் : அடைந்தே தீருவோம்!

[மூன்று பிரிவுகளாக எல்லோரும் புறப்ப கின்றனர். உருக்கமான இசை கே கின்றது. சிறிது நேரம் கழித்து, தி விழுமுன்பு, மேடையில் மலைகளுக்கு மே சூரிய உதயம் தெரிகின்றது.]

அங்கம்—III

காட்சி 1

வில்லியம் டெல்லின் வீட்டு முற்றம். இமைப்புளியால் டெல் கட்டைகளை இழைத்துக் கொண்டிருக்கிறான்; அவன் மனைவி ஹெட்விக் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருக்கிறாள். பையன்கள் வால்டரும் வில்லியமும் சற்றுப் பின்னால் ஒரு சிறு வில்லை வைத்து விளையாடுகிறார்கள். வால்டர் ஏதோ பாடிக்கொண்டிருந்தவன் முன்புறமாக ஓடிவருகிறான்.

வால்டர்: அப்பா! நாண் கயிறு அறுந்து போய்விட்டது! இதைச் சரிப்படுத்திக் கொடுங்கள் அப்பா!

டெல்: நான் மாட்டேன், கண்ணு! சரியான வேட்டைக்காரன் தானாகப் பழுதுபார்க்க வேண்டும்!

[பையன்கள் பின்புறம் போகிறார்கள்.]

ஹெட்விக்: பசங்கள் இப்போதே அம்பு விடப் பழகுகிறார்கள் போலிருக்கிறது!

டெல்: வேண்டாமா? எதிலும் வல்லவனாக வேண்டுமானால், இளமையிலேயே பழகவேண்டும்!

ஹெட்விக்: ஐயோ, இந்த வில் வித்தை தெரியாமலே இருந்தால் நல்லது!

டெல்: எல்லாவற்றையும் அவர்கள் தெரிந்துகொள்வது தான் நல்லது. வாழ்க்கையிலே ஒருவன் தைரியமாகத் தன்னையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்; எதிரிக்கும் அவனிடம் அச்சம் இருக்கவேண்டும்!

ஹெட்விக்: ஆமாம், நீங்கள் தெரிந்துகொண்டது போதாதா? கொஞ்சங்கூட வீட்டில் தங்கவே உங்களுக்கு நேரமில்லை!

டெல்: என்னால் அது முடியாதம்மா! என் இயற்கையே அப்படி! ஆடுமாடு மேய்த்து அயர்ந்து விழுந்துகொண்டிருக்க என்னால் இயலாது. எப்பொழுதும், எதையாவது குறி வைத்து, ஓடிச் சாடித் திரியவேண்டும்—அப்படியே வழக்கமாகி விட்டது.

ஹெட்விக்: ஆனால் வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கவலை யோடு கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும் ஒருத்தியை பற்றி உங்களுக்கு என்ன கவலை! மலையுச்சிகளில் பனிக் கட்டிகளிலும் பாறைகளிலும் தாவி ஓடினால், எப்பொழுது என்ன நேரும் என்று யார் கண்டது?

டெல்: மனிதனுக்குத் தைரியம் வேண்டும்; வீரனுக்கு ஆண்டவனும் துணை செய்வார். மலைகளிலேயே பிறந்த வன் அவைகளைக் கண்டு அஞ்சமாட்டான்!

[வேலையை முடித்து இழைப்புளியையு கட்டைகளையும் எடுத்து ஓரமாக வைத்து விட்டு, முன்புறம் வந்து தொப்பியை எடுக்கிறான்.]

ஹெட்விக்: இப்பொழுது எங்கே பயணம்?

டெல்: அல்டார்புக்கு—உன் தகப்பனார் வீட்டுக்கு!

ஹெட்விக்: நான் நினைத்தது சரியாய்த்தான் இருக்கிறது ஏதோ அபாயமான வேலையில் நீங்கள் இறங்கியிருக் கிறீர்கள். உள்ளதை ஒப்புக்கொள்ளுங்களேன்!

டெல்: உனக்கு யார் சொன்னார்கள்?

ஹெட்விக்: கவர்னர்களுக்கு எதிராக ஏதோ திட்டம் போட் டிருக்கிறீர்கள். ரூட்லியிலே கூட்டம் நடந்ததாம்; நீங்களு அதில் சம்பந்தப்பட்டிருக்கிறீர்கள்!

டெல்: கூட்டத்திற்கு நான் போகவில்லை—ஆனால் தாய்நா அழைக்கும்போது என்னால் முடிந்ததை நான் செய்யாமல் மறுப்பேனா?

ஹெட்விக்: எல்லாவற்றிலும் மிகவும் அபாயமான இடத் திலேதான் உங்களை நிறுத்தி வைப்பார்கள்!

டெல்: அவனவன் சக்திக்குத் தகுந்த வேலையைச் செய்ய வேண்டியதுதானே!

ஹெட்விக்: அன்றைக்கு அந்த அந்தர்வால்டன் ஆசாமியை நீங்கள் ஏரியில் கடத்தும்போது—அப்பொழுது அடித்த புயலில் உயிர் தப்பியதே மறுபிழைப்புத்தான்! அந்த நேரத் தில் மனைவி மக்களைப் பற்றி நீங்கள் எண்ணிப் பார்த்தீர் களா?

டல்: என் அன்பே ! உன்னை நினைத்தேன். அதனுல்தான் பல குழந்தைகளுக்குத் தகப்பனை அந்த அந்தர்வால்டன் நண்பனைக் காப்பாற்றினேன் !

ஹெட்விக்: கொந்தளித்துப் பொங்குகிற ஏரியோடு விளையாடலாமா? கடவுள் காப்பாற்றுகிருரா இல்லையா என்று சோதித்தது போலாகிவிட்டது !

டல்: ரொம்ப ஆலோசித்துக் கொண்டிருப்பவனுல், ஒரு காரியமும் முடியாது !

ஹெட்விக்: ஆமாம், நீங்கள் நல்லவர், அன்போடு எல்லோருக்கும் தொண்டு செய்வீர்கள். ஆனல் உங்களுக்கு அவசியம் வரும்போது ஒருவரும் பக்கத்தில் வரமாட்டார்கள் !

டல்: நான் பிறர் உதவியை நாடாமலே இருக்க ஆண்டவன் அருள் புரியட்டும் !

[அவன் தன் பெட்டி-வில்லையும் அம்புகளையும் எடுத்துக் கொள்கிருன்.]

ஹெட்விக்: வில் எதற்கு? அது இங்கேயே இருக்கட்டும் !

டல்: வில் இல்லாவிட்டால் என் கைகள் விழுதுமாதிரித் தொங்கும் !

வால்டர்: அப்பா, எங்கே போகிறீர்கள் ?

டல்: அல்டார்புக்கு, தம்பி! நீயும் வருகிருயா ?

வால்டர்: ஓ, ஜோராய்ப் போய் வருவோம் !

ஹெட்விக்: கவர்னர் இப்போது அல்டார்பில்தான் இருக்கிருர் ; அங்கே போகவேண்டாமே !

டல்: இன்றைக்கு அங்கிருந்து கிளம்புகிருர்.

ஹெட்விக்: அவர் முதலில் போய்த் தொலையட்டுமே ! உங்களிடத்திலே அவருக்குக் கோபம் தீர்ந்தபாடில்லை ! இன்றைக்குப் போகாமல் இருந்தால் என்ன ? வேட்டைக்கு வேண்டுமானல் போங்கள் !

டல்: ஏன் என்று சொல்லேன் !

ஹெட்விக்: என் மனசிலே தோன்றுவதைச் சொல்கிறேன். இதற்குக் காரணம் ஏது ?

டெல்: ஆனால், கண்ணே, நான் அங்கு வருவதாக வா களித்திருக்கிறேன்!

ஹெட்விக்: போய்த் தீரவேண்டுமானல், நீங்கள் போங்கள் குழந்தைகள் என்னோடு இருக்கட்டும்!

வால்டர்: இல்லே, அம்மா! நான் அப்பாவுடன் போகத்தா வேண்டும்!

ஹெட்விக்: வால்டர், உனக்கு அம்மா வேண்டாமா?

வால்டர்: நான் போய் நல்ல விளையாட்டுச் சாமான்கள் எ லாம் வாங்கி வருவேன்!

வில்லியம்: நான் இருக்கிறேன், அம்மா, உன்னுடன்!

ஹெட்விக்: *(அவனைக் கட்டித் தழுவிக் கொண்டு)* ஆமா கண்ணு, நீ ஒருத்தன்தான் அம்மாவுக்கு ஆறுதல்! நீதா அம்மா பிள்ளை, வால்டர் அப்பா பிள்ளை!

[அவர்கள் வெளியேறுகையில், அவள் கதவ பக்கம் சென்று, அவர்கள் போகும் வ மேல் விழிவைத்து, வெகுநேரம் பார்த்து கொண்டே நிற்கிருள்.]

காட்சி 2

குன்றுகள் சூழ்ந்த வனம்—பாறைகளிலிருந்து அருவிகள் வழிந்து விழுகின்றன.

வேட்டைக்குரிய உடையுடன் பெர்தா வருகிருள், ருடென்ஸ்ம் தொடர்ந்து வருகிருன்.

பெர்தா: அவன் என்னைத் தொடர்ந்து வருகிருன்! எ சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள இதுவே தக்க தருண

ருடென்ஸ்: (விரைந்து வந்து) கட்டழகி! கடைசியாக உ னைத் தனிமையில் சந்திக்க முடிந்துவிட்டது! பாறைகளு வனங்களும் சூழ்ந்த பாதுகாப்பான இந்த இடத்தில் ஆ அரவத்தைப் பற்றிய அச்சமே இல்லை. மௌனமாக எ மனத்தில் அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் வேதனை வெளியிட்டுத் தீர்த்துக் கொள்ள இதுவே சந்தர்ப்பம்!

பெர்தா: வேட்டைக்காரர்கள் நம்மைத் தொடர்ந்து இந்த பக்கமாக வரமாட்டார்கள் என்பது நிச்சயந்தானா?

ருடென்ஸ்: அவர்கள் அங்கே வெகு தொலேவில் இருக்கிறார்கள்! இதுபோன்ற தருணம் இனி வாய்க்காது! இந்த நேரத்தில்—இந்த நிமிஷத்திலேயே—என் விதி தீர்மானமாக வேண்டும்! இனி உன் கண் முன்பு தோன்றுவதா இல்லேயா என்பது முடிவாக வேண்டும்! கருணை வழியும் உன் கண்கள் ஏன் இப்படிக் கடுமையான பார்வை என்னும் படையை ஏவவேண்டும்! ஆனால் நான் யார்—கொம்புத் தேனுக்கு ஆசைப்பட? வாழ்வில் இன்னும் நான் போர்கள் செய்திலேன், புகழ் மாலே சூட்டிலேன்! தீரச் செயல்கள் புரிந்து, உனக்குச் சமமாக உன்னேச் சூழ்ந்து நிற்கும் வீரர் கூட்டத்தை நான் சேர்ந்திலேன் எனினும், உண்மையும், காதலும் நிறைந்த உள்ளத்தோடு நான் உன்னே அணுகுகிறேன்.

பெர்தா: உன்னேச் சூழ்ந்திருப்பவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளேயெல்லாம் கைவிட்டு நிற்கும் நீயா உண்மையையும் காதலேயும் பற்றி உரையாடுகின்றாய்?

[ருடென்ஸ் திடுக்கிட்டுப் பின்வாங்குகிறான்.]

ஆஸ்திரியாவின் அடிமை! அந்நியரின் அடிவருடி! தன் இனத்தாரைக் கொடுமையுடன் நசுக்கும் வேற்றாருக்குத் தன்னே விற்றுவிட்ட கயவன்!

ருடென்ஸ்: எழிலரசி! நீயா என்னே இவ்வாறு பழிக்கிறாய்? உனக்காக—உன்னேத் தேடிக்கொண்டுதான் இப்பக்கம் நான் திரும்பினேன்!

பெர்தா: என்னேக் கண்டுபிடிக்க நல்ல இடம் பார்த்தாய்—துரோகிகள் பக்கத்திலா என்னேத் தேடவேண்டும்? ஜெஸ்லரின் கையை—கொடுங்கோலன் ஜெஸ்லரின் கையை—பிடித்தாலும் பிடிப்பேன்—சுவிஸ் நாட்டின் சொந்த மகனுயிருந்தும், அந்த அந்நியனுடைய கைக்கருவியாகச் செயல்பட ஆசை கொண்டவனே நான் தீண்டமாட்டேன்!

ருடென்ஸ்: அட ஆண்டவனே! இதை என் காதால் கேட்க வேண்டுமா?

பெர்தா: நல்லவனுக்குத் தன் நண்பர்கள், உறவினரைவிட வேண்டியவர்கள் வேறு யார்? ஒரு பாவமும் அறியாமல் நசுங்கிக் கிடக்கும் நிரபராதிகளின் பக்கம் நின்று, அவர்

களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதைவிட, கண்யமான இதயம் படைத்தவனுக்கு இனிய கடமைகள் வேறு என்ன இருக்கின்றன? உங்கள் ஜனங்களுக்காக என் உள்ளத்தில் உதிரம் வடிகின்றது! அவர்கள் துயரப்படுகையில் அதில் நானும் பங்கு கொள்கிறேன். ஏனெனில் நான் அவர்களை நேசிக்கிறேன். அவர்கள் வல்லமைமிக்கவர் களாயிருந்தும், பொறுமையோடு அயர்ந்து கிடக்கிறார்கள். அவர்களிடம் எனக்கு மட்டற்ற மரியாதை உண்டு, நாள் தோறும் அந்த மரியாதையும் அன்பும் குன்றாமல் வளர்ந்தே வருகின்றன. ஆனால், நீயோ?—பெற்ற பொன்னாட்டைக் காக்கும் உரிமையும் கடமையும் உள்ளவன்! ஆபத்து வேளையில் அதைக் காப்பதை விட்டு, எதிரியுடன் சேர்ந்து கொண்டு, தாய் நாட்டை இரும்புச் சங்கிலிகளால் இறுகப் பிணைப்பதற்கு முன்வந்து நிற்கிறாய்! உன்னைப் பார்க்கும் பொழுதுதான் எனக்குத் துக்கமும் கோபமும் பொங்கி யெழுகின்றன! நெஞ்சில் உன்மீது வெகுண்டெழும் வெறுப்பை நான் வலிந்தே அடக்கிக் கொள்ள வேண்டி யிருக்கிறது!

ருடென்ஸ்: ஆற்றல் மிகுந்த ஆஸ்திரிய ஆட்சியின் அமைதி என் மக்களுக்கு நல்லதுதானே! என் நாட்டவரின் நன்மையைத்தானே நான் நாடுகிறேன்!

பெர்தா: நன்மையை அல்ல, அடிமைத்தனத்தை என்று சொல்லு—அதற்குத்தான் நீ தயார் செய்து வருகிறாய்! பூமியிலே எங்காவது ஒரு மூலையிலே யாவது சுதந்திரம் தங்கியிருந்தால், அங்கிருந்தும் அதை ஒழித்துவிட நீ முயல் கிறாய்! மக்கள் தங்களுக்கு உண்மையான நன்மை எது என்பதை உன்னைவிட நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள்; போலியான பொருள்களால் அவர்களுடைய உணர்ச்சி களை ஏமாற்றிவிட முடியாது. ஆனால் உன்னைச் சுற்றியோ ஆசை வலை—பதவி வலை—பகட்டான பட்டங்களின் வலை! நீ வந்து எனக்கு வலை விரிக்கிறாய்!

ருடென்ஸ்: பெர்தா! நீ என்னை வெறுக்கிறாய், உதறித் தள்ளி விட்டாய்!

பெர்தா: அப்படி நான் செய்ய முடிந்தால், எனக்கு அதுவே நல்லதாகும்! ஆனால், நான் இன்பத்தோடு அன்பு

செலுத்தக்கூடிய ஒருவரைப் பிறர் கண்டிக்கவும், வெறுத்து ஒதுக்கவும் பார்ப்பதைவிட நானே வெறுப்பது—

ருடென்ஸ்: ஓ பெர்தா! பெர்தா! ஒரு சமயம் இன்பத்தின் எட்டாத சிகரமான வானத்தில் என்னைத் தூக்கி வைக்கிறாய், மறுகணத்தில் அங்கிருந்து நீயே என்னை ஆழங்காணாத அந்தகாரத்தில் அநாதையாய்த் தள்ளி விடுகிறாய்!

பெர்தா: இல்லை! இல்லை! இன்னும் கொஞ்சம் நல்ல உணர்ச்சிகள் உன் உள்ளத்தில் இருக்கத்தான் செய்கின்றன! ஆனால் அவை அயர்ந்து அடங்கிக் கிடக்கின்றன— நான் அவைகளை எழுப்பிவிடுகிறேன். ஆகா, இயற்கையாகவே உன் உதிரத்தில் ஊறிக் கிடக்கும் உன் சமுதாயத்தின் பழைய பண்பாடுகளை அழிப்பதற்கு நீ எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாய்! ஆனால், உன் நல்லதிர்ஷ்டமாக உன்னைவிட அவை வன்மையாக வேரூன்றியுள்ளன. உன் நடவடிக்கைகள் எப்படியிருந்தாலும், உன் மேன்மைக் குணங்கள் இன்னும் மறையவில்லை!

ருடென்ஸ்: ஆ, பெர்தா! என்னிடம் உனக்கு இன்னும் நம்பிக்கை யிருக்கிறது. உன் காதல் எனக்கு எல்லாவற்றையும் அளித்து என்னை உயர்த்திவிடும்!

பெர்தா: அப்படியானால், இயற்கை உனக்கு வரமளித்து நிறுத்தியுள்ள நிலையிலேயே நீ நின்றால் போதும்; உன் மக்களுக்காகவும், நாட்டுக்காகவும், பரிந்து முன் வந்து நில்! உங்கள் புனித உரிமைகளுக்காகத் துணிந்து போராடு!

ருடென்ஸ்: ஆனால் உன் விஷயம்—சக்கரவர்த்தியின் ஆணையை நான் ஒரு முறை எதிர்த்து நின்றாலும், பிறகு என் ஆருயிர் என்று சொல்லவே ஒன்றும் இராமல் போகும்! கொடிய உறவினர் சிலருடைய வற்புறுத்தலுக்கு நீ அடங்காமலிருக்க முடியுமா?

பெர்தா: என் நிலங்களெல்லாம் இந்த நாட்டில்தானே இருக்கின்றன! சுவிஸ் மக்களின் சுதந்திரமே எனக்கும் விடுதலை!

ருடென்ஸ்: பெர்தா! திடீரென்று சுவர்க்கத்திற்கு எனக்கு நீ வழிகாட்டியது போலிருக்கிறது!

பெர்தா: ஆஸ்திரியாவின் தயவினால் என்னை அடையலாம் என்று நீ மனப்பால் குடிக்கவேண்டாம்! முன்னோர்களிடமிருந்து நான் பெற்றுள்ள செல்வங்களின் மீது அவர்கள் கை வைக்கிறார்கள். எதற்கு? என்னைவிட மேலான ஒருவருக்கு அவற்றைச் சேர்ப்பதற்குத்தான்! நாடு நாடாய்ப் பிடிப்பதும், பிறர் சுதந்திரத்தை விழுங்குவதுமாகிய ஆசை என்னையும் வாழவிட்டுவைக்காது. என்னையும் கடத்திச் செல்வார்கள்; மன்னர் சபையில் மண்டியிட்டுக் கிடக்கும் ஒருவனை மணந்து கொள்ளச் செய்வார்கள். ஒரே ஒரு விஷயம்தான் என்னைக் காக்கக் கூடியது. அதுவே உன் காதல்!

ருடென்ஸ்: அப்படியானால் நீ இங்கேயே, என் நாட்டிலேயே எனக்கு உரியவளாக வாழத் தீர்மானித்து விட்டாயா பெண்ணரசி! உன்னைத் தேடியல்லவா நான் இதுவரை தொலைவில் சுற்றிவந்தேன்! நான் புகழை வேண்டினேன்—அதுவும் உன்னை அடைவதற்கே! எழில் மிகுந்த இன்பகரமான போகங்களையெல்லாம் துறந்து, அமைதியான இந்த மலைநாட்டிலேயே நீ அடைபட்டிருக்க முடியுமா? அப்படியானால், என் இலட்சியம் கைகூடிவிட்டது! குன்றுகள் சூழ்ந்து, குளிர்காவும் சோலைகள் குலவும் என் நாடே இனி நம் சுவர்க்கம்! வருகிற பகையெல்லாம் வரட்டும் மலைபோல் அலைகள் எழுந்து வீசட்டும்! உச்சி மீது வானமே இடிந்து விழட்டும்! எதற்கும் இனி அச்சமில்லை அச்சமில்லை, அச்சமென்பது இல்லை!

பெர்தா: என் இதயத்தில் கண்ட கனவெல்லாம் இப்போது தான் நனவாயிற்று—என் நம்பிக்கை வீண் போகவில்லை

ருடென்ஸ்: என்னைச் சூழ்ந்து நின்ற மாயை ஒழிந்தது என்னை மயக்கி வந்த கானல் நீரும் மறைந்தது! பெற்ற தாயும் பிறந்த பொன்னாடுமே வானத்திலும் சிறந்தவர் இங்கேயே என் தாயகத்திலேயே—என் இன்பமுள்ளது, இந்த இன்ப நிலையத்திலேதான் என் இளமை கவலையற்ற சுதந்திரத்தோடு மலர்ச்சி பெற்றது. பார்க்கும் இடமெல்லாம், பார்க்கும் பொருளெல்லாம் இன்பமயமாக உள்ளன. நிலையாக நிற்கும் மரங்களும், மலைமீது தவழ்ந்து வரும் அருவிகளும், இங்குத்தான் என்னோடு உறவுகொண்டு உரையாடுகின்றன. இங்கேயே தேடுதற்கரிய தெவிட்டா

செல்வமாகிய உன்னையும் பெற்று விடுவேன்! இது ஒன்று தான் குறையாக இருந்தது!

பெர்தா: சூதுவாதற்ற சுத்தமான மக்களையும், இந்த நாட்டையும் விட்டு, வேறு வெளியில் எங்கே இன்பத்தைக் காண முடியும்? இங்கே பொய்யும் பொருமையும் இல்லை! பொழுதும் இன்பமாகப் பறந்து செல்கின்றது! இப்போது தான் உன்னை விறல் வீரனாகக் காண்கிறேன்! விழிப்புடன் வீறுகொண்டெழுந்த வீர மக்களின் முன்னணியில், விடுதலை பெற்ற தனிப்பெருந் தலைவனாக உன்னைக் காண்கிறேன்! மக்கள் உள்ளன்போடு உனக்குச் செலுத்தப் போகும் மரியாதைக்கு நிகராக மணிமுடி தரித்த மன்னன் எவனும் இதுவரை பெற்றிருக்க மாட்டான்!

ருடென்ஸ்: உன்னையும் அவ்வாறே நான் காண்கிறேன்! இன்பம் கொழிக்கும் என் இல்லத்தில் மாதர் குலத்தின் மணி விளக்காக நீ விளங்குவாய்—நீ இருக்குமிடமே சுவர்க்க பூமியாகும்! வசந்த காலம் மலர்களை அள்ளிச் சொரிவது போல, என் பாதையெங்கும் நீ முன்னே முன்னே மலர் மழை பொழிந்து கொண்டிருப்பாய்! உன்னைச் சுற்றிலும் எங்கும் எழில் நிறைந்திருக்கும், பட்ட மரங்கள் தளிர்த்துப் பசுமையாகும்!

பெர்தா: கர்வத்தோடு கர்ச்சனை செய்து கொண்டு திரியும் ஒரு வீரனுடன், அவன்கோட்டைக்குள் சிறகொடிந்துகிடப்பதை விட்டு, என் இதயக் கோயிலை இருப்பிடம் கொண்ட உன்னையே நான் நாடியுள்ளேன்! இங்கே எனக்கும் என்னால் இன்பமடையும் மக்களுக்கும் இடையில் எங்களைப் பிரித்து வைக்கும் கோட்டைகளுமில்லை, கொத்தளங்களுமில்லை!

ருடென்ஸ்: ஆனால் நான் முதலில் விடுதலை பெறுவது எப்படி? ஆராயாமல் என் மீது நானே சுமத்திக் கொண்ட கட்டுக்களிலிருந்து சுதந்திரம் பெறவேண்டுமே!

பெர்தா: சீறி யெழுந்த சிங்கத்தைப் போலக் கட்டுக்களைத் தகர்த்தெறிய வேண்டும்! உன் மக்களைக் காக்க உவகையுடன் துள்ளி யெழு! ஆண்டவன் உனக்காக அளித்துள்ள பணி அது!

[வேட்டைக் கொம்புகள் ஊதும் ஒலி தூரத்தில் கேட்கின்றது.]

வேட்டை வீரர்கள் அருகில் வருகிறார்கள்! இனி நாம் பிரிந்துவிட வேண்டும். நீ சென்றுவிடு! உன் மக்களுக்காகப் போராடு! உன் காதலுக்காகப் போர் செய்! எல்லோரும் அஞ்சும் எதிரி ஒருவனே; எல்லோரையும் விடுவிக்கும் சுதந்திரமும் ஒன்றுதான்!

[*அவர்கள் வெளியேறுகிறார்கள்.*]

காட்சி 3

அல்டார்பில் ஒரு மைதானம்: முன்புறத்தில் மரங்கள் நிற்கின்றன, பின்பக்கம் ஒரு நெடுங்கழியில் தொப்பி ஒன்று தொங்குகின்றது. அதற்கப்பால் பனி மலைகள் தென்படுகின்றன.

[*பிரிஷார்ட்டும், லிதோல்டும் காவலில் நிற்கிறார்கள்.*]

பிரிஷார்ட் : வெட்டியாக இங்கே காவல் காக்கிறோம்! ஈ, காகம்கூட இந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை! ஆண்பிள்ளை யாரையும் இந்தத் திசையிலேயே காணோம்! தொப்பிக்கு வணக்கம் செய்ய எந்தப் பயல் இங்கே வரப்போகிறான்? நேற்று இங்கே சந்தைக்கடை மாதிரி கூட்டம் இருந்தது, அதோ கொம்பில் தொங்கும் தொப்பி ஊரையே விரட்டிவிட்டது!

லிதோல்ட் : வம்புக்காரர் சிலர் தொப்பிகளைக் கழற்றி ஆகாயத்தில் வீசிக்கொண்டு நம்மைப் பரிகசிப்பதற்காக அந்தப் பக்கமாக வந்து போகிறார்கள். யோக்கியர்கள் இந்தப் பக்கம் ஏன் வரப்போகிறார்கள்? ஊரைச் சுற்றி நடந்து, வேறு வழியாய்ப் போவார்களே தவிர, இந்தச் சனியனை வந்து வணங்கவா போகிறார்கள்!

பிரிஷார்ட் : கவுன்சில் கூட்டம் முடிந்ததும் மதியத்தில் எல்லாரும் இந்தப் பக்கமாய்த்தான் வருவார்கள் என்று எதிர்பார்த்து நின்றேன்—வரவும் செய்தார்கள். ஆனால் ரோஸல்மன் பாதிரியார் எல்லோருக்கும் முன்னால் கம்பத்தின் பக்கம் வந்து நின்றார். எல்லோரும் அவர் முன்பு முழங்கால் பணிந்து அவரை வணங்கிவிட்டுப் போய்விட்டார்கள்! நானும் விழுந்து வணங்கினேன்!

லிதோல்ட் : அது சரிதான், நண்பா! நாம் இங்கே நிற்பது எது போலிருக்கிறது, தெரியுமா? பார்த்தவர் சிரிக்கும்படி, நம்மைக் குட்டையிலே மாட்டி இங்கே நிறுத்தி வைத்திருக்கிருர்கள். பழைய தொப்பி ஒன்றுக்குப் பட்டாளத்துச் சிப்பாய்களா காவலுக்கு நிற்க வேண்டும்! இது மகா கேவலம், அண்ணே! கௌரவமான மனிதர் யாரும் நம்மை மதிக்கமாட்டார்கள். என்ன, இருந்திருந்து, ஒரு தொப்பியைக் கும்பிடுவதா? எவனே ஒரு முட்டாளுடைய உத்தரவுதான் இது!

பிரிஷார்ட் : வெற்றுத் தொப்பியை வணங்கக்கூடாதோ? ஏன்? மண்டையிலே சரக்கே யில்லாத எத்தனை தடித்த உருவங்களை நாம் இதுவரை வணங்கி யிருக்கிறோம், தம்பி!

[*ஹில்டிகார்ட், மதில்டா, எலிஸபெத் ஆகிய மூன்று குடியானவப் பெண்கள் தங்கள் குழந்தைகளோடு வருகின்றனர்.*]

லிதோல்ட் : ஆமாம், நீ வேலையில் ரொம்பக் கருத்துள்ளவன் தான்! ஒரு பாவமும் அறியாதவர்களை வம்புக்கிழுத்து நிறுத்துவாய். நான் கண்களை மூடிக்கொள்ளப் போகிறேன், தொப்பிக்கு வணங்காமல் போகிறவர்கள் போகட்டும்!

மதில்டா : பாப்பா, ஏ பசங்களே! அதோ பாருங்கள், கவர்னர் கம்பத்திலே தொங்குகிருர்! முட்டை மடக்கிக் கீழே விழுந்து அவரை வணங்குங்கள்!

எலிஸபெத் : அட கடவுளே! அவன் போய்த் தொலைந்து, இந்தப் தொப்பி மட்டும் கிடந்தாலும், பரவாயில்லை! நாட்டுக்கும் நல்லது!

பிரிஷார்ட் : (*அவர்களை விரட்டிக்கொண்டு*) போங்களம்மா, புண்ணியவதிகளே! போய் உங்கள் புருஷன்மார்களை அனுப்புங்கள்! கவர்னர் உத்தரவை மீறத் துணிந்தவர்கள் வரட்டுமே!

[*பெண்கள் போகிருர்கள்; வில்லியம் டெல் ஒரு கையில் பெட்டி - வில்லையும், ஒரு கையில் தன் மகன் வால்டரையும் பிடித்துக் கொண்டு வருகிருன். அவர்கள் தொப்பியைக் கவனிக்காமலே நடக்கின்றனர்.*]

வால்டர் : *(தூரத்திலுள்ள ஒரு மலையைக் காட்டி)* அப்பா, அதோ தெரியும் அந்த மலையிலுள்ள மரங்களைக் கோடரியால் வெட்டினால் இரத்தம் பெருகிவருமாமே, அது உண்மைதானா ?

டெல் : குழந்தாய், உனக்கு அப்படி யார் சொன்னார்கள் ?

வால்டர் : ஆயர்கள் தலைவன். அந்த மரங்களிலெல்லாம் தேவதைகள் இருக்கின்றனவாம். மரங்களை வெட்டுவதும் பாவமாம் !

டெல் : மரங்களெல்லாம் மந்திரசத்தியுடையவைகள் தாம். அதோ மலைகளுக்கு மேலே பார்த்தாயா ?

வால்டர் : ஆமாம் ! பனிப்பாறைகள் ! இரவெல்லாம் இடி போல் முழங்கிக்கொண்டு சரிந்து விழுகின்ற பனிக் கட்டிகள் !

டெல் : ஆம், இவையெல்லாம் சேர்ந்து விழுந்தால் நமது அல்டார்பையே இதற்குள் மூடியிருக்கும். ஆனால் அடிவாரத்தில் பள்ளத்தாக்கு இருப்பதால், அந்தப் பக்கமாக உருண்டு போய்விடுகின்றன.

வால்டர் : இம்மாதிரி மலைகளே இல்லாத நாடுகள் உண்டா ?

டெல் : இருக்கின்றன. நம் நதிகள் ஓடுகிற போக்கிலே அப்படியே நடந்து சென்றால், வெகு தூரத்திற்கு அப்பால், சமவெளியான நாடு இருக்கின்றது. அங்குள்ள நிலங்கள் ஒரே பசுமையாக இருப்பவை, ஏராளமான பொருள்களும் விளைகின்றன.

வால்டர் : இந்த மலை நாட்டில் களைக்கும்படி உழைத்து உழைத்துப் பிழைப்பதைக் காட்டிலும் அந்தமாதிரி இடத்திற்கு இறங்கிப் போய்விடுவது நல்லதுதானே ?

டெல் : அது நல்ல நாடுதான். ஆனால் அங்கே பாடுபடுகிற மக்களுக்குப் பலன் கிடையாது !

வால்டர் : உங்களைப் போல் முன்னோர் சொத்துக்களை அநுபவிக்க அவர்களுக்கு உரிமை கிடையாதா ?

டெல் : நிலங்களெல்லாம் பிஷப்புக்கும், அரசருக்குமே சொந்தம்.

வால்டர் : காட்டிலாவது வேட்டையாடலாம் அல்லவா ?

டெல் : காடும் காட்டு மிருகங்களும் பிரபுக்களுக்குச் சொந்தம் !

வால்டர் : ஆறுகளில் மீனாவது பிடிக்கலாமா ?

டெல் : ஆறுகள், ஏரிகள், உப்புப் பாத்திகள் எல்லாம் மன்னருடையவை !

வால்டர் : அந்த மன்னர் யார்? எல்லோரும் அவருக்குப் பயப்படுகிறார்களே !

டெல் : அவர் வல்லமையுள்ளவர், அவர்களுக்கெல்லாம் உணவளித்துக் காப்பவர்.

வால்டர் : அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் வீரம் இல்லாதவர்களோ?

டெல் : அங்கே ஒரு வீட்டுக்காரன் அண்டை வீட்டுக்காரனை நம்பமாட்டான்.

வால்டர் : அந்தமாதிரி நாடு நமக்கு வேண்டாம், அப்பா ! பனிப் பாறைகள் உருண்டாலும், இங்கேயே இருப்போம்!

டெல் : ஆமாம், கண்ணு ! இந்தப் பனிமலைகளை அரணாக நம்பி வாழ்ந்தாலும் வாழலாம், தீய மனிதர்களை நம்பி வாழமுடியாது !

[அவர்கள் முன்னே நடக்கின்றனர்.]

வால்டர் : அப்பா, அதோ பார்த்தீர்களா! கழி மேலே ஒரு குல்லாய் !

டெல் : எந்தக் குல்லாவானால் நமக்கென்னடா? வா, நாம் போவோம் !

[அவன் வெளியேறும் சமயத்தில் பிரிஷார்ட் சென்று ஈட்டியை அவன்முன்பு நிறுத்தி மறிக்கிறான்.]

பிரிஷார்ட் : நில்லு—சக்கரவர்த்தியின் ஆணை ! மேலே போகாதே, நில்லு !

டெல் : (ஈட்டியை ஒருபுறம் தள்ளிக்கொண்டு) என்ன செய்ய வேண்டும்? என்னை ஏன் வழி மறிக்கிறீர் ?

பிரிஷார்ட் சர்க்கார் கட்டளையை மீறி நடந்திருக்கிறாய், எங்களோடு கச்சேரிக்கு வரவேண்டும் !

லிதோல்ட் : அந்தத் தொப்பியை நீ வணங்காததுதான் குற்றம் !

டெல் : நண்பர்களே, பேசாமல் என்னைப் போகவிடுங்கள்

பிரிஷார்ட் : இவனைச் சிறைச்சாலைக்கு அழைத்துப் போ !

வால்டர் : என் அப்பாவா சிறைச்சாலைக்கு! ஐயோ, அநியாயம், அநியாயம் ! ஏ ஜனங்களே ! இங்கே ஓடிவாருங்கள் அப்பாவை விடுதலைசெய்ய வாருங்கள் !

[பாதிரியார் ரோஸல்மன்னும், ஆலயத் தர்மகர்த்தா பீட்டரும் வேறு மூவருடன் வருகின்றனர்.]

பீட்டர் : இங்கே என்ன விஷயம் ?

ரோஸல்மன் : அந்த மனிதன்மீது கை வைப்பது யார் ?

பிரிஷார்ட் : அவன் சக்கரவர்த்தியின் எதிரி, இராஜத்துரோகி

ரோஸல்மன் : அப்படி யிராது, தம்பி! அது வில்லியம் டெல் அல்லவா—நேர்மையான நல்ல மனிதன்!

வால்டர் : (தன் பாட்டனர் பெரிய வால்டர் வருவதைக் கண்டு அவரிடம் ஓடிக்கொண்டு) தாத்தா, தாத்தா! அப்பாவை இவர்கள் பிடித்துக்கொண்டு போகிறார்கள் ! சீக்கிரம் வாருங்கள்!

பிரிஷார்ட் : ஊம், வா ஜெயிலுக்கு!

பெரிய வால்டர் : (வேகமாக வந்து) நில்லுங்கள்! நான் ஜாமீன் கட்டுகிறேன்! ஏ கடவுளே, இங்கு என்ன நடந்தது? டெல், நடந்ததைச் சொல்லமாட்டாயா?

[மெல்ச்தலும் ஸ்டாபாச்சரும் வருகின்றனர்

பிரிஷார்ட் : மேன்மை தங்கிய கவர்னருடைய உத்தரவை அவன் எதிர்த்திருக்கிறான்!

ஸ்டாபாச்சர் : டெல்லா அப்படிச் செய்தார்?

மெல்ச்தல் : போக்கிரி, பொய் சொல்லுகிறான்!

லிதோல்ட் : கவர்னருடைய தொப்பியை அவன் வணங்கவில்லை—அதுதான் விஷயம்!

பெரிய வால்டர்: அதற்காகவா ஜெயிலுக்குப் போகவேண்டும்? என் ஜாமீனை ஏற்றுக்கொண்டு தயவு செய்து அவனை விட்டுவிடுங்கள்.

பிரிஷார்ட்: உமக்கே நீர் ஜாமீன் கட்டிக்கொள்ளும்! எங்கள் கடமையை நாங்கள் செய்கிறோம்! அவனைக் கொண்டுவா, போவோம்!

மல்ச்தல்: (குடியானவர்களைப் பார்த்து) இதென்ன அக்கிரமம், அநீதி! நம் கண் முன்னாலேயே அவனை இழுத்துக்கொண்டு போவதை நாம் பார்த்துக்கொண்டு நெடுமரங்கள் போல் நிற்பதா?

ட்டர்: இப்பொழுது நம் கட்சிதான் வலுத்திருக்கிறது! நண்பர்களே! நாம் ஒற்றுமையாக நின்று அவனைக் காப்போம்!

பிரிஷார்ட்: கவர்னர் துரை உத்தரவை உங்களில் யாரெல்லாம் எதிர்க்கப் போகிறீர்கள்?

[வேறு மூன்று குடியானவர்களும் ஓடி வருகின்றார்கள்.]

குடியானவர்கள்: நாங்கள் உதவிக்கு வருகிறோம்! இதென்ன கொடுமை! நாமும் ஒரு கை பார்ப்போம்! இவர்களை அடித்துத் தள்ளுவோம், வாருங்கள்!

[ஹில்டிகார்டும், மற்றப் பெண்களும் வருகின்றனர்.]

டெல்: நானே என்னைக் கவனித்துக் கொள்கிறேன். என் அருமை மக்களே, நீங்கள் போங்கள்! நான் கை நீட்ட ஆரம்பித்தால், இவர்களுடைய ஈட்டிகள் எல்லாம் என்ன வாகும்?

மல்ச்தல்: (பிரிஷார்ட்டைப் பார்த்து) இன்னும் அவரை எங்களிடமிருந்து இழுத்துப் போகலாம் என்ற துணிவு தானே?

பெரிய வால்டரும், ஸ்டாபாச்சரும்: அமைதி! மெதுவாய்ப் பேசுங்கள்!

பிரிஷார்ட்: (உரக்கக் கூவிக்கொண்டு) இராஜத் துரோகம் கலகம்!

[பியூகிள்களின் ஒலி கேட்கின்றது.]

பெண்கள் : கவர்னர் வருகிறார்!

பிரிஷார்ட் : (குரலை உயர்த்திக்கொண்டு) கலகம்! சண்டை!

ஸ்டாபாச்சர் : கத்தடா, இழிமகனே! வயிறு கிழியும்வரை கத்து

ரோஸல்மனும், மெல்ச்தலும் : கொஞ்சம் பேசாமலிருங்கள்!

பிரிஷார்ட் : (*கூடுதல் சத்தத்துடன்*) உதவிக்கு வாருங்கள் சட்டம் போயிற்று! காவலர்களுக்கே ஆபத்து! ஆபத்து!

பெரிய வால்டர் : இதோ கவர்னரும் வந்து விட்டார்! இன என்ன நடக்குமோ, தெரியவில்லையே!

[*ஜெஸ்லர், கை மணிக்கட்டில் ஓர் இர ஜாளியை வைத்துக்கொண்டு, குதிரை மீது வருகிறார்; குதிரைத் தலைவன் ருடோ பும், பெர்தாவும், ருடென்ஸும், ஆயுத தரித்த பல சிப்பாய்களும் கூட வருகின் றனர்: சிப்பாய்கள், மேடையை வளைந் கொண்டு, ஈட்டிகள் பற்றிய கைகளுட நிற்கின்றனர்.*]

ருடோல்ப் : பராக்! கவர்னர்துரைக்கு வழி விடுங்கள்!

ஜெஸ்லர் : விரட்டு எல்லோரையும்! கூட்டமாய் ஓடுகிறு களே, என்ன? உதவி கேட்டுக் கூவுவது யார்?

[*பொதுவாக அமைதி நிலவுகின்றது.*]

யார் அது, தெரியட்டும்! (*பிரிஷார்ட்டைப் பார்த்து*) ஏ இப்படி முன்னால் வா! நீ யார், இவனை எதற்காகப் பிடித் வைத்திருக்கிறாய்?

[*இராஜாளியை ஒரு வேலைக்காரன் கைய கொடுக்கிறார்.*]

பிரிஷார்ட் : மேன்மை தங்கிய துரையே! தங்கள் காவலர்களி ஒருவன் நான். இந்தத் தொப்பிக்குக் காவலாய் நிற்பவன் இந்த மனிதன் தொப்பிக்குச் சலாம் செய்யாமல் போகல ஞன். நான் கைது செய்வதற்காக இவனைப் பிடித்தேன் இந்த ஜனங்கள் கூட்டமாக வந்து இவனை இழுத்து கொண்டு போகப் பார்க்கிறார்கள்!

ஜெஸ்லர் : (*சிறிது நேரத்திற்குப் பின்*) என்ன, டெல்! உ சக்கரவர்த்தியையும், அவர் பிரதிநிதியாக இங்கே யிருக் என்னையும் அவமரியாதை செய்கிறாயா? உன் இரா

விசுவாசத்தைக் காட்டுவதற்காக அங்கே வைத்துள்ள தொப்பிக்கு மரியாதை செலுத்த மாட்டாயோ? உன் மனத்திலுள்ள கெட்ட நோக்கம் இப்போது அம்பலமாகி விட்டது!

டெல்: மாட்சிமை பொருந்திய ஐய, மன்னியுங்கள்! வேண்டுமென்று நான் செல்லவில்லை. ஏதோ கவனக் குறைவால் நடந்துவிட்டது! மன்னிப்புக் கோருகிறேன். மறுபடி நான் இப்படி நடந்துகொள்ள மாட்டேன்!

ஜெஸ்லர்: (சில நிமிடங்கள் மௌனமா யிருந்துவிட்டு) டெல்! நீ பெரிய வில்லாளனாயிற்றே, அம்பு விட்டால் குறி தவறாதாமே! எல்லோரும் அப்படியே சொல்லுகிறார்கள்!

வால்டர்: ஐயா, அது உண்மைதான்! நூறு அடிக்கு அப்பால் மரத்திலுள்ள ஆப்பிள் கனியை அப்பா ஒரே அம்பால் அடித்து விடுவார்!

ஜெஸ்லர்: இந்தப் பையன், டெல்—உன் மகனா?

டெல்: ஆம், துரையே!

ஜெஸ்லர்: உனக்கு வேறு குழந்தைகள் இல்லையா?

டெல்: மொத்தம் இரண்டு பையன்கள், ஐயா!

ஜெஸ்லர்: இருவரில் யாரிடம் உனக்குப் பிரியம் அதிகம்?

டெல்: ஐயா, இருவரும் என் குழந்தைகள் தானே!

ஜெஸ்லர்: சரி, டெல்! நூறு அடி தூரத்திலிருந்து அம்பால் ஆப்பிளை அடிக்கக்கூடிய வல்லமை உன்னிடம் இருப்பதை எனக்கு நீ நேரில் நிரூபித்துக் காட்டவேண்டும். வில்லைத் தயாராக வைத்துக்கொள்—இந்தப் பையன் தலையில் வைக்கும் ஆப்பிள் கனியைக் குறி வைத்து அடிக்க! ஆனால் ஒன்று—நீ கவனமாய்க் குறி பார்த்து அம்பு விடவேண்டும். ஒரே அம்பில் ஆப்பிளை அடிக்கவேண்டும், தவறினால் உன் தலை போய்விடும்!

[எல்லோரும் திடுக்கிட்டுத் திகைக்கின்றனர்.]

டெல்: ஐயனே! என்ன அசுர வேலையைச் செய்ய ஏவுகிறீர்கள்! நானே...என் குழந்தை தலையிலா!—இல்லை, ஐயா, இல்லை!—நீங்கள் அப்படி உண்மையில் எண்ணிச் சொல்லியிருக்க மாட்டீர்கள்! ஒரு நாளும் இராது! கடவுள்தான்

காக்க வேண்டும்! ஒரு தகப்பனை அப்படிச் செய்யும்படி கேட் மனமார நினைத்தே யிருக்க மாட்டீர்கள்!

ஜெஸ்லர்: டெல்! நீ அப்படிச் செய்துதான் ஆகவேண்டு பையன் தலையில் ஆப்பிளை வைத்து நீ எய்யத்தா வேண்டும். இது என் உத்தரவு, இதை நிறைவேற்றி தீருவேன்!

டெல்: என் வில்லில் அம்பு தொடுத்து என் குழந்ை தலைக்கு நேராக நானே குறி பார்க்கவா? முடியாது, அதற்கு பதிலாக நானே மடிந்தொழிகிறேன்!

ஜெஸ்லர்: வில்லைத் தூக்கு—இல்லையென்றால், உன் குழ தையும் உன்னோடு மரிக்க வேண்டியதுதான்!

டெல்: என்ன! என் குழந்தைக்கு நானே கொலைகாரனவதா உமக்குக் குழந்தைகளில்லை, ஐயா! பெற்றவன் உள்ளத்தி பொங்கும் உணர்ச்சியை நீர் எப்படி அறிய முடியும்!

ஜெஸ்லர்: என்ன! கவனமே யில்லாமல் திரியும் உனக்கு திடீரென்று இவ்வளவு கவனம் வந்துவிட்டதா? உன் வீ உள்ளத்திற்கு ஏற்ற வீர தீரச் செயல்களைச் செய்யக் கண்ணை மூடிக்கொண்டு பாய்ந்து விடுவாய் என்றல்லவா நா கேள்விப்பட்டேன்!

பெர்தா: ஐயா, வேடிக்கை போதும்! இந்த அப்பாவிகள் நீங்கள் விளையாட்டாகச் சொல்வதை, வினையென் எண்ணி நடுங்கி நிற்கிறார்கள்! அவர்களுக்குப் புரியவில்லை

ஜெஸ்லர்: நீ மட்டும் புரிந்து கொண்டு விட்டாயோ! நா வேடிக்கை செய்கிறேன் என்று உனக்கு யார் சொன்னது

[*தலைக்கு மேலே மரத்தில் தொங்கிய ஆப்பி ஒன்றைப் பறிக்கிறார்.*]

இதோ இருக்கிறது ஆப்பிள்! எல்லோரும் தள்ளியிருந் வழி விடுங்கள்! அவன் எவ்வளவு எட்டியிருக்க வேண் டுமோ அதற்கு இடம் விடுங்கள்! காலடியில் எண்ப அடிதான் நான் குறிப்பிடும் தூரம்—அதற்குக் கூடவு கூடாது, குறையவும் கூடாது. நூறடியிலிருந்தும் எய் விடுவதாகப் பெருமை பேசினானே! இது போதும். லாளனே, தாமதமில்லாமல் குறி பார்த்துக்கொள்!

ருடோல்ப் : ஆண்டவனே! நிலைமை முற்றி விட்டதே! உண்மையாகவே உத்தரவு பிறந்து விட்டது! *(குழந்தை வால்டரைப் பார்த்து)* அடேய், பையா, மண்டியிட்டு கவர்னர் துரையிடம் மன்னிப்பு வேண்டு, உயிர்ப்பிச்சை கேளு!

பெரிய வால்டர் : *(தன்னை அடக்கிக் கொள்ள முடியாமல் துடிக்கும் மெல்ச்தலிடம்)* சற்று அடக்கத்தோடு பொறுமையா யிரு— உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்-அமைதியாயிரு!

பெர்தா : இதுவே போதும், ஐயா! ஒரு தந்தையின் உள்ளத்தை இதற்குமேல் புண்படுத்துவது மனிதத்தன்மை யாகாது! ஒரு சிறு குற்றத்திற்காக உயிரையே இழக்க வேண்டியது தண்டனையானால்—அவன் இதற்குள் பத்துத் தடவை இறந்திறந்து பிழைத்தாயிற்று! போதும், அவனை வீட்டுக்குப்போக விடுங்கள்! நீங்கள் யார் என்பதை இப் பொழுது அறிந்திருப்பான். அவன் மட்டுமல்ல, அவன் குழந்தைகளும், குழந்தைகளின் குழந்தைகளும் இனி இதை மறக்கவே மாட்டார்கள்!

ஜெஸ்லர் : ஊம், வழி விடுங்கள்! சீக்கிரம்! நீ ஏனப்பா நிற் கிறாய்? மரண தண்டனை பெற்ற உன் உயிரை நான் அப் போதே யமனுலகிற்கு அனுப்பியிருப்பேன்! ஆனாலும் உனக்கு அதைக் காத்துக்கொள்ள ஒரு வாய்ப்பளித்தேன். உன் உயிர் உன் கண்ணிலும், கையிலும்தான் இருக்கிறது! எல்லோரும் தான் அம்பு விடுகிறார்கள்—ஆனால், இதயத் தின் உணர்ச்சிகளால் கை பதறாமல் எய்பவனே உண்மை வில்லாளன்!

பெரிய வால்டர் : *(அவர் முன்பு முழங்கால் படிய விழுந்து)* பிரபோ! உங்கள் அதிகாரத்திற்கு நாங்கள் தலை வணங்கு கிறோம்; இருந்தாலும் நீதி செலுத்துவதோடு நில்லாமல், சற்று இரக்கமும் காட்டுங்கள்! என் சொத்துக்களில் பாதியை எடுத்துக் கொள்ளுங்கள்—ஏன், பூராவையுமே வைத்துக்கொள்ளுங்கள்—பெற்றவன் கையாலேயே இந் தக் கோரக் கொடுமை நடக்கும்படி கட்டாயப்படுத்த வேண்டாம்!

வால்டர் : தாத்தா, நீங்கள் யாரிடமும் பிச்சை கேட்கவேண்டிய தில்லை! நான் எங்கே நிற்க வேண்டுமென்பதை மட்டும்

உடனே காட்டுங்கள்! நான் அஞ்சவில்லை; நீங்கள் ஏன் அஞ்சி நடுங்குகிறீர்கள்? என் தந்தை ஆகாயத்தில் பறக் கிற பறவையைக்கூட அம்பால் அடிப்பவர்; தன் குழந்தை யின் நெஞ்சிலா பாணத்தை விடுவார்?

ஸ்டாபார்சர் : குதலை மொழியிலே கொஞ்சும் இந்தக் குமரனைப் பார்த்தும்கூட உமக்கு உள்ளம் இளகவில்லையா, ஐயனே

ரோஸல்மன் : எல்லாவற்றிற்கும் மேலே ஒருவன் இருக்கிறன் எவரும் அவனிடம் ஒருநாள் பதில் சொல்லியே ஆக வேண்டும்!

ஜெஸ்லர் : (பையனைச் சுட்டிக் காட்டி)—சீக்கிரம், இவனை அந்த எலுமிச்சை மரத்தில் கட்டுங்கள்!

வால்டர் : என்னையா கட்ட! என்னைக் கட்ட விடமாட்டேன் ஆட்டுக்குட்டிபோல் நானே அசையாமல் நின்று கொள் வேன்—மூச்சுக்கூட விடமாட்டேன்! ஆனல் என்னைக் கயிற்றால் கட்டினால், அதை அறுப்பதுதான் என் முதல் வேலை!

ருடோல்ப் : குழந்தாய், அவர்கள் உன் கண்களை மறைத்து வது துணி கட்டட்டும்!

வால்டர் : கண்களை மறைக்கவா? என் தந்தையின் அம்பை கண்டு நானே அஞ்சி நடுங்கிவிடுவேனே? கண் கொட்டா மல் பார்த்துக் கொண்டே அம்பை வரவேற்பேன்; அசை யாமல் உறுதியோடு நிற்பேன்!.... என்ன அப்பா இன்னு என்ன தயக்கம்! வில்லியம் டெல்லின் வில் வலிமையை உலகம் பார்க்கட்டும்! ஐயாவும் பார்க்க ஆசைப்படுகிறார் நீங்கள் வில்லாளரில்லை என்பது அவர் எண்ணம்—அதை கொண்டே நம்மை ஒழித்துவிடப் பார்க்கிறார். கொடு கோலர் நெஞ்சு குலைய வேண்டாமா, அப்பா! நீங்கள் அம் பைத் தொடுவதும், ஆப்பிள் விழுவதும் கணக்காயிருக்கும்

[அவன் எலுமிச்சை மரத்தடியில் போய் நிற் கிறான், அவன் தலையில் ஆப்பிள் வைக்கப் படுகின்றது.]

மெல்ச்தல் : (குடியானவர்களை நோக்கி) —என்ன! இந்த அக் ரமம் நம் கண்முன் நடக்க வேண்டுமா! நாம் எதற்காக கூடிச் சத்தியம் செய்து கொண்டோம்?

ஸ்டாபாச்சர் : இப்பொழுது ஆத்திரம் பயனற்றது! நம்மிடம் ஆயுதங்களில்லை—சுற்றிலும் பார், காடுபோல ஈட்டிகள் வளைத்துக்கொண்டு நிற்கின்றன!

மெல்ச்தல் : ஐயோ, நாம் செய்யத் தீர்மானித்ததைச் சிறிது முன்னதாக வைத்துக்கொள்ளத் தவறிவிட்டோம். தாமதித்துப் பின்னால்தான் போராட்டம் தொடங்க வேண்டுமென்று யோசனை சொன்னவர்களைக் கடவுள்தான் மன்னிக்க வேண்டும்!

ஜெஸ்லர் : (டெல்லிடம்) இந்த அடிமை நாட்டில் இனி யாருமே வில், அம்பு, கொலைக்கருவிகளைத் தூக்கித் திரியக்கூடாது! அம்புகள் வைத்திருப்பவன் மீதே அம்பு திரும்பிப் பாயும்! ஆனால், நீ வில்லோடு நடமாட விரும்பினால், அதை அநுமதிக்கிறேன்—அதற்கு நான் சொன்னபடி குறிபார்த்து அடிக்க வேண்டியதுதான்!

டெல் : (*வில்லை வளைத்து அம்பைப் பொருத்திக் கொண்டு*) அங்கே, வழியை மறைக்காதீர்கள் !

ஸ்டாபாச்சர் : என்ன, டெல்? உன்னால் முடியாது—ஒரு போதும் முடியாது!—உன் உடலே நடுங்குகின்றதே! கை நடுங்குகின்றது, காலும் தள்ளாடுகின்றதே!

டெல் : (*வில்லை நழுவவிட்டு*)—வில்லே காற்றில் மிதப்பது போலல்லவா கண்ணுக்குத் தோன்றுகின்றது!

பெண்கள் : இனி கர்த்தரின் கருணைதான் காக்க வேண்டும்!

டெல் : மன்னியுங்கள், ஐயா! அம்பு விட முடியாது! இதோ இருக்கிறது என் இதயம். நன்றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்! உங்கள் குதிரை வீரர்களைக் கூப்பிடுங்கள்! என் உடல் மீது குதிரைகளை ஓட்டி என்னை நசுக்கிவிடுங்கள்!

ஜெஸ்லர் : எனக்கு வேண்டியது உன் உயிரல்ல—குறி தவறாத அம்புதான்!.... மகாவீரனல்லவா நீ! பெரும் புயலிலே கூட ஒருவனைக் காக்க வேண்டுமானால் ஏரியில் துணிந்து ஓடம் ஓட்டுவாயே! எல்லோரையும் காப்பாற்றும் நீ, இப்போது உன்னையே காத்துக்கொள்ள முடியாதா, என்ன!

[*டெல் மனத்துள் நிகழ்ந்து கொண்டிருந்த பயங்கரப் போராட்டத்தின் விளைவாக உயரே வானத்தையும், ஒரு சமயம் கவர்ன*

ரையும் பார்க்கிறன்; திடீரென்று த
புட்டியிலிருந்து இரண்டாவது அ
ஒன்றை உருவி அதை நெஞ்சில் சட்டை
குள் மறைத்து வைத்துக் கொள்கிறன்.]

வால்டர்: (மரத்தடியில்)—அப்பா! வில்லை வளையுங்கள்; என குப் பயமேயில்லை! தைரியமாய் அம்பு விடுங்கள்.

டெல்: (மிகவும் முயற்சி செய்து)—நடந்துதான் ஆகவேண்டு போலிருக்கிறது!

ருடென்ஸ்: (இவ்வளவு நேரமும் மிகுந்த மனக் குழப்பத்துடன் நின்று கொண்டிருந்து விட்டுத் தன்னை அடக்கிக் கொள்ள முடியாமல்) இந்த வேலை இத்துடன் நிற்கட்டும், பிரபு உங்கள் வல்லமையைக் காட்ட இவ்வளவே போதும். அள வுக்கு மிஞ்சினால், கொடுமையும் பயனற்றுப் போகும் அதிகமாய் வளைத்த வில் தூள்தூளாக ஒடிந்துவிடும்.

ஜெஸ்லர்: இளைஞனே, உன்னிடம் நான் யோசனை கேட் வரும்வரை வாயை மூடிக்கொண்டிரு!

ருடென்ஸ்: நான் பேசித்தான் ஆகவேண்டும், பேசவும் செய் வேன்! அரசரின் கௌரவத்தில் எனக்கும் அக்கறை உண்டு. ஆனால், இத்தகைய கொடிய செயல்களால் அவர் மேல் வெறுப்பு வளரும். இங்கு இப்பொழுது நடப்பது மன்னரின் உத்தரவுப்படிதானா? இதை அவர் கனவிலும் கருதியிருக்க முடியாது என்று எனக்குத் தெரியும். அது நிச்சயம். என் நாட்டு மக்களுக்கா இந்தக் கொடுமை உங்கள் அதிகார வரம்பை நீங்கள் மீறிப்போகிறீர்கள்!

ஜெஸ்லர்: ஆகா, உனக்கே இவ்வளவு தைரியம் வந்து விட்டதா?

ருடென்ஸ்: எண்ணத் தொலையாத கொடுமைகளை யெல்லாம் கண்டிருந்தும், வாய்மூடி மௌனியாயிருந்தேன். பார்த்துப் பார்த்து என் இரு கண்களும் ஒளியைப் பார்க்கவே கூசி விட்டன. பொங்கியெழுகின்ற குமுறலையும் கோபத்தையும் அடக்கி அடக்கி நெஞ்சும் கருகிவிட்டது; இனியும் வாயடைத்திருந்தால், அது அரசருக்கும், என் அருமைத் தாய்நாட்டிற்குமே துரோகமாகும்!

பெர்தா: *(அவனுக்கும் கவர்னருக்கும் இடையே பாய்ந்து நின்று)*—அட ஆண்டவனே! *(ருடென்ஸைப் பார்த்து)* எரிகிற நெருப்பிலே நீயுமா எண்ணெய் ஊற்றவேண்டும்?

ருடென்ஸ்: இதற்காகத்தானு என் மக்களுக்கு இவ்வளவு காலம் நான் துரோகம் செய்துவந்தேன்? மன்னரை அண்டியிருந்தால், என் மக்களும் அமைதியாக வாழமுடியும் என்று நம்பி நம்பி மோசம் போனேன்! என் கண்களை மறைத்திருந்த திரை அகன்றுவிட்டது! என் நடத்தை பயங்கரப் பாதலத்தில் கொண்டு சேர்த்துவிட்டது. நல்ல எண்ணத்துடனேயே என் மக்களுக்கு நாசம் தேடிவிட்டேன்! என் சிந்தனையை நீங்கள் சிதறச் செய்துவிட்டீர்கள், என் இதயத்திலேயே விஷத்தைக் கலந்துவிட்டீர்கள்!

ஜெஸ்லர்: துடுக்குடன் மிடுக்காகப் பேசுகிருய்! எனக்கு அடங்கிய பிரபுக்களில் ஒருவனுகிய நீ என்னிடமே—

ருடென்ஸ்: மன்னரே எனக்கு மேலேயுள்ள பிரபு, நீரல்ல! உம்மைப் போலவே நானும் சுதந்திரமாய்ப் பிறந்தவன், வீரனுக்குரிய பண்புகளில் உமக்கு நான் குறைந்தவனுமல்லன்! மன்னரின் பெயரால் பதவியிலுள்ள அதிகாரி, அந்த அதிகாரத்திற்கே அவமானத்தைத் தேடியபோதிலும், மன்னரின் மாட்சிக்கு மரியாதை வைக்கிறேன். ஆயினும், கூப்பிடும் உமது படை வீரர்களை!—இதோ சவால் விடுகிறேன்!—நான் இவர்களைப் போல *(குடியானவர்களைச் சுட்டிக்காட்டி)* நிராயுதபாணியல்லன்—கையிலே நெடிய வாள் பற்றி நிற்கிறேன்! போராடச் சொல்லும் உம் வீரர்களை! முதலில் எவர்கள் வருகின்றனர்?

ஸ்டாபாச்சர்: *(உரத்த குரலில்)*—அதோ ஆப்பிள் விழுந்துவிட்டது!

[எல்லோரும் ஜெஸ்லருக்கும் ருடென்ஸுக்கும் நிகழ்ந்த சொற்போரைக் கவனித்துக் கொண்டிருக்கையில், டெல் ஆப்பிளை அம்பால் அடித்துத் தள்ளிவிட்டான்.]

ரோஸல்மன்: பகவானே, உன் அருளால் பையனுக்குச் சேதமொன்றுமில்லை!

பல குரல்கள் : ஆப்பிளை அடித்தாயிற்று! ஆப்பிளை அடித் தாயிற்று !

[பெரிய வால்டர் மயக்கமடைந்ததால், பெர்த அவரைத் தாங்கிப் பிடித்துக் கொள்கிருள்

ஜெஸ்லர் : எப்படி ! அடித்துவிட்டாஞ ஆப்பிளை ? வெறியன்

பெர்தா : (பெரிய வால்டரிடம்)—உமது பேரன் சுகமாயிரு கிருன் ! மாமா, மாமா ! கண்ணை விழித்து அவனைப் பாரும்

வால்டர் : (ஆப்பிளைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்து)—அப்பா இதோ ஆப்பிள் ! என் தலை ரோமத்திலேகூட உங்கள் அம்பு படாது என்று எனக்குத் தெரியாதா, அப்பா !

[அம்புவிட்டபின் அதைத் தொடர்ந்து செ பவன் போல டெல் முன்புறம் சாய்ந் வண்ணமே நிற்கிருன் ; பெட்டி-வில் கைவ விருந்து கீழே விழுகின்றது. பையன் வ வதைக் கண்டதும், கைகளை நீட்டிய வண் ணம் எதிர்கொண்டு சென்று, அவனை அப்படியே தூக்கி ஆவேசத்துடன் மார் போடு அணைத்துக் கொண்டு, முழங்கால் படிந்து தரையில் அமர்கிருன். எல்லோரு உருகி நின்று பார்க்கின்றனர்.]

பெர்தா : ஆ, கடவுளின் கருணையே கருணை !

பெரிய வால்டர் : என் செல்வக் குழந்தைகளே !

ஸ்டாபாச்சர் : ஆண்டவன் சித்தம் ! அவரைப் போற்றுங்கள்

லிதோல்ட் : இங்குப் பாய்ந்த அம்பைப் பற்றி இந்த உலகு உள்ளவரையில் மக்கள் பேசுவார்கள், பேசிக்கொண்டே யிருப்பார்கள் !

ருடோல்ப் : இந்த மலைகளெல்லாம் நிலைத்து நிற்கும் வரை வில்லாளன் டெல்லுடைய கதையை மக்கள் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள் !

[ஆப்பிளைக் கவர்னரிடம் கொடுக்கிருன்,

ஜெஸ்லர் : என்ன ஆச்சரியம் ! நடு மத்தியில் ஆப்பிளை அம்பு துளைத்திருக்கிறதே ! இதை மெச்சத்தான் வேண்டும் !

ரோஸல்மன் : எய்தவன் சரியாகத்தான் எய்து விட்டான், ஆனல் எய்யச் சொன்னவன் ஆண்டவனையே பகைத்து விட்டான் !

ஸ்டாபாச்சர்: எழுந்திரு, டெல்—நிம்மதியாயிரு!—வீரன் வேலையை வீரத்தோடு முடித்துவிட்டாய்! இனி வீட்டுக்குப் போகலாம், வா!

ராஸல்மன்: வாருங்கள், வாருங்கள்! பெற்றவளிடம் முதலில் பிள்ளையைக் கொண்டுபோய்ச் சேர்ப்போம், வாருங்கள்!

[*அவர்கள் டெல்லை வெளியே அழைத்துப் போக ஏற்பாடு செய்கின்றனர்.*]

ஜெஸ்லர்: டெல், சற்று நில்!

டெல்: (*திரும்பி வந்து*)—ஐயா, என்ன?

ஜெஸ்லர்: இரண்டாவது அம்பு ஒன்று எடுத்தாயே—அதை உன் மார்புச் சட்டைக்குள் வைத்ததை நான் பார்த்தேன்! அந்த அம்பு எதற்காக?

டெல்: (*திகைப்படைந்து*)—ஐயா, அதுவா? அது வில்லாளர் வழக்கம்!

ஜெஸ்லர்: இல்லை, டெல், உன் மறுமொழியில் எனக்குத் திருப்தியில்லை. வேறு காரணம் இருக்கிறது—முக்கியமான காரணம்! டெல், உண்மையைச் சொல்லு, ஒளிவு மறைவின்றிச் சொல்லு! அது எதுவாயினும், கவலையில்லை—உன் உயிருக்கு ஒரு கேடும் வராது! இரண்டாவது அம்பு எதற்காக?

டெல்: ஐயா, என் உயிருக்குத் தாங்கள் அபயம் கொடுத்துவிட்டதால், உள்ளதையே சொல்லிவிடுகிறேன்!

[*மார்பில் மறைந்திருந்த இரண்டாவது அம்பை வெளியே எடுத்து, பயங்கரமாக ஒரு முறை ஜெஸ்லரைப் பார்த்துக் கொண்டு*]

இந்த இரண்டாவது அம்பு உமக்கு நேர்ந்து வைத்த அம்பு! முதல் அம்பு குறி தவறி என் குழந்தையைக் கொலை செய்திருந்தால், இது குறி தவறாமல் நிச்சயம் உம்மைத் தீர்த்திருக்கும்!

ஜெஸ்லர்: நல்லது, அப்படியா, டெல்! உன் உண்மையை மெச்சினேன்! உனக்கு முதலிலேயே நான் உயிர்ப் பிச்சை அளித்துவிட்டதை இப்பொழுதும் மாற்றவில்லை. ஆனால் உன் உள்ளத்திலுள்ள விஷம் வெளிவந்து விட்டது!, இனி

நீ சந்திர சூரியரின் ஒளியைக் காணும்படி வெளியேயிருத்தல் அபாயமேயாகும்! உன் அம்புகளும் என்னைத் தேடி வராதபடி, உன்னை அடக்கமான இடத்தில் வைக்க வேண்டியது அவசியம். சிப்பாய்களே! இவனைப் பிடியுங்கள் கட்டுங்கள்!

[உடனே டெல் கயிறுகளால் கட்டப் பெறுகிறான்.]

ஸ்டாபாச்சர்: கடவுளின் அருட் கரங்களால் இப்பொழுது தானே அவன் காப்பாற்றப் பட்டான்! அவனையா இன்னும்—?

ஜெஸ்லர்: இனி அந்த அருட்கரங்களுக்கும் எட்டாத இடம் தான் சரி! (சிப்பாய்களிடம்) குஸ்னுட்டுக்கு இவனைக் கொண்டு செல்லுங்கள்—நானும் இதோ வருகிறேன்!

ரோஸல்மன்: அப்படிச் செய்ய உமக்கு அதிகாரமில்லை! சுவிஸ் பிரஜையை வெளியிடத்தில் கொண்டுபோய் அடைத்து வைக்கச் சக்கரவர்த்திக்கே உரிமை கிடையாது! எங்கள் சுதந்திரச் சாசனங்களைப் படித்துப் பாரும்!

ஜெஸ்லர்: சாசனமா? நான்தான் சாசனம், அரசாங்கமே நான்தான், நான் இட்டதுதான் சட்டம்! நீங்கள் எல்லோரும் கலகக்காரர்கள்! நானும் எல்லாவற்றையும் அறிந்துதான் இருக்கிறேன். உங்களில் இந்த ஒருவனுக்கு நேர்ந்துள்ள கதியைப் பார்த்த பிறகாவது, மற்றவர்கள் அடங்கி நடந்து பிழைத்துக் கொள்ளுங்கள்!

[அவர் வெளியேறுகிறார். பெர்தா, ருடென்ஸ், ருடோல்ப் முதலியோரும் சிப்பாய்களும் தொடர்ந்து செல்கின்றனர். பிரிஷார்ட்டும் லித்தோல்டும் மட்டும் தங்கியிருக்கின்றனர்.]

பெரிய வால்டர்: எல்லாக் கதையும் முடிந்து விட்டது! அவர் என்னையும் என் குடும்பத்தையுமே அழித்துவிடத் தீர்மானித்து விட்டார்!

ஸ்டாபாச்சர்: டெல், இனி நம் திட்டத்தின் கதி என்ன? நீ சிறைப்பட்டதும், நாங்கள் எல்லோருமே சிறைப்பட்ட மாதிரித்தான்!

குடியானவர்கள்: இனி யாரை நம்பி வாழப் போகிறோம்? எங்கள் ஒரு நம்பிக்கை நீதானே!

தோல்ட் : *(நெருங்கி வந்து)* டெல், உனக்காக நான் வருத்தப் படுகிறேன்—ஆனல் நான் என் கடமையைச் செய்ய வேண்டியவன்.

டெல் : வந்தனம் !

வால்டர் : *(ஆர்வத்தோடு தந்தையைக் கட்டிக் கொண்டு)* அப்பா ! அப்பா ! அருமை அப்பா !

டெல் : *(இரு கைகளையும் உயர்த்தி வானத்தைக் காட்டி)*—அங்கே உயரே இருக்கிருர், உன் தந்தை ! அவரை வணங்கு. *(குழந்தையை இறுக அணைத்துக் கொள்கிருன்.)*

[காவலர் கிளம்பியதும் டெல் பையனையும் நண்பர்களையும் விட்டுவிட்டு வேகமாக அவர்களைத் தொடர்ந்து செல்கிருன்.]

அங்கம்—IV

காட்சி 1

நான்கு மாவட்டங்களின் நடுவிலுள்ள ஏரியின் கிழக்குக் கரை. செங்குத்தாக மேலோங்கி நிற்கும் பாறைகள் சூழ்ந்து, சுற்றுப்புறக் காட்சியை மறைக்கின்றன. ஏரி நீர் கொந்தளித்து எழும்புகிறது—கடும் காற்று 'விர்விர்' என்று வீசிய வண்ணமாயிருக்கின்றது. இடையிடையே மின்னலும் இடியும்.

குன்ஸ் : எல்லாம் நானே என் கண்ணால் கண்டேன். நா சொன்னது அத்தனையும் அப்படியே நடந்தது—து கூட மாற்றமில்லை, நம்பு !

ருவோடி : டெல் கைதியாகிவிட்டான், குஸ்னட்டுக்கு அ னைக் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள்! நாட்டி சுதந்திரத்திற்காக ஒரு போராட்டம் கிளம்பின அவன் இல்லாமல் என்ன நடக்கும்? நாட்டிலே முத மையானவன், வீரமே உருவாக வந்தவன் !

குன்ஸ் : கவர்னர் தாமே அவனுடன் ஓடத்திலேறி ஏரியி செல்லுகிறார், புளுவெல்லன் துறையில் அவர்கள் படகேற போது நான் பார்த்தேன். புயல் ஆரம்பித்ததால் நா இந்தப் பக்கம் வந்துவிட்டேன், அவர்களும் உடனே புறப்பட்டிருக்க முடியாது !

ருவோடி : டெல் கைகளில் விலங்குகள்—கவர்னர் கை லேயே சிக்கிவிட்டானே ! இனி அவன் யானைவாய் கரும்புதான்! பிழிந்துவிடுவார்கள்; மேற்கொண்டு பக ஒளியை அவன் பார்க்க முடியாது ! வெளியே தலை நீட் விட்டால், அவனுக்கு அதிகாரிகள் செய்த கொடுமை களுக்குப் பழி வாங்குவான் என்று, பெட்டிப் பாம்பா அடைத்தே வைப்பார்கள்.

நன்ஸ் : அதோடு, நமது முதுபெருங் கிழவர், தேசபக்தர் வெர்னர் பிரபு சாகக் கிடக்கிருராம்!

நவோடி : சரிதான்—தொலைந்தது நம் கடைசி நம்பிக்கையும்! ஜனங்களின் உரிமைகளைப் பற்றி அவராவது அடிக்கடி எடுத்துப் பேசி வந்தார். அந்தக் குரலும் ஒடுங்கிப் போகும்!

நன்ஸ் : புயல் அதிகமாய்க்கொண்டே வருகிறது. வணக்கம்! நான் போய்க் கிராமத்தில் தங்கியிருக்க வேண்டும்—இன்றைக்கு இனிமேல் எங்குமே செல்ல முடியாது! *(அவன் வெளியே போகிறுன்.)*

நவோடி : டெல் கைதி; வெர்னர் பிரபுவும் கண்களை மூடிவிடுவார்! இனிமேல் கொடுங்கோலுக்குக் கொண்டாட்டம் தான்—வெட்கம் மானமில்லாமல் வெளிப்படையாகவே கொக்கரிக்கலாம்! உண்மையின் வாய் ஊமையாக அடைத்துப்போகும்—கண்ணும் குருடாகும்—காப்பாற்றும் கைகளிலே தளையைப் பூட்டிவிடுவார்கள்!

யன்னி : இடியும் மேகமும்! இனி நாம் இங்கேயிருக்க முடியாது, போவோம்!

வோடி : இடிகள் இடிக்கட்டும்! வானத்தைப் பொத்துக்கொண்டு மழை பொழியட்டும்! பிரளயமே வரட்டும்! நாடெல்லாம் வெள்ளத்தில் மிதந்து ஒழியட்டும்! இந்தத் தலைமுறை மக்களெல்லாம் அழிந்து, எல்லாம் காடாகி, எங்கும் கரடிகளும் ஓநாய்களுமாகத் திரியட்டும்! இனி நாடெல்லாம் அவைகளுக்குத்தான் சொந்தம்! சுதந்திரம் இல்லாத நாட்டில் எந்த மனிசப் பயல் வாழ்வான்!

யன்னி : அப்பா, என்றுமில்லாத சண்டமாருதம் வீசுகிறது!

வோடி : *(பழைய நினைவிலேயே)* தன் குழந்தை தலையிலே குறி வைத்து அடிப்பதா! உலகம் தோன்றிய நாள்முதல் இந்தமாதிரி அநியாயம் நடந்திருக்குமா? கதைகளிலாவது காணமுடியுமா? கவர்னர் தலையில் இன்னும் இடி விழவில்லையே! பூமி பிளந்து அவனை விழுங்கவில்லையே! இனி மலைகளெல்லாம் புரண்டு, கடல்களெல்லாம் பொங்கிப் பரவட்டும்! பஞ்ச பூதங்களும் கிளம்பிப் பாரகத்தையே அழிக்கட்டும்! மனிதப் பூண்டே அற்றுப்போகட்டும்!

யென்னி : ஏரியிலிருந்து எங்கோ மணி ஓசை கேட்கிறது புயலில் மாட்டிக்கொண்டு படகு எங்கோ தவிக்கிற போலிருக்கிறது !

ருவோடி : இந்தப் புயல் ஓடங்களையெல்லாம் பந்தாடிவிடு மீட்சியே கிடையாது !

யென்னி : *(பாறைமீது ஏறிச் சுற்றிப் பார்த்து)* அப்பா, அப்ப புளுவெல்லன் துறைப் பக்கத்திலிருந்து ஓடம் ஒன் வருகிறது !

ருவோடி : கடவுள்தான் அதிலுள்ளவர்களைக் காக்க வேண்டு நாலு பக்கமும் இப்படி மலைகள் சூழ்ந்து நின்றால், புயலு குத்தான் போக்கு எங்கே ?

[அவனும் உயரமான இடத்தில் ஏறிப் பா கிறான்.]

யென்னி : கவர்னரின் ஓடம், அப்பா ! சிவப்பு நிறம், கொ யும் பறக்கிறது !

ருவோடி : ஆண்டவர் நீதி ! குற்றத்திற்கு உடனே தண்டனை கொடுக்கிறார் கருணாநிதி ! கவர்னர் கைதியை பிடித்துக்கொண்டு பயணமாகிற கோலம் இது ! எலே, ஓட நாசமாய்ப் போகவேண்டுமென்று ஆண்டவனைத் தொழு

யென்னி : என்ன, அப்பா ! மாமன் டெல்லும் அதில் இரு கிறாரே ! அங்கும் இங்குமாக அலைந்து—இப்போது கண் ணுக்கே தெரியவில்லையே !

ருவோடி : அதோ தொலைவில் நீருக்கு மேலே ஓடம் தலை தூக்குகிறது ! பக்கத்திலே ஹாக்மெஸ்ஸர் பாறை—மெது வாக அதைச் சுற்றி வராவிட்டால், பாறையிலே மோதி தூள் தூளாகிவிடும்! இந்த நேரத்தில் டெல் ஒருவனே ஓடத்தைக் காப்பாற்ற முடியும் ! அவனைத்தான் கையையு காலையும் கட்டிப் போட்டிருக்கிறார்களே !

[வில்லியம் டெல் வில்லும் கையுமாக வே மாக வருகிறான்: சுற்றிலும் வெறித்து பார்த்துத் திகைக்கிறான். மேடையின் நடுவிற்கு வருகையில், அவன் முழ தாளிட்டு விழுந்து, கைகளால் வானத்தை யும் பூமியையும் சுட்டிக் காட்டிக்கொண்டே இறைவனை வணங்குகிறான்.]

யன்னி : அப்பா, அதோ முழங்கால் பணிந்து விழுந்திருப் பவன் யார் ?

வோடி : பூமியைக் கைககளால் கட்டிக் கொள்கிருன் ! புத்தி தடுமாறியவன் போலிருக்கிறதே!

யன்னி : (முன்புறம் வந்து) யாரைப் பார்க்கிறேன்! அப்பா, அப்பா, உடனே வா, வந்து பார் !

வோடி : தெய்வமே ! நம்முடைய டெல் அல்லவா? ஓ, டெல் ! இங்கே எப்படி வந்தாய்? சொல்லு, சொல்லு !

யன்னி : நீர் ஓடத்தில் போகவில்லையா ? விலங்கு போட்ட கைதியாக—

வோடி : குஸ்ஞட்டுக்குக் கொண்டுபோய்விட்டதாகச் சொன் ஞர்களே !

டெல் : நான் சுதந்திரமாக இருக்கிறேன் !

வோடியும், யென்னியும் : இதென்ன மாயம் ?

யென்னி : எங்கேயிருந்து வருகிறீர், மாமா ?

டெல் : அந்தப் படகிலிருந்து—

வோடி : எப்படி ?

யென்னி : கவர்னர் எங்கே ?

டெல் : அலைகளின் மேலே ஓடத்தில் தவழ்கிருர் !

வோனி : இப்படியும் நடந்திருக்குமா ? என்ன ஆச்சரியம் ! என்ன ஆச்சரியம் ! விலங்கு என்னவாயிற்று ? புயலை எப்படித் தாண்டி வந்தாய் ?

டெல் : எல்லாம் கடவுள் சித்தம் !

வோடியும், யென்னியும் : முழு விவரத்தையும் சொல்லும் ! எங்களுக்கு ஒரே துடிப்பாயிருக்கிறது.

டெல் : அல்டார்பில் நடந்ததெல்லாம் தெரியுமல்லவா?

வோடி : ஓ, தெரியும் !

டெல் : என்னைப் பிடித்துக் கட்டிக் குஸ்ஞட்டிலுள்ள தமது மாளிகைக்குக் கொண்டுவரும்படி கவர்னர் உத்தர விட்டார் !

ருவோடி : புளூவெல்லன் துறையில் ஏறித் தாமும் கூட வந்தாராமே? எப்படித் தப்பி வந்தாய்? முதலில் அதைச் சொல்லு.

டெல் : படகில் சங்கிலிகளால் பிணித்து என்னை ஓர் ஓரத்திலே கிடத்தியிருந்தார்கள். கண்கள் இருண்டு, மனமும் இருண்டு கிடந்தேன். வீடு, வாசல், பெண்டு, பிள்ளைகள் யாரையும், எதையும் இனிப் பார்க்க முடியாதே என்ற ஏக்கம் ஒரு புறம்! ஒளி அறியாத எந்த இருட்டறையில் தள்ளுவார்களோ என்ற துக்கம் ஒருபுறம்! ஏரி நீரையே பார்த்துக் கொண்டிருந்தேன்!

ருவோடி : எவ்வளவு கஷ்டம்!

டெல் : ஓடம் வந்துகொண்டிருந்தது; எங்கிருந்தோ புயலும் வந்துவிட்டது! சூறைக் காற்றிலே இறகு பறப்பதுபோல், ஏரிமீது படகு பறந்து கொண்டிருந்தது. என்னென்னவோ செய்து பார்த்தார்கள், எதுவும் பலிக்கவில்லை. கவர்னர், படகோட்டிகள், சிப்பாய்கள் எல்லாரும் ஓய்ந்து அயர்ந்து கிடந்தார்கள். தங்களுக்கெல்லாம் பூமியிலே சமாதியில்லை என்றும், தாங்கள் நீரிலேயே வாய் பிளந்து மிதக்க வேண்டியதுதான் என்றும் கவலைப்பட்டுக் கதறினார்கள். கடைசியாகக் கவர்னரின் ஆட்களில் ஒருவன் 'டெல் ஒருவனே இந்த நேரத்தில் ஓடத்தைக் காக்க முடியும்!' என்றான். கவர்னரும் இசைந்து, என் கட்டுக்களை அவிழ்த்து விடச் சொன்னார். 'புயலிலிருந்து எங்களைக் காப்பாயா!' என்று என்னை வேண்டினார். 'சரி' யென்று சுங்கானைக் கையிலே பிடித்து ஓடத்தைத் திருப்பினேன். மலைபோல் எழுந்த அலைகளின் மீது படகு ஏறி ஏறி இறங்கிற்று. துடுப்பைப் பிடித்து ஒரு மாதிரியாகச் சமாளித்துக் கொண்டு, எந்தப் பாறை முதலில் கண்ணில் படுகிறதோ அதிலே குதித்துத் தப்பிக்கொள்ள வேண்டுமென்று கவனித்துக்கொண்டே வந்தேன். கடவுளைத் தொழுதேன். கடைசியாக ஒரு பெரிய பாறை தென்பட்டது!

ருவோடி : எனக்கு அதை நன்றாகத் தெரியும். செங்குத்தான பாறை; ஆக்ஸென்பர்கின் அடிவாரத்தில் இருப்பது!

டெல் : ஆமாம். அதை நெருங்குகையில், எல்லோரையும் ஊக்கமாகத் துடுப்புக்கள் போடச் செய்தேன். தூரத்தில்

கிடந்த என் வில்லேயும் புட்டிலேயும் கடைக்கண்ணுல் கவனித்துக் கொண்டேன். பாறை அருகில் வருமுன்பே, சட்டென்று வில்லேயும் புட்டிலேயும் எடுத்துக்கொண்டு, ஒரே பாய்ச்சலில் வெளியே குதித்துப் பாறையைப் பற்றிக் கொண்டு, என் முழுப் பலத்துடன் ஓடத்தைப் பின்புறமாகக் கால்களால் எற்றினேன். அவ்வளவுதான், ஓடம் வெகு தூரம் சென்றுவிட்டது. நான் பாறையிலேறி இங்கு வந்து விட்டேன்!

ருவோடி: இறைவனுடைய மாய உதவிதான் இது! என்னுல் இந்தக் கதையை நம்பவே முடியவில்லே! அந்தப் படுபாவி கவர்னர் புயலுக்குத் தப்பிப் பிழைத்துவிட்டால், இன்னும் படாத பாடு படுத்துவானே! இப்பொழுது நீ எங்கே போக வேண்டும்?

டெல்: கவர்னர் புருன்னனில் இறங்கி சுவிஸ் வழியாக என்னேத் தம் மாளிகைக்குக் கொண்டுபோக வேண்டும் என்று படகில் பேசிக்கொண்டார்கள்.

ருவோடி: தரை மார்க்கமாகவே போகத் திட்டமிட்டிருந்தார்களோ? அப்படியானுல், உடனே நீ எங்காவது ஓடி மறைந்து கொள்ள வேண்டும்! இனியும் ஆண்டவன் என்ன செய்வார்! எல்லாம் உன் பொறுப்புத்தான்!

டெல்: அது சரிதான்; ஆர்ந்துக்கும் குஸ்னுட்டுக்கும் இங்கிருந்து குறுக்குப் பாதை எது, சொல்லு!

ருவோடி: ஸ்டீனன் வழியாக ஒரு பெரிய பாதை உண்டு. அதிலே போனுல் யாரும் கண்டுகொள்ள முடியும். அதை விடச் சுருக்கமான பாதை லோவர்ட்ஸ் வழியாகப் போகிறது. என் பையனேக் கூட்டிப் போ; அவன் காட்டுவான் அந்த வழியை.

டெல்: (*கையை நீட்டி அவன் கையைக் குலுக்கிவிட்டு*) வணக்கம்! கடவுள் அருள் செய்வார்!

[*போகும்போது அவன் திரும்பிப் பார்க்கிருன்.*]

ருட்லியிலே நடந்த நம்மவர் கூட்டத்திற்கு நீயும் போயிருந்தாயல்லவா? உன் பெயரையும் சொன்னதாக நினேவிருக்கிறது!

ரூவோடி: போயிருந்தேன், போராட்டத்தில் சேருவதாக சத்தியமும் செய்து கொடுத்திருக்கிறேன்!

டெல்: அப்படியானால், உடனே தயவு செய்து பர்க்லெனுக் நீ போகவேண்டும்—இந்த ஓர் உதவி எனக்குச் செய் என் மனைவி தனியே தவித்துக் கொண்டிருப்பாள். அவளை கண்டு நான் தப்பி வந்து சேமமாய்த் தலைமறைவா யிருப் தாகச் சொல்லி வரவேண்டும். அங்கேயே அவள் தந்தை யையும், ரூட்லியில் சபதம் செய்துகொண்ட மற்ற எல்லா தோழர்களையும் நீ சந்திக்கலாம். எல்லோரையும் ஊக் மாகவும், தைரியமாகவும், இடைவிடாமல் உழைக்க சொல்! 'டெல் வெளியே வந்துவிட்டான், அவனிடமிருந் விரைவிலே பெரிய செய்தி ஒன்று வரும்!' என்று தெரிவி

ரூவோடி: என்ன செய்தி? உன் நோக்கம்தான் என்ன எனக்குத் தெரியப்படாதா?

டெல்: காரியம் முடியட்டும்—பேசிக்கொள்வோம்!

[போகிறான்.]

ரூவோடி: யென்னி, ஓடு! கூடப்போய் வழி காட்டு! டெல்லை கடவுள் கைவிடமாட்டார்! அவனும் நினைத்ததை நிறை வேற்றியே தீருவான்!

காட்சி 2

வெர்னர் பிரபுவின் மாளிகை. கட்டிலில் பிரபு மரண அவஸ்தையில் சாய்ந்து படுத்திருக்கிறார்; பெரிய வால்டர், ஸ்டாபாச்சர், மெல்ச்தல், கோன்ராடு ஆகியோர் அவரைச் சுற்றியிருந்து கவனிக்கிறார்கள்; குழந்தை வால்டர் அவருக்கு முன்பு முழங்கால் படிந்து பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பெரிய வால்டர்: எல்லாம் முடிந்துவிட்டது! இனி நம்பி கையே கிடையாது!

ஸ்டாபாச்சர்: ஆனாலும், இது மரணம் போலவே இல்லை உதடுகளில் இறகு இன்னும் அசைகிறது, பார்! அமை யான தூக்கம்; சிரித்த முகம் அப்படியே இருக்கின்றது!

[கோன்ராடு கதவுப் பக்கம் போய்த் திரு கிறான்.]

பெரிய வால்டர்: யார் அது?

கோன்ராடு: உன் மகள், ஹெட்விக்! உன்னிடம் பேச வேண்டுமாம்; குழந்தை வால்டரையும் பார்க்கவேண்டுமாம்!

பெரிய வால்டர்: (எழுந்துகொண்டு) நானே ஆறுதலின்றித் தவிக்கிறேன்; அவளுக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்! எல்லாத் துக்கமும் என் தலைமேலேதான்!

ஹெட்விக்: (வேகமாக ஓடிவந்து) என் குழந்தை எங்கே? அவனை நான் பார்க்க வேண்டும்—பார்த்தாக வேண்டும்!

ஸ்டாபாச்சர்: அமைதியாயிரு, அம்மா! கிழவர் மரணாவஸ்தையில் கிடக்கிறார்!

ஹெட்விக்: ஓ வால்டர், என் கண்மணி! உயிரோடு வந்து சேர்ந்தாயா, கண்ணு!

வால்டர்: அம்மா!

ஹெட்விக்: அது உண்மைதானா? நீ காயமில்லாமல் தப்பிவிட்டாயா? (கவலையோடு ஆத்திரமாக அவனை உற்றுப் பார்த்து.) அப்படியும் நடந்திருக்குமா? உன்னைப் பார்த்தா அம்பு வந்தது? அவரால் எப்படி முடிந்தது? தன் குழந்தை மீதே அம்பு தொடுப்பவருக்கு இதயமே இருந்திராது!

பெரிய வால்டர்: (அளவில்லாத துக்கத்தோடு) அவர் அப்படிச் செய்ய நேர்ந்தது—இருவர் உயிரையும் காப்பதற்காக!

ஹெட்விக்: அப்படி அம்பு விடுவதைவிடத் தாமே அந்த இடத்தில் உயிரை விட்டிருக்கலாமே!

ஸ்டாபாச்சர்: இருவரும் உயிர் பிழைத்ததற்கு நீ கடவுளைக் கும்பிட வேண்டும்!

ஹெட்விக்: என்ன ஆகியிருக்கும் என்று எனக்குத் தெரியாதா? கர்த்தரின் கருணைதான் காப்பாற்றியிருக்கிறது. இன்னும் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்தாலும், நான் இதை மறப்பேனா? மகனைக் கட்டி வைத்து, அவன் மேலே தகப்பன் விட்ட அம்பு என் நெஞ்சில் பாய்ந்து கொண்டேயிருக்கும்!

மெல்ச்தல்: அவன் அப்படிச் செய்யும்படி எவ்வளவு கட்டாயப் படுத்தப்பட்டான், தெரியுமா உனக்கு?

ஹெட்விக்: ஆண்பிள்ளை உள்ளமே முரட்டு சுபாவம்தான் அவரை யாரேனும் அவமானப்படுத்திவிட்டால், அப்புறம் அவர் தாயென்றும் பிள்ளை யென்றும் பார்க்கவே மாட்டார்!

கோன்ராடு: அவனுக்கு நேர்ந்துள்ள துன்பங்களை வேறு எவன் தாங்க முடியும்? உனக்கு அவனைப் பற்றி இரக்க மில்லையா? நீ வேறு குற்றம் சுமத்துகிருயே!

ஹெட்விக்: (*திரும்பி நின்று அவனை ஏற இறங்கப் பார்த்து*) உங்கள் நண்பருக்காக நீர் செய்கிற உதவி கண்ணீர் விடுவதுதான் போலிருக்கிறது! அந்தத் தீரரைச் சங்கிலியில் பிடித்துக்கொண்டு போனபோது, நீர் எங்கே இருந்தீர்? உங்களை விட்டு அவரைப் பிய்த்து இழுத்துக்கொண்டு போகிற வரை, ஆடாமல், அசையாமல் எல்லோரும் மௌனமாய்ப் பார்த்துக்கொண் டிருந்தீர்களாக்கும்! நல்லது! ஆனால் டெல் உம்மிடம் அப்படியா நடந்து கொண்டார்? பின்னாலே துருப்புக்கள், முன்னாலே புயலில் கொந்தளிக்கும் ஏரி—எதையும் பாராமல் உம்மை ஓடத்தில் கடத்திச் சென்று காப்பாற்றினார்! என்னையும், என் இரு கண்மணிகளையும் அப்போது அவர் நினைத்துப் பார்த்தாரா? அல்லது, வெறுமே கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, உம்மைக் கைவிட்டுப் போனாரா?

பெரிய வால்டர்: பேதை மகளே! நாங்கள் சொற்பப் பேர்கள்—ஆயுதமில்லாதவர்கள்—பட்டாளத்தார் மத்தியில் நாங்கள் அப்போது என்னதான் செய்துவிட முடியும்?

ஹெட்விக்: (*அவர் மார்பில் பாய்ந்து சாய்ந்துகொண்டு*) அப்பா! கடைசியில் அவரையும் இழந்துவிட்டீர்களே! வெளியே எல்லோருக்கும் அவரல்லவா தேவை! அவர் இல்லாமல், நாம் என்ன செய்யப்போகிறோம்! உயிரோடு அவரை இழந்துவிட்டோமே! அவநம்பிக்கையால் அவர் இதயம் வெடிக்காமல் தெய்வம்தான் தேற்றவேண்டும்! பாதாளச் சிறையில் ஒரு நல்வார்த்தை சொல்ல நண்பர் உண்டா! அவர் நோயில் விழுந்தால்—தெய்வமே, அவருக்கு எப்படி நோய் வராமலிருக்கும்?....சுதந்திரம்தானே அவர் மூச்சுக் காற்று! அது இல்லாமல் அரைக் கணமேனும் அவர் அடைபட்டிருக்க முடியுமா? பாறையிலே முளைத்த பச்சிலை போல், அவர் கருகி உதிர்ந்துவிடுவார்! கரையிலே எறிந்த

மீனைப்போல், எப்படித் துடிக்கிருரோ! சிறகொடிந்த பறவை போல், என் கணவர் இருட்டறையில் எத்தனை நாள் இருப்பார்!

ஸ்டாபாச்சர்: அக்கா! கொஞ்சம் பொறுமையாயிரு! நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவன் சிறையை உடைத்தெறிய இயன்றதை யெல்லாம் செய்வோம்!

ஹெட்விக்: அவரில்லாமல் நீங்கள் மட்டும் என்ன செய்ய முடியும்? அவர் ஒருவர் உங்கள் எல்லோருக்கும் காப்பாக இருந்தார்—நீங்கள் அத்தனை பேரும் சேர்ந்து அவரைக் காக்க முடியவில்லையே!

[வெர்னர் பிரபு விழிப்படைகிருர்.]

கோன்ராடு: பேசாதேயுங்கள்! அவர் அசைகிருர், பாருங்கள்!

வெர்னர்: அவன் எங்கே?

ஸ்டாபாச்சர்: யார்?

வெர்னர்: அவன் இல்லையா? மூச்சுப் போகும் வேளையிலும் பக்கத்தில் இல்லையா?

ஸ்டாபாச்சர்: மருமகனைத் தேடுகிருர். உடனே அழைத்து வர ஆளனுப்புங்கள்!

பெரிய வால்டர்: நாங்கள் அப்போதே ஆள் அனுப்பி விட்டோம். கவலை வேண்டாம்! ருடென்ஸ் பிரபு மனம் மாறிவிட்டார்—இப்போது நம் பக்கம்தான்!

வெர்னர்: நம் நாட்டுக்காக அவன் பரிந்து பேசினது உண்மைதானே?

ஸ்டாபாச்சர்: வெறும் பேச்சா—வீரத்துடன், ஆணித்தரமாகப் பேசினுர்!

வெர்னர்: அப்படியானுல், கடைசியாக நான் கண்ணை மூடு முன்னுல் என் ஆசியை அவன் பெறவேண்டாமா? சீக்கிரம் என் விஷயம் முடிந்துவிடும்—இனி நீடிக்காது!

ஸ்டாபாச்சர்: ஐயா, அப்படியில்லை! கொஞ்சம் ஓய்வெடுத்த பின்பு, இப்பொழுது உங்கள் கண்கள் பிரகாசமா யிருக்கின்றன.

வெர்னர்: வாழ்வே துக்கம்தான்! அதுவும் இதோ முடியப் போகிறது!

[அருகிலிருந்த வால்டரைக் கவனித்து]

இந்தப் பொடியன் யார்?

பெரிய வால்டர்: உங்கள் பேரன்—அவனை உங்கள் வாயால் வாழ்த்துங்கள்! தகப்பனில்லை—

[ஹெட்விக் குழந்தையுடன் அவர் முன்பு வணங்குகிருள்.]

வெர்னர்: தகப்பனில்லாமலே உங்கள் எல்லோரையும் விட்டுப் போகிறேன்! கடைசியாக என் நாட்டின் வீழ்ச்சியைப் பார்த்துவிட்டா என் கண்களை மூடவேண்டும்! என் நம்பிக்கை யெல்லாம் சிதறுண்டு போகவா நெடுமரம் போல இத்தனை வயது வாழ்ந்து வந்தேன்!

ஸ்டாபாச்சர்: வீரத் தந்தையாரே! மனம் தளர வேண்டாம்! எங்களுக்கு இன்னும் நம்பிக்கை யிருக்கிறது—நாட்டை விடுதலை செய்தே தீருவோம்!

வெர்னர்: யாரைக் கொண்டு?

பெரிய வால்டர்: எங்களைக் கொண்டே! கேளுங்கள்! மூன்று மாவட்டங்களும் சேர்ந்து கொடுங்கோலரை விரட்ட உறுதி செய்துவிட்டன. ஒற்றுமை உறுதியாகிவிட்டது; எல்லோரும் சத்தியம் செய்திருக்கிருர்கள். வருடம் முடியு முன்பே போராட்டம் வெற்றியோடு முடியும். துளியும் சந்தேகமில்லை! சுதந்திர பூமியிலேதான் உங்கள் சமாதி நிலைத்திருக்கும்!

வெர்னர்: ஒற்றுமை உறுதியாகிவிட்டதா, சொல்!

மெல்ச்தல்: மூன்று மாவட்டங்களும் ஒரே நாளில், ஒரே மூச்சாக எழும்! ஏற்பாடெல்லாம் முடிந்துவிட்டது! நூற்றுக் கணக்கான நம்மவருக்கு மட்டுமே விஷயம் தெரியும். எல்லாம் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. நாள் நெருங்கிவிட்டது. இனி அந்நியர் இங்கே வாழ்ந்த தடமே தெரியாமற் போய்விடும்!

வெர்னர்: நாட்டுக்குள்ளே அமைந்திருக்கும் அவர்களுடைய வலிய கோட்டைகள்?

மெல்ச்தல்: ஒரே நாளில் எல்லாம் விழுந்துவிடும்!

வெர்னர்: பிரபுக்களும் ஐக்கியமாய்ச் சேர்ந்திருக்கிருர்களா?

மெல்ச்தல்: அவர்களைப்பற்றிச் சந்தேகமில்லை; எங்களுக்கு உதவி வேண்டுமாஞல், நிச்சயம் அளிப்பார்கள். ஆஞலும், இப்போது குடியானவர்களிடமே சத்தியம் வாங்கியிருக் கிருேம்.

வெர்னர்: *(வியப்புடன் எழுந்து)* பிரபுக்கள் தயவில்லாமல் இவ்வளவு பெரிய காரியத்தைத் தானே முடிக்கக் குடி யானவர்களுக்குத் துணிவு வந்துவிட்டதா? அவ்வளவு தன்னம்பிக்கை பிறந்துவிட்டதா? நல்லது, நல்லது! நாங்கள் இனிமேல் அவர்களுக்குத் தேவையில்லை! நாங்கள் அமைதியாக மடியலாம்! புதுத் தலைமுறை தோன்றி விட்டது! சுதந்திரச் சமுதாயத்தை இனி யாரும் அசைக் கவோ, அழிக்கவோ முடியாது! இனி மனிதன் கூனிக் குறுகிக் கிடக்கமாட்டான், கம்பீரமாக நிமிர்ந்து நிற்பான்!

[குழந்தை வால்டரின் தலைமீது கையை வைத்துக்கொண்டு]

ஆப்பிள் இருந்த தலை இதுதானே! இந்தத் தலைதான் இந்த நாட்டுச் சுதந்திரத்தின் சின்னம்! இது மேலான— உயர்ந்த—எதிர்கால வாழ்வின் சின்னம்! துன்பக் கடலைக் கடந்து இன்பக் கரை சேர்க்கும் கப்பல் இந்தத் தலை என் பதை மறவாதீர்கள்! நாமெல்லோரும் செய்திருக்க வேண்டிய தியாகத்தை யெல்லாம் இந்தக் குஞ்சுத்தலை வீரத்தோடு தாங்கி நின்றதை யாரும்—எந்த நாளும்— மறக்க வேண்டாம்! பழமை ஒழிந்தது! புத்துயிர் மலர்ந்து விட்டது!

ஸ்டாபாச்சர்: *(பெரிய வால்டரிடம்)* அவர் கண்களைப் பார்! என்ன ஒளி வீசுகின்றது! இது வாழ்க்கையின் முடிவு கால ஒளியாகத் தோன்றவில்லை; எதிர்காலப் புதுவாழ்வின் சோதியே இது!

வெர்னர்: இந்தக் கட்டிலில் கிடந்தபடியே என்னென்னவோ காட்சிகளைக் கண்டுகொண்டே யிருக்கிறேன். எத்தனை அரசர்கள்—இளவரசர்கள்—கவசம் தரித்த வீரப் பிரபுக்கள் இங்கே படையெடுத்து வந்தார்கள்! காடுபோல் அடர்ந்

திருந்த ஈட்டிகள்—சமுதாடுகள்—வேல்கள்—வாள்கள் எல்லாம் வளைந்து நின்றபோதிலும், வெறும் கையோடு நின்ற நம் குடியானவர்கள் எப்போதாவது அஞ்சினார்களா? திறந்த மார்புடன் எதிரிகளின் ஆயுதக் காட்டின் மீது பாய்ந்தார்கள்! ஈட்டிகள் ஒடிந்தன, சமுதாடுகள் சாய்ந்தன—ஒரு பாவமும் அறியாத நம் வீரக் குடியானவரே வெற்றி பெற்று வந்தனர்! வாழையடி வாழையாக வந்த சமுதாயம் இது!

[பெரிய வால்டர், ஸ்டாபாச்சர் இருவர் கைகளையும் எட்டிப் பிடித்துக்கொண்டு]

நீங்கள் உறுதியோடும், நிலைத்த விசுவாசத்தோடும் இருங்கள்—அபாய காலங்களில் உங்கள் மலைகளின் மீது அடையாளங்கள் காட்டினால், கூட்டம் கூட்டமாக மக்கள் ஒருவருக்கொருவர் உதவியாக ஓடி வரவேண்டும்! ஒரே இனமாயிருங்கள்—ஒரே—ஒரே—

[இருவர் கைகளையும் பற்றியபடியே மெத்தையில் சாய்கிறார். பெரிய வால்டரும் ஸ்டாபாச்சரும் சிறிது நேரம் அவரையே பார்த்திருந்து விட்டுத் துக்கத்தை மறைத்துக்கொள்ளச் சற்று விலகி நிற்கின்றனர். கட்டிலருகில் வேலையாட்கள், அமைதியாக வந்து, அழுதுகொண்டு முழந்தாள் பணிந்து விழுகிறார்கள். மாளிகையிலுள்ள மணி ஒலிக்கின்றது.]

[ருடென்ஸ் வேகமாக வருகிறான்.]

ருடென்ஸ்: என்ன, எப்படி யிருக்கிறார்? உயிர் இருக்கிறதா? நான் பேச முடியுமா?

பெரிய வால்டர்: நீங்கள்தான் இனிமேல் எங்கள் பிரபு! இந்தப் பழம் பெரும் குடும்பத்திற்கு இனி நீங்களே தலைவர்!

ருடென்ஸ்: இறைவன் சித்தம் போலும்! என் கழிவிரக்கம் காலம் கடந்துவிட்டதா! என் உள்ளம் மாறிவிட்டதைப் பாராமலே என் மாமன் போய்விட்டாரா! என்றும் மீளாதபடியே சென்றுவிட்டாரா! அவர் தெளிவோடிருந்த காலத்தில் எனக்குச் செய்த உபதேசத்தை நான் வெறுத்தேன். இப்பொழுது அவரே போய்விட்டார்! அவருக்கு நான்

ஆயுள் முழுதும் கடமைப்பட்டிருக்கிறேன். ஐயோ, சொல்லுங்கள்—அவர் என்னிடம் கோபத்தோடா ஆவி பிரிந்தார்?

ஸ்டாபாச்சர்: நீங்கள் செய்ததை யெல்லாம் கேட்டுவிட்டு, உங்களுடைய பேச்சின் வீரத்தை மெச்சிக்கொண்டே பிரிந்தார்!

ருடென்ஸ்: (கட்டிலருகே முழந்தாளிட்டு) ஆவிபிரிந்த இந்தப் புனித உடலின் அருகே சபதம் செய்கிறேன்! மாமா, உமது திருக் கையில் அடித்துச் சத்தியம் செய்கிறேன்! இனி அந்நியர் உறவு அணுவளவும் கொள்ளேன்! என் இதயம் முழுதும் இனி என் நாட்டு மக்களுக்குத்தான்! இனி என்றைக்கும் நான் சுவிஸ் தாயின் மகன்! (எழுந்து கொண்டு) நமக்கு உற்றவர்—நம் எல்லோருக்கும் தந்தை—அவருக்காகத் துக்கம் கொண்டாடுங்கள்! அவரிடமிருந்து சொத்து, சுகங்களை மட்டும் நான் வாரிசாகப் பெறவில்லை... இதோ அவர் ஆவியே என்மீது படர்ந்திருக்கின்றது—அவருடைய தூய வீர உள்ளம் என்னுள் பாய்ந்திருக்கின்றது! வயது காலத்தில் அவர் கொண்டிருந்த கருத்தை யெல்லாம் வாலிபமாக உள்ள நான் நிறைவேற்றுவேன்! ஐயா, உமது கையை இப்படிக் கொடும்! மெல்ச்தல், கை குலுக்குவோம், வா! யோசிக்க வேண்டாம், கை கொடு! என் வாக்குறுதிகளை நம்புங்கள்! என் சத்தியத்தை நம்புங்கள்!

பெரிய வால்டர்: கை கொடு; அவர் உள்ளம் பரிசுத்தமாயுள்ளது, அதை நம்பவேண்டும்!

மெல்ச்தல்: குடியானவன் என்றாலே உங்களுக்குக் குமட்டலாயிருக்குமே! இனி எப்படி இருப்பீர்களோ?

ருடென்ஸ்: இளமையின் தவறுகளை மறந்துவிடுங்கள்!

ஸ்டாபாச்சர்: 'ஒன்று யிருங்கள்!'—என்றுதானே நம் தந்தை முடிவாகச் சொன்னார்—அது நினைவிலிருக்கட்டும்!

மெல்ச்தல்: இதோ என் கை! இது மேழி பிடிக்கும் கை, மேதினியை வாழ்விக்கும் கை, உண்மையின் உறைவிடமான கை!

ருடென்ஸ்: இதைக் கண்யமாய் ஏற்றுக் கொள்கிறேன்! என் வாளுள்ள வரை இந்தக் கையைக் காப்பேன்!

மெல்ச்தல்: மண்ணை உழுகின்ற கை வாளையும் ஏந்தி மார்பையும் காத்துக் கொள்ளும்!

ருடென்ஸ்: நீ என் மார்பைக் காத்து நில்லு—நான் உன் மார்பைக் காக்கிறேன்! ஆனால் நாடெல்லாம் அந்நிய ஆதிக்கியம் இருக்கிறதே—முதலில் அதை வேரோடு வெட்டி வீழ்த்துவோம், வாருங்கள்! பிறகு நம் உறவுகளைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம்!

[சில நிமிடங்கள் மௌனமா யிருக்கிறான்.]

இன்னும் பேசாமலே யிருக்கிறீர்களே! உங்கள் சேதியெல்லாம் எனக்குத் தெரியாதா, என்ன? ரூட்லியிலே கூடினீர்கள்—முடிவு செய்திருக்கிறீர்கள்! நீங்களாகவே இதை என்னிடம் முன்பே சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன்! நான் பிறந்த பூமிக்கு, இன்றும், என்றும் துரோகம் செய்யமாட்டேன்! போராட்டத்தை நெடுநாள் தள்ளி வைத்துவிட்டீர்கள். நேரமாகிறது! இப்போது நிலைமையும் மாறிவிட்டது! இனியும் தாமதித்தால், வீரன் டெல்லை நாம் மறுபடியும் காண முடியுமோ, என்னவோ?

ஸ்டாபாச்சர்: கிறிஸ்மஸ் விழா வரை காத்திருக்க நாங்கள் உறுதி செய்தோம்.

ருடென்ஸ்: அங்கே நான் இருக்கவில்லை. நீங்கள் வேண்டுமானால் காத்திருங்கள்—நான் உடனே செயலில் இறங்க வேண்டும்!

பெரிய வால்டர்: இந்தப் புனித உடலை மண்ணுள் சேர்ப்பது முதல் கடமையல்லவா?

ருடென்ஸ்: அடிமை மண்ணில் என் மாமனை அடக்கம் செய்ய வேண்டாம்! விடுதலை பெற்று வெற்றி மாலை சூட்டி அடக்கம் செய்வோம்! உங்களுக்காகவும் எனக்காகவும் உடனே போரில் குதிப்பது அவசியம்! என் காதலி பெர்தாவையும் எதிரிகள் எங்கோ கடத்திக்கொண்டு போய் வைத்திருக்கின்றனர்!

ஸ்டாபாச்சர்: என்ன துணிவு! பெண் பாவம் பொல்லாதது!

பெரிய வால்டர்: (ருடென்ஸைப் பார்த்து) என்ன செய்ய உத்தேசம்?

ருடென்ஸ்: எதிரிகளின் எல்லாக் கோட்டைகளையும் முதலில் தகர்த்தெறிய வேண்டும்!

மெல்ச்தல்: சரி, வந்து தலைமையை ஏற்று நடத்துங்கள்! எல்லோரும் பின்பற்றிப் பாயத் தயார்! இன்றே செய்ய வேண்டியதை நாளைக்கு ஒத்திப்போட வேண்டியதில்லை! ரூட்லி மகாநாடு நடக்கையில் டெல் வெளியே யிருந்தான். பயங்கர ஆப்பிள் நாடகமும் நடக்கவில்லை! நிலைமை மாறி விட்டது! அதற்குத் தக்கபடி திட்டத்தையும் மாற்றிக் கொள்வோம்!

ருடென்ஸ்: ஆயுதங்களோடு வந்து சேருங்கள்! மலைகளின் மீது சோதி தெரிவதைக் கவனித்துக் கொண்டிருங்கள்! அது நம் வெற்றிக்கு அடையாளம். உடனே நீங்களும் பெருந் தீயை மூட்டி வரவேற்கத் தயாரா யிருங்கள்! எதிரிகளை எல்லா இடங்களிலும் இடிபோல் தாக்குவோம்! வீழ்க கொடுங்கோல்!

[அவர்கள் போகிறார்கள்.]

காட்சி 3

குஸ்னாட்டின் அருகில் குன்றுகளிடையே அமைந்த ஒடுக்கமான பாதை. வழிப்போக்கர்கள் நடந்து செல்கிறார்கள். பாதைக்கு மேலே ஒரு பாறை முன்பக்கமாக நீண்டு புதர்கள் அடர்ந்து விளங்குகின்றது.

[டெல் வில்லுடன் வருகிறான்.]

டெல்: (தனக்குள்) குஸ்னாட்டுக்கு வேறு பாதை கிடையாது; இந்த ஒடுக்கமான பாதை வழியாகத்தான் அவர் வர வேண்டும்! இங்குத்தான் என் வேலையும் முடியவேண்டும்! நல்ல தருணம். மேலே செடிகள் அடர்ந்த பாறை ஏற்ற மறைவிடம்தான். அங்கிருந்து விடும் அம்பு நெஞ்சில் பாய்ந்தே தீரும்! வன விலங்குகளுக்காக வைத்திருந்த என் வில் இப்போது வேறு வேலை செய்யப்போகிறது. கள்ளமில்லாமல் காடுகளில் சுற்றிக் கொண்டிருந்த

என்னைப் பிடித்துக் கவர்னர் நல்ல பாடம் கற்பித்து விட்டார்! கொடுமையில் எத்தனை வகை உண்டென்று காட்டிவிட்டார். என் உள்ளமும் இரும்பாகிவிட்டது ஏதும் அறியாத என் பாலர்கள், என் மனைவி இவர்களை சும்மா விடமாட்டாய்! உன் வெறியிலிருந்து அவர்களை நான் காக்க வேண்டும்.

சின்னஞ்சிறு குழந்தையின் தலையைக் குறி வைக்க சொன்னாய்! கெஞ்சினேன், நீ கேட்கவில்லை. வெடிக்கு உள்ளத்தில் அப்போதே சபதம் செய்தேன்—அது ஆண்டவர் ஒருவருக்கே தெரியும். இந்த இரண்டாவது அம்பை அப்போதே உனக்காக எடுத்து வைத்துவிட்டேன் செய்த சபதம் வீண் போகவில்லை. உனக்கு நேர்ந்து வைத்த அம்பை உனக்கே சேர்த்துவிடுகிறேன்! இரக்கம் நுழையாத உன் நெஞ்சில் என் பாணம் நுழைந்தே தீரும் என் செல்வன் தலைமீது பாய்ந்த அம்பு என் குலப்பகைவன் உள்ளத்தில் பாயாமல் தப்புமா?

வில்லே, இதுவரை நீ வெறும் சுமைதான்—இன்றுதான் வீர வில்லாக விளங்கவேண்டும்! இந்த நேரத்தில் என்னை நீ கைவிட்டுத் தவறக்கூடாது. ஒரு அம்பைத் தவிர கையில் வேறில்லை. அது தப்பினால் அதோகதிதான்!

[*சில வழிப்போக்கர்கள் செல்கிறார்கள்.*]

நின்றுகூடப் பாராமல், ஒவ்வொருவர் ஒவ்வொரு நோக்கத்தோடு போகின்றனர். நானோ கொலைமேல் குறி வைத்து நிற்கிறேன்.

[*அருகில் இருந்த ஒரு கல் - ஆசனத்தில் அமர்கிறான்.*]

வீட்டிலே தவிக்கும் என் அருமைக் கண்மணிகளே! எப்பொழுது வெளியே போய்த் திரும்பினாலும், நான் உங்களுக்கு ஏதாவது பொருள் கொண்டுவருவது வழக்கம். விளையாடுவதற்கு மான்குட்டி, மைனா முதலிய ஏதாவது ஒன்றைப் பரிசளிப்பேன். இன்றோ என் வேட்டை வேறு விதமாகிவிட்டது. உங்களைக் காக்கவே, உங்களை நினைத்துக்கொண்டே, இந்த வேட்டையை மேற்கொண்டிருக்கிறேன்!

[மேளதாளங்களின் ஒலி கேட்கின்றது. டெல் எழுந்து நிற்கின்றான். ஒரு கல்யாண ஊர் வலம் வருகின்றது. கூட வந்துகொண்டிருந்த ஸ்டஸ்ஸி என்பவன் மட்டும் விலகி டெல்லின் பக்கம் போகின்றான். ஊர்வலம் தொடர்ந்து செல்கின்றது.]

ஸ்டஸ்ஸி: நல்ல பணக்காரக் குடியானவன். கல்யாணப் பெண்ணை அழைத்துப் போகிறான். அதோ பக்கத்து ஊரில் இன்று வந்தவர்களுக்கெல்லாம் சாப்பாடு. அழைப்பே வேண்டாம். யாரும் வரலாம். நீங்களும் வாருங்களேன்!

டெல்: உற்சாகமான இடம் துக்கப்படுகிறவனுக்குப் பொருந்தாது. தயவு செய்து நீங்கள் போங்கள்!

[ஆரம்கதை பல குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்து பாதையை மறித்து நின்று கொள்கிறாள்.]

ஸ்டஸ்ஸி: யாரம்மா நீ? இப்படி வழிமறித்து நிற்கிறாயே!

ஆரம்கதை: இங்கே அவர் என்னைத் தாண்டிச் செல்ல முடியாது! அவரைக் கண்டு நான் நேரில் மன்றாட வேண்டும்!

ஸ்டஸ்ஸி: எவரை?

ஆரம்கதை: கவர்னரை!

ஸ்டஸ்ஸி: (டெல்லிடம்) நீங்கள் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது போலிருக்கிறது. நான் போகிறேன், வந்தனம்!

[போகிறான்.]

[பிரிஷார்ட் அவசரமாக ஓடிவருகிறான்.]

பிரிஷார்ட்: வழியைவிட்டு ஒதுங்குங்கள்! மேன்மை தங்கிய கவர்னர்துரை வருகிறார்!

[டெல் வேகமாக வெளியேறுகிறான். ஜெஸ்லரும் ருடோல்பும் குதிரைகள்மீது அமர்ந்து வருகின்றனர்.]

ஜெஸ்லர்: நீ என்ன சொன்னாலும் சரி, நான் சக்கரவர்த்தியின் ஊழியன், அவர் மனப்படி நடப்பதே என் முதல் கடமை. என்னை இங்கே எதற்காக அனுப்பி வைத்தார்?

இந்த ஜனங்களைப் புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கவா அல்லது இந்தக் காட்டுமிராண்டிகளை அடக்கி ஒடுக்குவதற்காகவா? இங்கே இவர்கள் ஆளவேண்டுமா, அல்லது நாம் ஆளவேண்டுமா என்பதுதான் பிரச்னை!

ஆரம்கதை: இதுதான் சமயம்! இப்போதே போகிறேன்
[கவர்னர் முன்பு மெதுவாகப் போகிருள்.]

ஜெஸ்லர்: அல்டார்பில் தொப்பியை உயரே தொங்கவிட்டு வைத்தது, வெறும் வேடிக்கைக்காகவா? இல்லை, இந்த சுவிஸ் மக்களின் மனப்போக்கு எனக்கு முன்னமே தெரியாதா? இவர்கள் எதற்கும் தலை வணங்குவதில்லை எல்லோரும் வணங்காமுடிகள்! வணங்காத தலைகளை முதலில் வணங்க வைக்க வேண்டும், நிமிர்ந்து நிற்கும் கழுத்துக்களை வளைக்க வேண்டும்! மேலே அமர்ந்திருக்கும் யஜமான் யார் என்பதை அவர்கள் மறந்து விடுகிருர்கள். தொப்பி கண்ணிலே பட்டதும் யஜமான் ஞாபகம் வருமா, இல்லையா!

ருடோல்ப்: ஜனங்களுக்கும் சில உரிமைகள் உண்டல்லவா

ஜெஸ்லர்: அதையெல்லாம் கவனிக்க இதுவா நேரம்? சக்கரவர்த்தியின் ஆதிக்கியம் வளரவேண்டும். நாடுநாடாக பரவவேண்டும்—ஒற்றுமையை உடைக்க வேண்டும்—மக்களைப் பிரித்துவைத்து ஆளவேண்டும்—நம் ஏகாதிபத்திய வளர்ச்சிக்கு இந்தச் சிறு மலைநாடு தடைசெய்து நிற்பதை முதலில் தகர்க்க வேண்டும். எதிர்த்து நிற்கும் அற்ப ஜனங்களை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் தூக்கி எறிய வேண்டும்!

ஆரம்கதை: (அவர் முன்பு போய் விழுந்து) ஐயா, கருணை காட்டுங்கள்: ஏழைக்கு இரங்குங்கள்!

ஜெஸ்லர்: என் வழியை ஏன் மறிக்கிருய்? விலகி ஓடு!

ஆரம்கதை: என் கணவர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிருர். என் அநாதைக் குழந்தைகள் உண்ண உணவில்லாமல் பரிதவிக்கின்றன! எங்களுக்கு இரக்கம் காட்டுங்கள் ஐயா இரக்கம்—

ருடோல்ப்: யார் நீ? உன் புருஷன் யார்?

ஆரம்கதை: நாங்கள் புல் அறுத்துப் பிழைப்பவர்கள். காட்டில் வளர்ந்த புல்லை அறுத்ததற்காக என் கணவரைக் கூட்டில் அடைத்துவிட்டீர்களே! எங்களுக்கு வேறு பிழைப்பும் இல்லையே!

டோல்ப்: (கவர்னரைப் பார்த்து)—இது கருணை காட்டவேண்டிய விஷயம்தான்! (பெண்ணைப் பார்த்து) இங்கே வழிமறித்து நிற்காதே! மனு எழுதிக்கொண்டு மாளிகைக்கு வா, கவனிப்போம்!

ஆரம்கதை: என் வீட்டுக்காரரை விடுதலை செய்வதாய்ச் சொன்னாலொழிய நான் இதை விட்டு நகரமாட்டேன்! இதற்காகவே நான் இங்கே ஓடிவந்தேன்! இல்லாவிடில், இவ்வளவு பெரிய கவர்னர் துரையை நான் எப்படிப் பார்க்க முடியும்?

ஜஸ்லர்: இந்தப் பிச்சைக்காரச் சனியன்களை விரட்டு! மேலே போவோம்!

ஆரம்கதை: (எட்டி அவருடைய குதிரை லகானைப் பிடித்துக் கொண்டு) முடியாது! அதெல்லாம் நடக்காது! உமது கோபம் என்னை என்ன செய்யும்! இழக்க வேண்டியதையெல்லாம் நான் இழந்தாயிற்று! இனிமேல் என்ன? சாகத் துணிந்தவளுக்குச் சமுத்திரம் எம்மட்டு!

ஜஸ்லர்: ஏ பெண்பிள்ளை! விலகிச் செல்கிறாயா? குதிரையை மேலே விடட்டுமா?

ஆரம்கதை: விடுமே! அப்படியாவது சாகிறேன்! ஓட்டும் ஓட்டும்! இதோ—

[குழந்தைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு பாதையை அடைத்துப் படுத்துக்கொள்கிறாள்.]

டோல்ப்: பெண்ணே! உனக்கென்ன பைத்தியமா?

ஜஸ்லர்: (திகைப்புடன்) வேலைக்காரர்கள் எங்கே தொலைந்தனர்? இவளை வெளியே தள்ளவேண்டும்!

டோல்ப்: வேலைக்காரர்கள் முன் பக்கம் போய் நிற்கிறார்கள். இடையில் கல்யாண ஊர்வலம் போகிறது. (தூரத்தில் பார்த்து) அவர்கள் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு வர முடியவில்லை!

ஜெஸ்லர் : இன்னும் இந்த ஜனங்களுக்குப் புத்தி வரவில்லை! ஒரு பொட்டச்சிக்கு இவ்வளவு தைரியமா? இவர்களை அடக்கி ஒடுக்கி, நான்—

[*அவர் நெஞ்சில் அம்பு பாய்கின்றது. நெஞ்சில் கையை வைத்துக்கொண்டு, குதிரைமீது தள்ளாடிய நிலையில் இருக்கிறார்.*]

கர்த்தரே, என் ஆவிக்குக் கருணை காட்டும்!

ருடோல்ப்: துரையே! என்ன இது? ஆண்டவரே, இது எங்கிருந்து பாய்ந்தது?

ஆரம்கதை: கொலை! கொலை! கவர்னர் தள்ளாடி விழுகிறார்

ருடோல்ப்: (*குதிரையிலிருந்து குதித்து*) என்ன பயங்கரம் என்ன அநியாயம்! ஓ ஆண்டவரே! பிரபுவே! மரணத் தருவாயில் இருக்கிறீர்கள்! கடைசியாகக் கர்த்தரைத் துதித்துக் கொள்ளுங்கள்!

ஜெஸ்லர்: டெல்லின் அம்புதான் இது!

[*குதிரைமீதிருந்து ருடோல்பின் கைகளில் சாய்கிறார்; ருடோல்ப் அவரைப் பிடித்துக் கீழே கிடத்துகிறான்.*]

டெல்: (*பாறை மீது புதர் நடுவில் இருந்துகொண்டு*) யாருடைய அம்பு என்றும் உனக்குத் தெரிகிறதா?.........கருணையே அறியாத உனக்குக் கர்த்தர் வேறு; கருணை வேறு!

[*அவன் மறைகிறான். ஜனங்கள் ஓடி வரு கிறார்கள்.*]

ஸ்டஸ்ஸி: என்ன விஷயம்? என்ன நடந்தது?

ஆரம்கதை: கவர்னர் அம்பு பட்டுக் கிடக்கிறார்!

ஜனங்கள்: (*ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு ஓடி வந்து*) எய்தது யார்?

ருடோல்ப்: இரத்தம் வெள்ளமாய்ப் பெருகிவிட்டது. உதவிக்கு யாரையாவது கூப்பிடுங்கள்! கொலைகாரனை விடாதீர்கள் (*கவர்னரைப் பார்த்து*) அதிர்ஷ்டம் கெட்ட மனிதரே! என்ன எச்சரிக்கை செய்தும் நீர் கேட்கவேயில்லையே!

ஸ்டஸ்ஸி: பகவானே! முகமெல்லாம் வெளிறிப் போய் விட்டது! உயிரும் இல்லை, ஒரே கட்டையாய்க் கிடக்கிறாரே

ப குரல்கள் : இது யார் வேலை?

[ஊர்வலத்தில் மேளம் ஒலித்துக்கொண்டிருக்கிறது.]

டோல்ப் : இந்த ஜனங்களுக்கு என்ன, பைத்தியமா? இங்கே பிணம் கிடக்கிறது, அங்கே மணப்பறை கொட்டுகிருர்களே ! அதை முதலில் நிறுத்துங்கள் !

[மேளம் திடீரென்று நிற்கிறது. மேலும் சிலர் ஓடிவந்து குழுமுகின்றனர்.]

பூரம்கதை : குழந்தைகளே, நன்ருய்ப் பாருங்கள்! கொடுங்கோலன் எப்படிச் சாகிருன், பார்த்துக்கொள்ளுங்கள்!

டோல்ப் : பெண்மைக்குக் கூட இரக்கம் கிடையாதா! யாராவது உதவிக்கு வாருங்கள்—நெஞ்சிலுள்ள அம்பை வெளியே இழுப்போம்!

ல பெண்கள் : அது இருக்கிற இடத்திலேயே இருக்கட்டும்' அது கடவுளின் சித்தம்!

டோல்ப் : நீங்கள் நாசமாய்ப் போங்கள்! (அவர்களைப் பார்த்து உடைவாளை உருவுகிருன்.)

டஸ்ஸி : (அவன் கையைப் பிடித்து நிறுத்தி) நிறுத்து! அந்தக் காலம் மலையேறிவிட்டது! கொடுங்கோலனே தொலைந்து விட்டான்; நீ என்ன துள்ளுகிருய்? உங்கள் ஆட்சி ஒழிந்தது! நாங்கள் சுதந்திர மக்கள்! வாழ்க சுதந்திரம்!

ல்லோரும்: (ஒரே குழப்பமாக) வாழ்க! வாழ்க!

[காவலர்கள் ஓடி வருகிருர்கள்.]

நடோல்ப் : காலம் மாறிப் போய்விட்டது! கொலைகாரனும் தப்பிப் போய்விட்டான்! ஒரே நொடியில் எல்லாம் தலை கீழாக மாறி நிற்கிறது! இனி யாரையும் நம்ப வழியில்லை! வாருங்கள் நேரே குஸ்னுட்டுக்குப் போவோம்! மேல்விளைவு என்ன ஆகுமோ, தெரியவில்லை!

[எல்லோரும் போகிருர்கள்.]

அங்கம்—V

காட்சி 1

அல்டார்ப் அருகே ஒரு மைதானம். பின்புறம் இடது பக்கத்தில் கோட்டையும், சுவர்களையொட்டி நெடிய சாரங்களும் காணப் பெறுகின்றன; இடது பக்கம் தூரத்தில் குன்றுகளும் அவைகளின் மீது எரியும் தீப்பிழம்புகளும் தெரிகின்றன. காலம் வைகறை. தொலைவிலிருந்து மணி ஓசைகள் கேட்கின்றன.

ருவோடி: பார்த்தீர்களா, மலைகளில் தீச்சுடர்களை!

மேஸ்திரி: வனத்திலிருந்து மணிகள் ஒலித்துக்கொண்டே யிருக்கின்றன!

ருவோடி: எதிரிகள் தொலைந்தார்கள்!

மேஸ்திரி: கவர்னர் மாளிகையும் தகர்ந்தது!

ருவோடி: எல்லா மாகாணத்தவர்களும் முந்திக்கொண்டு விட்டனர். நாம்—யூரி மக்கள்—மட்டும் இன்னும் சும்மா இருப்பதா?

மேஸ்திரி: அந்தக் கோமாளித் தொப்பி இன்னும் கம்பத்தில் தொங்க வேண்டுமா? கம்பத்தைச் சுக்கு நூறாக உடைக்க வேண்டாமா?

எல்லோரும்: தொப்பி ஒழிக!

ருவோடி: ஸ்டையர் இங்கே இருக்கிறானா?

ஸ்டையர்: இதோ இருக்கிறேன்! என்ன செய்யவேண்டும்

ருவோடி: உயரமான நமது ஊசிக் கோபுரத்தில் ஏறி நமது கொம்பை எடுத்து ஊது! காடும் நாடும் அதிரும்படி முழங்கு! ஒவ்வொரு கிராமத்திலும் ஜனங்கள் ஒன்றுகூடட்டும்! (ஸ்டையர் போகிறான்.)

[பெரிய வால்டர் வருகிறார்.]

பெரிய வால்டர்: நண்பர்களே, சற்று நிதானமாக இருங்கள் சுவிஸிலும் அந்தர்வால்டனிலும் என்னென்ன நடந்தன

என்ற தகவல் தெரியட்டும். தூதுவர்கள் விரைவிலே வருவார்கள்!

வாடி: இன்னும் எதற்காகக் காத்திருக்க வேண்டும்? கொடுங்கோலன் மாண்டான்! சுதந்திரத் திருநாள் உதயமாகிவிட்டது!

ஸ்திரி: ஒவ்வொரு குன்றிலும் ஓங்கி யெரியும் சொக்கப் பனைகளைக் காட்டிலும் தூதுவர்கள் வந்து என்ன சொல்லப் போகிறார்கள்?

வாடி: வாருங்கள் எல்லோரும்! ஆண்களும் பெண்களும் ஓடி வாருங்கள்! அந்தச் சாரக் கம்புகளைப் பிய்த்தெறியுங்கள்! சுவர்களை உடையுங்கள்! கற்களைக் காற்றிலே வீசுங்கள்!

ஸ்திரி: தோழர்களே, வாருங்கள்! அழுதுகொண்டே கோட்டையைக் கட்டினோம்—ஆனந்தத்தோடு அதைத் தகர்த்தெறிவோம், வாருங்கள்!

லோரும்: *(கட்டடத்தை நோக்கி ஓடிக்கொண்டு)* உடையுங்கள்! தகருங்கள்! தரைமட்டமாக்குங்கள்!

ரிய வால்டர்: நிலைமை மிஞ்சிவிட்டது! இனிக் கட்டுக்கு அடங்காது!

[மெல்ச்தலும் கோன்ராடும் வருகின்றனர்.]

ல்ச்தல்: இன்னுமா கோட்டையை இடிக்கவில்லை? ஸார்னன் கோட்டையும், ராஸ்பர்க் கோட்டையும் சரிந்து சாம்பலாகிவிட்டனவே!

ரிய வால்டர்: மெல்ச்தலா, அப்பா? வா, வா! விடுதலைச் செய்தி கொண்டுவந்து விட்டாயா? நாடு முழுதும் எதிரிகள் தொலைந்துவிட்டார்களா?

ல்ச்தல்: ஆமாம், ஆமாம்! அதில் என்ன சந்தேகம்! ஒரு கொடுங்கோலன்கூட சுவிஸ் நாட்டில் உயிரோடில்லை.

ரிய வால்டர்: எல்லாக் கோட்டைகளும் எப்படி விழுந்தன? கேட்கத் துடித்துக்கொண் டிருக்கிறோம்!

ல்ச்தல்: என்னவோ எல்லாம் நன்மையாக முடிந்தது; ஸார்னன் கோட்டையை ருடென்ஸ் தகர்த்துத் தீ வைத்து எரித்தார்! ராஸ்பர்க் கோட்டையில் முந்திய நாள் இரவே

நான் ஏறிவிட்டேன். கோட்டைகள் இருந்த இடமெ லாம் கரியும் சாம்பலுமே குவிந்து கிடக்கின்றன! ஆன எல்லாவற்றிலும் அற்புதம்—எரிகிற நெருப்பில் அந் சீமாட்டி பெர்தா—

பெரிய வால்டர்: அவள் பிழைத்திருக்கிருளா?

மெல்ச்தல்: ஸார்னன் கோட்டைக்குள் அவளைக் கவர அடைத்து வைத்திருந்தார். அதை அறியாத ருடென் தாமே கோட்டை மாளிகை எல்லாவற்றிற்கும் தீ வைத் விட்டார். நல்ல வேளையாக ஒரு சிறுவன் ஓடிவந் அவளைப் பற்றிய செய்தியைச் சொன்னுன். நாலு பக்க தீப்பிழம்பு! தலைக்கு மேலே எரிந்த கட்டைகள் விழுந் கொண்டிருந்தன. எதையும் பொருட்படுத்தாமல் உள் பாய்ந்து ருடென்ஸ் அந்த மாதரசியைத் தூக்கி வந்தா நானும் அவருமாக அவளை வெளியேற்றினேம்! அவர் இருவரும் சேமமாயிருக்கிருர்கள்!

பெரிய வால்டர்: ஆண்டவர் மகிமையே மகிமை! உன் த பனர் கண்களை அவித்த சண்டாளன் லாண்டன்பர்க் ஒ தானு?

மெல்ச்தல்: சாகாமல் பிழைத்தவன் அவன் ஒருவன்தா ஓங்கிய வாளுடன், அவன் பிடரியைப் பிடித்துத் தள் வந்து, என் தந்தையின் காலடியில் கிடத்தினேன். அவ மன்னிப்புக் கேட்டுக் கதறி அழுதான்! தந்தையார் கொடு கோலன் செய்ததை நாமும் செய்யக் கூடாதென் சொல்லி, அந்தப் பேய்க்கு உயிர்ப் பிச்சை அளித்துவ டார்! அவனும் நாட்டைவிட்டே ஓடிவிட்டான்! இ இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கமாட்டான்! நம் வாள்க யும் தோள்களையும் அவன் மறக்கமாட்டான்!

பெரிய வால்டர்: இது மகத்தான வெற்றிதான்! இரத் கறையே படியாத வெற்றி!

குழந்தைகள்: *(சாரக் கழிகளைத் தூக்கிப் பிடித்தவண்ணம் மே யில் ஓடிக்கொண்டு)*—விடுதலை! விடுதலை! விடுதலை!

[யூரிக்குரிய கொம்பு முழங்குகின்றது.]

பெரிய வால்டர்: பார், இந்தக் கோலாகலக் காட்சியை! இ நன்னளை எந்த நாளும் மறக்கமாட்டார்கள் குழந்தை

[பெண் குழந்தைகள் ஒரு கழியில் கவர்னர் தொப்பியை மாட்டித் தூக்கிக்கொண்டு வருகின்றனர்; தொடர்ந்து வேறு ஜனங்களும் வருகின்றனர்.]

நவோடி: நம்மை வணங்கவைக்க வந்த தொப்பி வருகிறது!

கோன்ராடு: இதை என்ன செய்யலாம், சொல்லுங்கள்?

பெரிய வால்டர்: கடவுளே! இதே தொப்பியின் அடியிலே தான் என் பேரன் நின்றான்!

பல குரல்கள்: இதை எரித்துப் பஸ்மமாக்க வேண்டும்!

[குழந்தைகளே தொப்பிக்குத் தீ வைத்து எரிக்கிறார்கள். கோட்டையை இடித்த ஜனங்கள் பலர் கூட்டமாக வந்து சுற்றிலும் வளைந்து நிற்கிறார்கள்.]

மெல்ச்தல்: ரூட்லி மகாநாட்டில் செய்த சபதத்தை நிறைவேற்றிவிட்டோம்! இனி சக்கரவர்த்தியே படைகளுடன் வந்தாலும், இந்நாட்டில் நுழைய முடியாது! நாம் அனைவரும் ஒன்றுபட்டு விட்டோம்!

கோன்ராடு: எல்லோரும் ஒரே இனம்! நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்! ஜே சுவிட்ஜர்லந்து!

எல்லோரும்: ஜே!

[ரோஸல்மன் பாதிரியாரும் ஸ்டாபாச்சரும் வருகின்றனர்.]

ரோஸல்மன்: இவைகளெல்லாம் கர்த்தரின் தீர்ப்புக்கள்!

குடியானவர்கள்: என்ன செய்தி?

ஸ்டாபாச்சர்: மேற்கொண்டும் பயமில்லாமல் ஒழிந்தது!

ரோஸல்மன்: சக்கரவர்த்தியே கொலையுண்டு மறைந்து விட்டார்!

எல்லோரும்: (நெருங்கி வந்து) கொலையா? சக்கரவர்த்தியா? என்னது?

மெல்ச்தல்: இருக்காது! யார் வந்து சொன்னார்கள்?

பெரிய வால்டர்: இவ்வளவு கோரமான செயலை யார் செய்தது?

ரோஸல்மன்: திட்டமிட்டு முடித்துவிட்டார்கள்! அவர் சகோதரர் குமாரர் ஜான் கோமகனே காரணம்—அவருக்குச் சக்கரவர்த்தி செய்த துரோகம் உயிருக்கே உலை வைத்துவிட்டது!

மெல்ச்தல் : கொலைகாரர்கள் எங்கே ஓடினார்கள்?

ஸ்டாபாச்சர் : நாலு பக்கமும் சிதறி ஓடினார்களாம்; ஜான் கோமகன் மலைகளில் சுற்றி வருகிறாராம்!

பெரிய வால்டர் : கொலைகாரர்களுக்கு ஒரு பயனுமில்லை! ஆனால் நம் நாட்டுக்கு இனிப் பயமில்லாமல் தீர்ந்தது.

[*ஆலயத் தர்மகர்த்தா பீட்டரும், ஒரு தூதுவனும் வருகின்றனர்.*]

பீட்டர் : ஆஸ்திரிய மகாராணியிடமிருந்து இந்தத் தூதுவர் திருமுகம் கொண்டுவந்திருக்கிறார்!

பலர் : வாங்கி உடைத்துப் பாருங்கள்!

பெரிய வால்டர் : (*திருமுகத்தை வாங்கிப் பிரித்துப் படிக்கிறார்.*) யூரி, சுவிஸ், அந்தர்வால்டன் மகாஜனங்களுக்கு, இராணி எலிஸபெத் அறிவிப்பது—உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாவதாக!

சில குரல்கள் : நல்ல காலத்தில் இல்லாத கருணை இப்போது எங்கிருந்தோ வந்திருக்கிறது!

பெரிய வால்டர் : (*மனத்துக்குள் படித்துக்கொண்டு*) கொலைகாரர்களுக்கு நாம் எவ்வித உதவியும் செய்யக்கூடாது என்று எழுதி யிருக்கிறது!

எல்லோரும் : இனிமேல் நமக்கு ராஜாவுமில்லை; ராணியும் வேண்டாம்!

[*தூதுவன் வெளியேறுகிறான்.*]

ஸ்டாபாச்சர் : இவ்வளவு கூட்டத்திலும் வில்லியம் டெல் எங்கே? நம் சுதந்திரத்திற்கு அடிப்படை அமைத்த அவனைக் காணவில்லையே! வாருங்கள், டெல்லின் வீட்டுக்குப் போய் அவனை வணங்குவோம்! வில்லியம் டெல் நீடூழி வாழ்க!

எல்லோரும் : வாழ்க! வாழ்க!

காட்சி 2

டெல்லுடைய வீட்டில் ஒரு வெளி அறை. கதவு திறந்து கிடக்கின்றது. அறைக்கு அப்பால் உட்புறத்தில் அடுப்பு எரிந்துகொண்டிருக்கின்றது.

ஹெட்விக் : என் செல்வங்களே! இன்றைக்கு உங்கள் அப்பா வந்துவிடுவார்! அவரும் விடுதலையானார்; நாமும்

மெல்ச்தல்: கொலைகாரர்கள் எங்கே ஓடினார்கள்?

ஸ்டாபாச்சர்: நாலு பக்கமும் சிதறி ஓடினார்களாம்; ஜான் கோமகன் மலைகளில் சுற்றி வருகிறாராம்!

பெரிய வால்டர்: கொலைகாரர்களுக்கு ஒரு பயனுமில்லை! ஆனால் நம் நாட்டுக்கு இனிப் பயமில்லாமல் தீர்ந்தது.

[ஆலயத் தர்மகர்த்தா பீட்டரும், ஒரு தூதுவனும் வருகின்றனர்.]

பீட்டர்: ஆஸ்திரிய மகாராணியிடமிருந்து இந்தத் தூதுவர் திருமுகம் கொண்டுவந்திருக்கிறார்!

பலர்: வாங்கி உடைத்துப் பாருங்கள்!

பெரிய வால்டர்: (*திருமுகத்தை வாங்கிப் பிரித்துப் படிக்கிறார்.*) யூரி, சுவிஸ், அந்தர்வால்டன் மகாஜனங்களுக்கு, இராணி எலிஸபெத் அறிவிப்பது—உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாவதாக!

சில குரல்கள்: நல்ல காலத்தில் இல்லாத கருணை இப்போது எங்கிருந்தோ வந்திருக்கிறது!

பெரிய வால்டர்: (*மனத்துக்குள் படித்துக்கொண்டு*) கொலைகாரர்களுக்கு நாம் எவ்வித உதவியும் செய்யக்கூடாது என்று எழுதி யிருக்கிறது!

எல்லோரும்: இனிமேல் நமக்கு ராஜாவுமில்லை; ராணியும் வேண்டாம்!

[*தூதுவன் வெளியேறுகிறான்.*]

ஸ்டாபாச்சர்: இவ்வளவு கூட்டத்திலும் வில்லியம் டெல் எங்கே? நம் சுதந்திரத்திற்கு அடிப்படை அமைத்த அவனைக் காணவில்லையே! வாருங்கள், டெல்லின் வீட்டுக்குப் போய் அவனை வணங்குவோம்! வில்லியம் டெல் நீடூழி வாழ்க!

எல்லோரும்: வாழ்க! வாழ்க!

காட்சி 2

டெல்லுடைய வீட்டில் ஒரு வெளி அறை. கதவு திறந்து கிடக்கின்றது. அறைக்கு அப்பால் உட்புறத்தில் அடுப்பு எரிந்துகொண்டிருக்கின்றது.

ஹெட்விக்: என் செல்வங்களே! இன்றைக்கு உங்கள் அப்பா வந்துவிடுவார்! அவரும் விடுதலையானார்; நாமும்

விடுதலையானேம்; நம் நாடும் விடுதலையாகிவிட்டது! உங்கள் அப்பா, அருமை அப்பாதான் நாட்டையும் காப்பாற்றினர், தெரியுமா உங்களுக்கு ?

ரிய வால்டர்: அப்பா மட்டுமா, அம்மா? வில்லியம் டெல், குஞ்சு வால்டர்—நாங்கள் இரண்டு பேரும் எங்கள் நாட்டைக் காப்பாற்றினேம், அம்மா! அம்பு வரும்போது, நான் அஞ்சினேனு, அசைந்தேனு, ஆடினேனு ? அசைந்திருந்தால், என்ன ஆகியிருக்கும்! என் பேரையும் சேர்த்துத்தான் எல்லோரும் சொல்வார்கள்!

ஹெட்விக்: ஆமாமடா, என் கண்ணு! எல்லாப் பிள்ளைகளும் ஒரு தடவை பிறப்பார்கள்; நீ இரண்டாம் முறை உன் அம்மாவுக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கிருய்! இந்தப் பிள்ளையைப் பார்க்க அப்பா வரப்போகிருர் இப்போது!

[கதவடியில் துறவிக் கோலத்தில் ஒருவர் வந்து நிற்கிருர்.]

வில்லியம்: அம்மா, அதோ பார்! கதவடியில் யாரோ சந்நியாசி நிற்கிருர்—பிச்சைக்காக வந்திருக்கிருர்!

ஹெட்விக்: உள்ளே கூப்பிடு, ஏதாவது பலகாரம் கொடுப்போம்! மகிழ்ச்சியான வேளையில் வந்திருக்கிருர்; அவரும் பசியாறட்டும்.

[உள்ளே போய் ஒரு தட்டில் பலகாரமும் பானமும் கொண்டுவருகிருள்.]

வில்லியம்: பெரியவரே, உள்ளே வாருங்கள்! அம்மா பலகாரம் வைத்திருக்கிருள்!

சிறிய வால்டர்: வாருங்கள், ஐயா! வந்து களைப்பாறுங்கள்!

சந்நியாசி: (திகைப்புடன் சுற்றிப் பார்த்து) நான் எங்கேயிருக்கிறேன்? நான் இப்பொழுது எந்த நாட்டில் இருக்கிறேன்?

சிறிய வால்டர்: அதுவே தெரியவில்லையா? இந்த ஊர் பர்க்லென்—யூரி மாவட்டம்!

சந்நியாசி: (ஹெட்விக்கைப் பார்த்து)—நீ தனியாகவா இருக்கிருய்? உன் கணவர் இங்கில்லையா ?

ஹெட்விக்: அவரை எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறேன். எந்த நிமிஷத்திலும் வந்து விடுவார்! என்ன விஷயம்?

உங்கள் சோகத்தைப் பார்த்தால், நல்ல செய்தி கொண்டு வந்திருப்பதாய்த் தெரியவில்லையே! எதுவாயிருந்தால் என்ன! இந்தாருங்கள், இதைத் தயவு செய்து அருந்துங்கள்!

[கிண்ணத்தை அவரிடம் நீட்டுகிருள்.]

சந்நியாசி: *(அருகில் நெருங்கி)* தாகம் அதிகம்தான்; ஆயினும் நீ ஒரு வாக்குறுதி கொடுத்தால்தான்—

ஹெட்விக்: அருகில் வராமல், எட்டி நின்றே சொல்லுங்கள்

சந்நியாசி: வந்தவர்களுக்கு உணவளிக்கும் அந்த நெருப்பின் மீது ஆணை—இந்தச் செல்வக் குழந்தைகள் மீது—

ஹெட்விக்: சரிதான், சரிதான்! உடைதான் சந்நியாசி உடை—நீங்கள் துறவியே அல்ல! ஏதோ துக்கத்தால் வேஷம் போட்டிருக்கிறீர்கள்!

சந்நியாசி: மனித குலத்திலேயே மகா துக்கமுடையவன் நான்!

ஹெட்விக்: துக்கம் தெரிகிறது; ஆனல் உங்கள் பார்வை பயங்கரமாயிருக்கிறதே!

சிறிய வால்டர்: *(துள்ளியெழுந்து)* அம்மா, அதோ அப்பா *(வெளியே ஓடுகிருன்.)*

ஹெட்விக்: *(கூடப் போகத் தயங்கி நின்று)*—தெய்வமே!

வில்லியம்: நம்முடைய அப்பா!

சிறிய வால்டர்: அப்பா, மீண்டு வந்துவிட்டீர்களா, அப்பா

வில்லியம்: செல்ல அப்பா! முத்து அப்பா!

டெல்: ஆமாம், ஆமாம்! வந்துவிட்டேன்! அம்மா எங்கே?

சிறிய வால்டர்: அதோ கதவடியில் நிற்கிருள். அம்மாவுக்கு ஒரு பக்கம் பயம், ஒரு பக்கம் சந்தோஷம்! மனசு எப்படி யிருக்கும், அப்பா!

டெல்: ஓகோ, அப்படியா! ஹெட்விக்! இனி கவலைப் படாதே! பெற்ற தாயிடமிருந்து பிள்ளைகளைப் பிரிப்பவர்கள் ஒழிந்தார்கள்!

ஹெட்விக் : நாதா ! இத்தனை நாள் நான் பட்ட பாடு! நரக வேதனையைக்கூடத் தாங்கலாம் !

[சந்நியாசி உன்னிப்பாய் அவர்களைக் கவனிக்கிறார்.]

டெல் : அதையெல்லாம் இனி மறந்துவிடு! ஆனந்தமாயிரு! நம் சொந்த வீட்டில் நாம் மறுபடியும் ஒன்றுகூடிவிட்டோமே !

வில்லியம் : ஆனால், அப்பா, உன் பெட்டி - வில்லைக் காணவில்லையே! எங்கே வைத்துவிட்டாய் ?

டெல் : இனி அதைக் காண முடியாது! புனிதமான ஓரிடத்தில் அதைப் பதுக்கி வைத்துவிட்டேன்! இனி வில்லும் இல்லை, வேட்டையும் இல்லை !

ஹெட்விக் : (பதறிக்கொண்டு) ஓ நாதா! நாதா!

டெல் : ஏன் பதறுகிறாய், ஹெட்விக் !

ஹெட்விக் : அந்தக் கை—அதை நான் மறுபடி தீண்டவே கூச்சமாயிருக்கும் !

டெல் : இந்தக் கைதான் உங்களையும், நாட்டையும் காத்தகை! தைரியமாக அதைத் தூக்கி ஆண்டவரை வணங்குகிறேன்!

[சந்நியாசி திடுக்கிட்டுத் திரும்புகிறார்.]

இந்தச் சகோதரர் யார் ?

ஹெட்விக் : நீங்களே அவரை விசாரியுங்கள்! அவரைப் பார்க்கவே எனக்குப் பயமாயிருக்கிறது !

சந்நியாசி : நீர்தானே டெல் ?...கவர்னரை வீழ்த்திய டெல் ?

டெல் : ஆமாம், யாரிடமும் அதை நான் மறைக்க மாட்டேன்! நான்தான் அவன் !

சந்நியாசி : நல்ல வேளையாகக் கடவுள் என்னை உம்மிடம் அனுப்பி வைத்திருக்கிறார் ! உம்மைத் தேடியே நான் வந்துள்ளேன் !

டெல் : நீர் துறவியல்ல—முதலில் உண்மையைச் சொல்லும்.

சந்நியாசி : உம்மைக் கொடுமைப்படுத்திய கொடுங்கோலனை நீர் வீழ்த்திவிட்டீர் ! எனக்கு அநீதி இழைத்த எதிரியை வீழ்த்திவிட்டு நானும் வந்திருக்கிறேன் !

டெல்: (சற்றுப் பின்வாங்கி) நீரா—பயங்கரம்! குழந்தைகளே உள்ளே போங்கள்! ஹெட்விக், சற்று உள்ளே போ!.. நீர்தான்—

ஹெட்விக்: யார் இவர்? கடவுளே, இதென்ன மாயம்!

டெல்: எல்லோரும் ஒதுங்கிச் செல்லுங்கள்! ஒரேயிடத்தில் நீங்கள் இவரோடு நிற்கவும் கூடாது!

[ஹெட்விக்கும் குழந்தைகளும் வெளியே போகின்றனர்.]

டெல்: ஆஸ்திரியக் கோமகன்தானே நீர்? தந்தையுடன் பிறந்தவரையே—சக்கரவர்த்தியையே—கொலை செய்து விட்டீரா?

சந்நியாசி: ஆம்! என் உரிமையையும் உடைமைகளையும் பறித்தவரை வேறு என்ன செய்வது?

டெல்: மகா பாவம்! பூமி இன்னும் உம்மைத் தாங்கி நிற்கிறதே! சூரியன் ஒளியும் உம்மீது படலாமா?

சந்நியாசி: நீராவது என்னிடம் இரக்கம் காட்டுவீர் என்று வந்தேன். நீரும் உமது பகைவரைப் பழி வாங்கவில்லையா?

டெல்: அதிர்ஷ்டங் கெட்ட மனிதரே, கேளும்! மண்ணாசை கொண்டு நீர் செய்தது மகா பாதகம்! என் குழந்தை தலையையும், என் வீட்டையும், நாட்டையும் காக்க நான் பாணம் தொடுத்தேன்! என் நெஞ்சம் களங்கமற்றது. என் கைகள் கறைகளற்றவை! நீர் செய்தது பச்சைக் கொலை; நான் செய்தது இந்தப் பூமியில் என் உயிருக்குப் புனிதமானவைகளை யெல்லாம் பாதுகாக்க!

சந்நியாசி: அப்படியானால், என்னை வெளியேதான் விரட்டப் போகிறீரோ?

டெல்: உம்மிடம் பேசும்போது என் ஆன்மாவே நடுங்குகிறது! உமது பயங்கரப் பாதையிலே நீர் செல்லும்! இது ஒரு பாவமும் அறியாத ஏழைக் குடிசை! இங்கே உம்மைப் போன்றவர்களுக்கு இடமில்லை!

சந்நியாசி: இனி நானும் அதிக நாள் ஜீவிக்கமாட்டேன்! ஜீவித்திருக்கவும் கூடாது!

டெல்: என்ன இருந்தாலும் உம்மிடம் இரக்கப் படுகிறேன்! பரமண்டலத்திலுள்ள பகவான்தான் உம்மைக் காக்க வேண்டும்! இளம் வயது, இராஜ வம்சம்—இந்தக் கதியா வரவேண்டும்? எல்லாம் அவன் செயல்!—உமக்கு உடந்தையா யிருந்த கொலைகாரர்கள் எங்கே?

சந்நியாசி: எங்கே என்றுதான் நானும் கேட்கிறேன். அந்தப் பயங்கரம் நடந்த நாள் முதல் நானும் அவர்களில் யாரையும் சந்திக்கவில்லை. எந்தெந்தக் காடுகளில் திரிகிறார்களோ, தெரியாது...நான் எங்குப் போனாலும் அச்சமாயிருக்கிறது. மக்கள் வாழும் இடங்களுக்குச் சென்றால், எவரும் என்னைப் பிடித்துக் கொடுக்க முடியும்! மலைகளும் மேடுகளுமாக அலைகிறேன்! என் நிழலே என்னைப் பயமுறுத்தித் துரத்துகிறது! என்னை நீர்தான் காக்கவேண்டும்!

[முழங்கால் படிந்து விழுகிறார்.]

டெல்: (கை கொடுத்து எழுப்பி) என் உள்ளமும் உருகி நிற்கிறது. எனக்கு ஒரே யோசனைதான் தோன்றுகிறது—அதுவும் இந்த நேரத்தில் ஆண்டவன் அருளால் உதயமாகிறது—நீர் நேரே ரோமாபுரிக்குப் போய்ப் போப் ஆண்டவரிடம் சரணடைவதே நல்லது! அதோ தெரியும் மலையைத் தாண்டினால், அப்புறம் சமவெளியுள்ளது. அங்கிருந்து பாதையைக் கண்டுபிடித்துச் செல்லும். பாதை நெடுகிலும் சிலுவைகளைக் கண்ட இடங்களிலெல்லாம் விழுந்து பணிந்து, இந்தப் பாவத்திற்கு ஆண்டவனிடம் மன்னிப்புக் கோரிக்கொண்டே செல்லும்! நெஞ்சு நிம்மதி யடையட்டும்!

[பல கொம்புகள் ஊதும் ஒலியும் மக்களின் பாடலும் ஒலிக்கின்றன.]

ஜனங்கள் வருகிறார்கள்! சீக்கிரம் புறப்படும்!

ஹெட்விக்: (உள்ளே ஓடிவந்து) டெல், டெல்! என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்! அதோ அப்பா வருகிறார், ஜனங்களும் கூட்டமாக வருகிறார்கள்!

டெல்: ஹெட்விக், ஹெட்விக்! சீக்கிரமாக உள்ளே போய் இவருக்கு உண்பதற்கு ஏதாவது கட்டிக்கொடு! யார், எங்கே போகிறார் என்றெல்லாம் கேளாதே!

[வீட்டுக்கு முன் பக்கமாய்ப் போகிறான்.]

காட்சி 3

டெல்லுடைய வீட்டுக்கு முன்புறம் பள்ளத்தாக்கு. குடியானவர்களின் பெருங்கூட்டம். பெரிய வால்டர் இரு கரங்களில் இரண்டு பேரப்பிள்ளைகளைப் பிடித்துக் கொண்டு, மெல்ச்தல், ஸ்டாபாச்சருடன் முன்னணிக்கு வருகிறார். குழந்தைகள் பலர், 'வாழ்க டெல்லின் நாமம், வாழ்க வாழ்கவே! வீழ்க கொடுமை யெல்லாம் வீழ்க வீழ்கவே!' என்று பாடிக்கொண் டிருக்கின்றனர். டெல் வீட்டுப் பக்கத்திலிருந்து நடந்து வந்ததும், முன்னால் நின்ற பலர் ஒவ்வொருவராக அவனைக் கட்டித் தழுவுகின்றனர்.

எல்லோரும்: வில்லாளன் வாழ்க! வில்லியம் டெல் வாழ்க! வாழ்க, வாழ்க!

[ருடென்ஸும் பெர்தாவும் வருகிறார்கள்; வந்ததும் ஹெட்விக்கைப் பாராட்டிவிட்டு, மற்றக் குடியானவர்களையும் பாராட்டுகின்றனர்.]

பெர்தா: தாய்நாட்டைக் காத்த வீரர்களே! தோழர்களே! யாவருக்கும் என் வணக்கம்! செல்வச் சீமாட்டியாயிருந்த என்னையும் உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள்! என் உள்ளம் எப்போதும் உங்களுடனேயே இருந்தது என்பதை ஆண்டவரும் நீங்களும் அறிவீர்கள்! என்னைக் காத்து, நம் அருமைத் தாயகத்தையும் விடுதலை செய்ததில் இதோ அருகில் இருக்கும் நண்பரும் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார்!

[ருடென்ஸைச் சுட்டிக் காட்டுகிறாள். ஜனங்களின் கரகோஷம்.]

இந்த வீரருக்கே என்னை அர்ப்பணம் செய்கிறேன்! என் உடைமைகளெல்லாம் இனி இவருடையவை! சுதந்திரக் கனவானுக்குச் சுதந்திர நாட்டில் நான் மாலையிடுவதில் நீங்களும் மகிழ்வீர்கள்!

[கரகோஷம்.]

ருடென்ஸ்: எண்ணத் தொலையாத என் இனிய பொழில்களிலும், நெடிய வயல்களிலும், வேலை செய்யும் என் குடியானவ மக்கள் அனைவரும் இனிச் சுதந்திரர்கள்-சுதந்திரமாகப் பயிர் செய்து வாழும்படி யாவற்றையும் இப்போதே வழங்குகின்றேன்!

குழந்தைகள்: வாழ்க டெல்லின் நாமம், வாழ்க, வாழ்கவே! வீழ்க கொடுமையெல்லாம், வீழ்க, வீழ்கவே!